கல்கி

KALKI
28.12.86
ரூ. 1.50



கம்ப்யூட்டர்கள்:
தோட்டம் முதல் தொழிற்சாலை வரை!

கம்ப்யூட்டர் சிறப்பிதழ் கம்ப்யூட்டர் சிறப்பிதழ் கம்ப்யூட்டர் சிறப்பிதழ் கம்ப்யூ



ச்செக்ஸ், ஸ்ரைப்ஸ் மற்றும் டெக்ஸ்சர்ஸ். மாதந் தோறும் நூற்றுக்கும் மேலான டிஸைன்கள்.

எக்ஸிக்யூட்டிவ் கலெக்ஷனிலிருந்து ஷர்ட்டிங்குகள்

பாம்பே டையிங்

அமரர் **கல்கி** எழுதிய

பொன்னியின் செல்வன்

மகத்தான
சரித்திரத்
தொடர் கதை



கல்கி 1987 ஜனவரி 11உ

பொங்கல் சிறப்பிதழில் ஆரம்பமாகிறது

கம்ப்யூட்டர் சிப்ஸ்




கம்ப்யூட்டர் ஜாதகம்

அபிராமபுரத்தில் கௌசிகன் என்ற ஜோதிடரும் நரேந்திரன் என்ற கம்ப்யூட்டர் என்ஜினியரும் சேர்ந்து கம்ப்யூட்டரில் ஜாதகக் கணிப்பு, ஜாதகப் பொருத்தம் செய்கின்றனர். பிறந்த தேதி, நேரம், இடம் மூன்று விவரங்களையும் தந்தால் கம்ப்யூட்டர் ஜாதகத்தை அழகாகப் பிரிண்ட் செய்து தந்துவிடுகிறது. கம்ப்யூட்டர் மிகத் துல்லியமாக ஜாதகப் பொருத்தங்களைக் கணக்கிட்டுச் சொல்வதாக ஜோதிடர் காழியூர் நாராயணன் சொல்கிறார்: கம்ப்யூட்டர் மூலம் ஜாதகப் பொருத்தம் பார்த்துத்திருமணம்செய்து கொண்ட அமர்நாத்—வரலட்சுமியைச் சந்தித்தபோது "ஜாதகம் பார்ப்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு; அதேசமயம் விஞ்ஞான பூர்வமாகவும் எதையும் செய்ய வேண்டும் என்ற கொள்கை உண்டு. இரண்டையும் இணைக்க முடிந்ததில் மகிழ்ச்சி. எங்கள் வாழ்க்கையும் சந்தோஷமாகவே இருக்கிறது" என்றனர்.

படிக்கும் கம்ப்யூட்டர்

எழுதியிருப்பதைக் குரல் வடிவில் மாற்றி ஒலிக்கச் செய்யக் கூடிய ஒரு கம்ப்யூட்டரை ஓர் ஆஸ்திரேலிய விஞ்ஞானி வடிவமைத்திருக்கிறார்.

சிறிய காமிரா, கம்ப்யூட்டர், ஒலிபெருக்கி இவை இணைந்த கருவி இது. சில



விநாடிகளுக்குள் ஒவ்வொரு எழுத்தாகக் காமிரா பார்த்துக் கொண்டே வர, கம்ப்யூட்டர் அதை ஒலி வடிவங்களாக மாற்றி, ஒலிபெருக்கி மூலம் படித்துக் காட்டுகிறது! பார்வையற்றோருக்கு ரொம்ப வசதி. வரப்பிரசாதம்!

பதினாறு வயது மேதை!

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் பற்றிய ஒரு கருத்தரங்கம். பெரிய பெரிய புகழ் பெற்ற விஞ்ஞானிகளுக்கிடையில் ஒரு பதினாறு வயதுப் பையனும் தனது கட்டுரையைப் படித்தான். படேபடே விஞ்ஞானிகளுக்கு ஒரே வியப்பு-பையனுக்கு 16 வயதுதான் என்பதால் மட்டுமல்ல; அவன் படித்த கட்டுரை அத்துணை சிறப்பாகவும் அமைந்திருந்ததால்தான்! அந்த இளைஞன் பெயர் நிரஞ்சன். பெங்களூர்வாசி. இத்தனை புத்திசாலியான சிறுவனைச் சிங்கப்பூர் கருத்தரங்குக்கு அனுப்புவதற்குள் அவன் தந்தைபட்டபாடு சொல்லித் தரமன்று. அவருக்குப் பண வசதியில்லை. பல சமூக சேவை நிறுவனங்களில் கேட்டுப் பயனில்லை. விமான நிறுவனம் இலவச டிக்கெட் தர மறுத்துவிட்டது. கடைசியில் பையனின் திறமை உணர்ந்து தகப்பனுக்கு உதவ முன் வந்தது சென்னை ரெடிமனி நிறுவனம்தான். இப்போது பெங்களூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் இரண்டாம் வருஷம் ப்ரீ டிகிரி மாணவனாக உள்ள நிரஞ்சன் மேல் படிப்புக்கு அமெரிக்கா போக விரும்புகிறான். அதற்கு அவன் தந்தை இன்னும் எத்தனை பாடுபட வேண்டுமோ!

வங்கியில் கம்ப்யூட்டர்

ஒரு காசோலையைக்



காசாக்க அதிகபட்சம் ஐந்து நிமிடம் என்று அரசு நிர்ணயித்துள்ளது. எங்கே நடக்கிறது? ஆனால் சென்னை பெசண்ட் நகர் பாங்க் ஆஃப் மதுரையில் நாற்பதே செகண்டுகளில் பணத்துடன் வெளியே வந்து விடுகிறார், வாடிக்கையாளர்! காரணம் கம்ப்யூட்டர்தான். டிரையல் பாலன்ஸ் உள்படப் பலவிதமான வங்கி நடைமுறைகளுக்கும் இந்தக் கம்ப்யூட்டர் இனை, கம்ப்யூட்டரையே பயன்படுத்தி வருகிறது. டிரையல் பாலன்ஸைத் தினசரி செய்கிறது கம்ப்யூட்டர். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாரம் ஒருமுறைதான் செய்கிறார்கள்!

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கம்ப்யூட்டர் எந்த அளவுக்கு மூக்கை நுழைத்திருக்கிறது? சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியாவில் விசாரித்தபோது, 'இப்போதைக்குக் கம்ப்யூட்டர் ஏதுமில்லை. ஆனால் மின்சாரக் கணக்கு இயந்திரங்களை கரண்ட் அக்கவுண்ட் விஷயத்தில் மட்டும் உபயோகிக்கிறோம்' என்றார்கள்.

சுட்டிப்பெண் சிவகாமி


பெங்களூர் நிரஞ்சன் அளவுக்கு இல்லாவிட்டாலும் சென்னைச் சிறுமி சிவகாமியும் படு சுட்டிதான்! எட்டாம் வயதிலேயே பேஸிக் தேர்ச்சி. அப்புறம் கோபால், போர்ட்ரான் எல்லாம் முடித்தாகிவிட்டது. இப்போது பிளஸ் ஒன் மாணவி. இவர் அறிந்தது நாலாவது தலைமுறை கம்ப்யூட்டர். 'இப்போது அடுத்த தலைமுறை அறிமுகமாகிவிட்டது, எனவே தொடர்ந்து பழகிக்கொண்டே இருக்கும் வரைதான் முதலிடத்தில் இருக்கலாம். தொடர்பு விட்டுப் போனால் ரொம்ப சிரமம்' என்கிறார் சிவகாமி.



• சிவகாமி

கல்கியிலும் கம்ப்யூட்டர்

பத்திரிகைத் துறையில் கம்ப்யூட்டர் புகுந்து சக்கைப் போடு போடுகிறது. போட்டோ டைப் செட்டிங் என்ற அச்சுக் கோக்கும் முறை அச்சுத் தொழிலையே புரட்சிகரமாக மாற்றிவிட்டது. உலோக எழுத்துக்களால் அச்சுக் கோக்கும் முறை எதிர்காலத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். போட்டோ டைப் செட்டிங்கில்... கம்ப்யூட்டர் டெர்மினல்களும் மெமரி யூனிட்டும் பிரதானம். கல்கி நிறுவனம் உள்படப் பல பத்திரிகைகள் இப்போது இதனை அவரவருக்கு ஏற்ற வடிவில் பயன்படுத்துகின்றன. மேலும் ஏஜெண்டுகள், விளம்பர நிறுவனங்களுடன் கணக்குத் தொடர்பு கொள்ளவும் இதர கணக்கு வழக்குகளுக்கும் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்படுகிறது. 'ஹிந்து' பத்திரிகையில் மற்றும் ஒரு புதுமையைப் புகுத்தியிருக்கிறார்கள். டில்லியில் ஜி.கே. ரெட்டி ஒரு செய்திக் கட்டுரையை கம்ப்யூட்டர் டெர்மினலில் உட்கார்ந்து டைப் செய்தால் அது, அதே விநாடியில் சென்னையிலும் அச்சுக் கோக்கப்பட்டு



• நாற்பது நிமிடங்களில் கலர் போட்டோ



• நாற்பது விநாடிகள்தான் ஆகும்.

விடும்! இதனைச் செயற்கைக் கோள் உதவியுடன் சாதிக்கிறார்கள். முதலில் டெலக்ஸில் செய்தியை அனுப்பித் திரும்பவும் இங்கே அச்சுக் கோக்கிற விவகாரம் இல்லை. வேலையும் நேரமும் பாதியாகக் குறைந்து போகிறது!

சினிமாவில்....

டப்பிங், ரீ ரிகார்டிங், எடிட்டிங் போன்ற டெக்னிகல் விஷயங்களில் கம்ப்யூட்டர்தான் ஹீரோ. ஏவி.எம். நிறுவனத்தில் 'மாக்னடிக் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் டப்பிங் சிஸ்டம்' நிறுவப்பட்டுள்ளது. "ஒரு மனிதனின் கதை" வீடியோ படத்தின் எடிட்டிங் முற்றிலும் கம்ப்யூட்டரின் உதவியுடன் செய்யப்பட்டதுதான்" என்கிறார் எம்.எஸ். குகன்.

இந்தியாவிலேயே முதன் முதலாகக் கம்ப்யூட்டர் இசையை சினிமாவில் பயன்படுத்திய பெருமை இளையராஜாவுக்கு உண்டு. இதற்காக சிங்கப்பூர் சென்று பயிற்சியும் பெற்றார். ஏராளமான இசைக் கருவிகளின் இசையைக் கொண்ட ஸாஃப்ட்வேர் புரோக்கிராம்களை யமஹா நிறுவனம் தயாரித்துள்ளது. இதை உபயோகித்துத்தான் புன்னகை மன்னன் படத்துக்கு இசையமைத்தார் இளையராஜா. இருபது, முப்பது வாத்தியக் கலைஞர்கள் செய்ய வேண்டிய பணியை ஒரே ஒரு கம்ப்யூட்டர் எலெக்ட்ரானிக் இசைச் சாதனம் நிறைவேற்றி விடும்!

பழசு, ரொம்பப் பழசு

சென்னையிலேயே, இல்லை, உலகிலேயே மிகப் பழைய கம்ப்யூட்டர் ஒன்று சென்னையில்தான் இருக்கிறது. ராயபுரம் கிளைவ் பாட்டரி வளாகத்தில் உள்ளது. கரையிலிருந்து எதிரிக் கப்பல்கள் மீது குண்டு வீச வேணுமானால் தூரத்தை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்தப் பழைய மாடல் கம்ப்யூட்டர் நாற்பது வருஷங்களுக்கு முற்பட்டது!



• படிக்கும் கம்ப்யூட்டர்

40 நிமிடங்களில் வண்ணப்படம்

காமிராவைக் கிளிக் செய்து நாற்பது நிமிஷங்களில் வண்ணப் புகைப் படங்கள் ரெடி! அது மட்டுமா? வண்ணப் படம் அபூர்வமாய் இருந்த நிலை மாறி, ரொம்ப காஸ்ட்லியாக இருந்த நிலையும் மாறி, இன்று இரண்டு ரூபாய்க்குத் தண்ணீர் பட்டபாடு! எப்படி சாத்தியமானது? மத்திய அரசு இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதும் கம்ப்யூட்டருடன் இணைந்து இயங்கும் ஜப்பானிய டெவலப்பிங் — பிரிண்டிங் சாதனங்கள் இங்கு வந்து இறங்கியதும் தான் காரணம்.

குடிசைப் பகுதியிலும் கம்ப்யூட்டர்

எல்லாரும் ஜோராய் ஒரு தடவை கைதட்டுங்கள்! தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆரம்பித்துள்ள ஒரு நற்பணிக்காகத்தான். முதல் தடவையாகக் குடிசை வாழ் மக்களின் வாரிசுகளுக்கும் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தியிருக்கிறார் வாரியத் தலைவர் அங்கமுத்து. மாலைக் கல்லூரியில் டிகிரி படிப்பவர்கள் அஞ்சல் வழி கல்வி பெறுகிறவர்கள் ஆகியோருக்கு நேர்முகத் தேர்வு நடத்தி நூறு பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கம்ப்யூட்டர் பயிற்சி தரப்படுகிறது. தினமும் வகுப்பு நடக்கிறது.

என்.ஐ.ஐ.டி.

கம்ப்யூட்டர் பயிற்சி அளிப்பதில் முதலிடம் வகிப்பதாக இந்த நிறுவனத்தைக் கருதலாம். நாஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்பர்மேஷன் டெக்னாலஜி என்ற அமைப்பின் சென்னை வட்டார மேலாளர், அரவிந்த் தாகூர். "நாங்கள் பின்பற்றுகிற பாடமுறை மிச்சிகன் பல்கலைக்கழகம் வகுத்தது. ஒரு கம்ப்யூட்டருக்கு இரண்டு மாணவர்கள். இரண்டு பேர் பாட வகுப்பில் இருந்தால் இரண்டு பேர் கம்ப்யூட்டர் கருவியைக் கையாள வேண்டும். வகுப்பு அறை, கம்ப்யூட்டர் அறை, ப்ராஜெக்ட் அறை என்று மூன்று பகுதிகள். 12 கம்ப்யூட்டர்கள், எனவே 24 மாணவர்கள் பாட வகுப்பிலும் கம்ப்யூட்டர் அறையிலும் ஒரே சமயத்தில் பயிற்சி பெற முடியும். இவை தவிர வீட்டுப் பாடமும் உண்டு!" என்கிறார் தாகூர். இதில் சேரக் கெடுபிடி அதிகம். வடிகட்டிப் பார்த்துதான் சேர்த்துக் கொள்கிறார்கள். சேர்ந்து விட்டாலோ 'டிரில்' வாங்குகிற பயிற்சிகள். கட்டணமும் அதற்கேற்ப அதிகம்தான். ஆனால் ஒரு டி.வி. வாங்குகிற செலவில் வேலை வாய்ப்பை உறுதி செய்கிறார்களே!

— நமது நிருபர்கள்


புகைப்படம்: யோகா

அடுத்த இதழில்...

சுஹாசினி சினிமாவைக் கொஞ்சம் மறந்தபோது...

— அட்டைப்படப் பேட்டி கட்டுரை





— ஆத்மாஸ்



டாக்டர் சுப்பிரமணியம்

கம்ப்யூட்டரை நம்பினோர் கைவிடப்படார்?

பகலெல்லாம் கடுமையாக உழைத்து விட்டுக் களைப்புடன் வீடு திரும்பும் பெண்மணிக்கு இரவுச் சாப்பாட்டுக்கு என்ன சமைக்கலாம் என்று யோசிக்கக் கூடத் தெம்பில்லை. கம்ப்யூட்டரைத்தான் கேட்கிறாள். கம்ப்யூட்டர் திரையில் உடனே ஃப்ரிஜ்ஜின் வரைபடம் தோன்றி வீட்டில் என்னென்ன பொருட்கள் உள்ளன என்று காண்பிக்கிறது. பிறகு, இதை இதை உபயோகித்து இன்னின்னது செய்தால் ஊட்டச் சத்து அதிகம் கிடைப்பதோடு செலவும் குறைவு என்று சொல்கிறது! இது நடப்பது ஜெர்மனியில்.

ஒரு வீட்டை எப்படிக் கட்டலாம் என்றும் கட்டிய வீட்டில் எந்தெந்த இடத்தில் என்னென்ன வர்ணம் தீட்டலாம் என்றும் சில விநாடிகளுக்குள் தீர்மானித்துச் சொல்லி விடுகிறது கம்ப்யூட்டர்.

கம்ப்யூட்டர் பற்றிய பாட நூல்கள் எழுதியிருப்பதோடு கம்ப்யூட்டர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிடியூட் என்ற பயிற்சி நிலையத்தையும் நடத்தி வருகிறார் டாக்டர் என். சுப்ரமணியம். உலகின் பல பகுதிகளிலும் தமது ஆய்வுக் கட்டுரைகளைப் படித்துப் புகழ் பெற்றிருக்கிறார். இந்தியாவிலுள்ள தலைசிறந்த பத்து கம்ப்யூட்டர் பயிற்சி நிலையங்களுள் இவருடையதும் ஒன்று என்று கம்ப்யூட்டர் டுடே பத்திரிகையின் ஆய்வு தீர்மானித்திருக்கிறது. இந்தக் கட்டுரை டாக்டர் சுப்பிரமணியம் கூறிய தகவல்களின் அடிப்படையில் எழுதப் பெற்றது.

கம்ப்யூட்டர், ஆரம்பத்தில் வெறும் கணக்குப் போடும் மிஷினாகத்தான் இருந்தது. இதன் பூர்வீகம் சைனா என்று கூடச் சொல்லலாம். மணிகளைச் சரம் சரமாகக் கோத்து அவற்றின் துணை கொண்டு பெரிய கணக்குகளைக் கூட எளிதில் போடும் ஒரு கருவி கி.மு. 450 லேயே சைனாவில் உபயோகிக்கப்பட்டது. அபாகஸ் (**Abacus**) என்ற இந்தக் கருவியை கம்ப்யூட்டருக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி எனலாம்.

கம்ப்யூட்டரின் தந்தை என்று அழைக்கப்படுகிறவர் சார்ல்ஸ் பாபேஜ். இந்த ஆங்கிலப் பேராசிரியர்தான் கம்ப்யூட்டரின் முன்னோடியான **differential machine** ஐக் கண்டுபிடித்தவர். இவரது முயற்சிகளைப் பரிகசித்து. இவரை ஊக்குவிக்க மறுத்தது அன்றைய சமுதாயம். அடா என்ற பெண்மணியின் ஊக்கத்துடன் இவர் தமது ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். 'அடா' என்ற பெயரில் இன்றைக்கு ஒரு கம்ப்யூட்டர் மொழி கூட இருக்கிறது.

ஹாவர்ட் அய்க்கன் என்பவர்தான் ஐ.பி.எம். நிறுவனத்தின் தூண்டுதலின் பேரில் மின்சாரத்தில் இயங்கும் ஒரு **general purpose** கம்ப்யூட்டரை உருவாக்கினார். இந்த ராட்சஸ கம்ப்யூட்டர் பதினைந்து மீட்டர் நீளம் இருந்தது! இதில் பயன்படுத்தப்பட்ட ஒயர்களின் மொத்த நீளம் சுமார் எண்ணூறு கி. மீ! 1948 இல் உருவாக்கப்பட்ட இந்தக் கம்ப்யூட்டரின் பெயர் மார்க்–I



• சார்லஸ் பாபேஜ்


இதைக் கொண்டு ஒரு இருபது இலக்க எண்ணை மற்றொரு இருபது இலக்க எண்ணால் ஐந்தே விநாடிகளில் பெருக்க முடிந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு சாதாரண கால்குலேட்டர் கூட இதைக் காட்டிலும் வேகமாகச் செயல்படுகிறது! எதிர்காலக் கம்ப்யூட்டர்கள் என்னென்ன செய்யும் என்பதை நம்மால் இப்போது கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது!

இந்தியா, கம்ப்யூட்டர் துறையில் முன்னேற வெகு நாட்களாகும். ஒரு வருடத்துக்கு நம் நாட்டில் நாலாயிரம் கம்ப்யூட்டர்கள் மட்டுமே விற்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இந்த எண்ணிக்கை பத்தாயிரமாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். கம்ப்யூட்டர்களின் விலை, இப்போது குறைந்து வருவதால் அவை பிரபலமாகி வருகின்றன. ஆனால் நாம் போக வேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது.

கம்ப்யூட்டர்கள் உபயோகிப்பதால் சில தீமைகளும் விளைகின்றன.

இவற்றுள் முக்கியமானது நாம் கம்ப்யூட்டரை அதிகம் சார்ந்திருக்க ஆரம்பிக்கிறோம் என்பதுதான். தவறுகள் நேரக்கூடும் என்ற ஜாக்கிரதையுணர்வுடன்தான் எப்போதும் செயல்பட வேண்டும். கம்ப்யூட்டரைக் கடவுளாக்கி முழுக்க முழுக்க நம்பி, ஏமாந்து விடக் கூடாது. சில சமயம் அது நம்மைக் கைவிட்டு விடும்!

உதாரணத்துக்கு ஒரு சம்பவம்: அமெரிக்காவில் கம்ப்யூட்டர் மூலமாக வங்கிக்குத் தகவல் தெரிவித்து நமது சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மற்றொரு கணக்கிற்கு மாற்றும்படி செய்து கொள்ள வசதி இருக்கிறது. இதற்கு கம்ப்யூட்டரிடம் சங்கேத மொழியில் அளிக்கும் குறிப்புகளை வேறொருவர் அறிந்து



• அபாகஸ்

கொண்டால் எளிதில் இடை புகுந்து நம் பணத்தை அவர் தம் கணக்கிற்கு மாற்றிக் கொண்டு விடலாம்! இப்படி வெகு நாட்களுக்குச் செய்து வங்கியையும் வாடிக்கையாளரையும் ஏமாற்றிய ஒருவர் பிடிபட்டார்:- அப்படிப் பிடிபட்டவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல், அவருடைய அறிவை மெச்சி அவரை அந்த வங்கியே வேலைக்கு அமர்த்திக் கொண்டது!

சந்திப்பு: **சிக்கி**

மேலட்டையில்: அனுராதா, விஜயலட்சுமி ஆகியோருக்குக் கம்ப்யூட்டரின் செயல்பாட்டினை விளக்குகிறார் டாக்டர் சுப்பிரமணியம். வண்ணப்படம்,

புகைப்படம்: **உத்ரா**

புதுக் கவிதைப் போட்டி-9

சமீபத்தில் நடந்த 'சார்க்' மாநாடு பற்றிய தகவல் துணுக்கு ஒன்று 4.1.87 கல்கி இதழில் இடம் பெறவுள்ளது. சிந்தனையைத் தூண்டவல்ல இத்துணுக்கின் அடிப்படையில் பிளஸ் டூ மற்றும் கல்லூரி மாணவர்கள் ஒரு புதுக் கவிதை எழுதியனுப்பலாம்.

* போஸ்ட் கார்டின் ஒரு பக்கத்தில் எட்டு — பத்து வரிகளுக்குள் கவிதை அடங்க வேண்டும்.
* கார்டின் மறுபக்கத்தில் பள்ளி அல்லது கல்லூரியின் முத்திரையைப் பெற வேண்டும்.
* உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி, கவிதைகளை 12.1.87 க்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
* விலாசப் பகுதியில் புதுக் கவிதைப் போட்டி — 9 என்று கட்டாயம் குறிப்பிடவும்.

முதல் பரிசு ரூ. 100/—

இரண்டாம் பரிசு ரூ. 25/— தவிர ஆறு மாதங்களுக்குக் கல்கி இலவசம்.

தவிர, பிரசுரமாகும் அனைத்துக் கவிதைகளுக்கும் சன்மானம் உண்டு.




வெற்றி! எனக்குத்தான் வெற்றி!
நம்பிக்கையில்லாத் தீர்மானம்
பிச்சைக்காரக் காசு நாலு கோடி ரூபா செலவிலே எழுபத்தஞ்சு அடி உயரத்துல நல்லாயுண்டு வள்ளுவர் சிலை, கன்னியா குமரியிலே!..
கண்ணப்பா, கொஞ்சம் இணங்கி வா..
என் ராசா, கொஞ்சம் ஒட்டுக் கொடு!
அடேடங்கப்பா, எவ்ளோ பெரிய சிலை!



கல்கி

1986 டிசம்பர் 28
மலர் 45 இதழ் 22
அக்ஷய மார்கழி 13



ராஜாஜி சொன்னதைக் கேளுங்கள்!

ராஜாஜி கூறிய அறிவுரைகள் பெரும்பாலும் அவை கூறப்பட்ட போது ஏற்கப் பட்டதில்லை. ஆனால் காலப்போக்கில் சத்திய ஒளி குன்றாத அந்த அறிவுரைகள் நடைமுறைக்கு வந்துவிடும். அப்போது வேறு யாரோ அக்கொள்கையை அமுல்படுத்திய பெருமையைத் தட்டிக் கொண்டு போவார்! போகட்டும். ராஜாஜிக்குப் புதிய பெருமைகள் ஏதும் தேவையில்லை. அவர் கொள்கைகள் ஏற்கப்பட்டு, நாடு நலன் பெறுவதிலேயே நாம் திருப்தி அடையலாம். அவரது நினைவு நாளில் மனநிறைவும் பெறலாம்.

'ஒரு பூவிலிருந்து தேனீ எப்படி மதுவைச் சேகரிக்கிறதோ, அப்படி மக்களுக்குத் துன்பமில்லாத வகையில் வரி வசூலிக்கப்பட வேண்டும்' என்பார் ராஜாஜி. 'வரிச் சுமை அதிகரித்தால் அது வழிப்பறிக்கு ஒப்பாகும்' என்று அடிக்கடி கூறி, திருக்குறளையும் மேற்கோள் காட்டுவார். ராஜீவ் ஆட்சியில் தற்போது இந்த உண்மை உணரப்பட்டு, நிதி அமைச்சர் வி. பி. சிங், பல்வேறு வரிகளைக் குறைத்துள்ளார். மேலும் குறைக்கவும் வரி விதிப்பு முறைகளை எளிமைப்படுத்தவும் திட்டங்கள் வகுத்துள்ளார். இதனால் ராஜாஜி சொன்னது போலவே வரி ஏய்ப்பு குறைந்து, வரி வசூலும் அதிகரித்துள்ளது!

சமீபத்தில் பர்மிட் லைசென்ஸ் கோட்டா முறையை எதிர்த்தும் கண்டித்தும ராஜீவ் காந்தி பேசியிருப்பதைப் பார்த்தால், 'அவர் சுயமாகத்தான் பேசுகிறாரா? அல்லது முன்பு சுயராஜ்யா இதழில் ராஜாஜி எழுதிய ஒரு கட்டுரையைப் படிக்கிறாரா?' என்றே நமக்குச் சந்தேகமாகிவிட்டது! வரிக்கு வரி ராஜாஜியின் கருத்துக்களைப் பிரதிபலித்த அந்தப் பேச்சில், பர்மிட் — லைசென்ஸ் முறையானது தொழில் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருப்பதையும் பணக்காரர்களையே மேலும் பணக்காரர்கள் ஆக்குவதையும் போட்டா போட்டியைக் குறைப்பதால் மக்கள் தரமான பொருள்களைப் பெற முடியாதிருப்பதையும் ராஜீவ் எடுத்துக் காட்டினார்.

'உற்பத்திக்கு உதவாத அரசின் டாம்பீகச் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்' என்ற ராஜாஜியின் கொள்கையும் வி. பி. சிங்கினால் ஏற்கப்பட்டிருந்த போதிலும் அரசியல் காரணங்களால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் தவிக்கிறார்! லோன்மேளா, அப்னா உத்ஸவ் போன்ற இனங்களில் விரயமாகும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பணவீக்கத்தை அதிகரித்துக் கடைசியில் மக்களுக்குத்தான் துன்பமாக முடியும். இதற்கும் ராஜீவ் சீக்கிரமே முடிவு கட்டுவார் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

ஹிந்தி விஷயத்தில் ராஜீவ் ஒரு குழப்பமான மனநிலையில் இருக்கிறார். குமாரி சீதா மீனாட்சிக்கு அவர் எழுதியுள்ள கடிதம், பிரச்னை என்ன என்பதையே அவர் புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. தேசிய மொழி என்பது வேறு, ஆட்சி மொழி என்பது வேறு, போதனா மொழி என்பது வேறு. ராஜீவ் தமது கடிதத்தில் எல்லாவற்றையும் கலந்து குட்டை குழப்பியுள்ளார்.

நம் நாட்டில் உள்ள அத்தனை மொழிகளும் தேசிய மொழிகள்தான்; அந்தந்தப் பிராந்தியத்தில் அந்தந்த மொழி ஆட்சி மொழிதான்; போதனா மொழி என்பது பள்ளிகளில் தாய்மொழிதான் — இதிலெல்லாம் பிரச்னை இல்லை — இருக்கவும் கூடாது. மத்தியில் ஆட்சி மொழி எது; மாநிலங்களிடையே தொடர்புக்கும், மத்திய — மாநிலத் தொடர்புக்கும், சர்வதேசத் தொடர்புக்கும், எந்த மொழி ஏற்றது என்பதில்தான் பிரச்னை. அவர்கள் 'ஹிந்தி' என்கிறார்கள். நாம், 'ராஜாஜி கூறியதே சரி' என்கிறோம். 'ஆங்கிலத்தைப் பயன்படுத்துங்கள்; அது இந்திய மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தாது, உயர்வு தாழ்வு மனப்பான்மைகளை உருவாக்காது' என்கிறோம். இதனை மத்திய அரசு ஏற்காத போது ஹிந்தி பேசாத மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகத் தங்களை எண்ணிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவார்கள். தேசிய ஒருமைப்பாட்டுக்கு இது ஊறு விளைவிக்கும். பாலைக் கொட்டிக் கவிழ்த்த பிறகு திரட்ட முடியாது!

பொருளாதாரக் கருத்துக்களில் தீர்க்கதரிசி ராஜாஜியின் கருத்துக்களைப் பிரதிபலிப்பது போலவே ஆட்சி மொழி விஷயத்திலும் ராஜீவ் நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடந்து கொள்ளாமல் போனால் கருணாநிதிக்கும் வீரமணிக்கும் நிறையவே வேலை இருக்கும். அது காலத்தின் கட்டாயமாகிப் போகும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I 1. ஸாமவேத அஷ்ட ப்ராம்மணம்—நாகராக்ஷரம்—3 பாகங்கள், விலை ரூ 210/—
2. ஸாமவேத ஸம்ஹிதா—நாகராக்ஷரம்—2 பாகங்கள் (ஸ்வரத்துடன்) விலை ரூ 110/—
3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) கிரந்தாக்ஷரம்—2 பாகங்கள் விலை ரூ 235/—
4. சாந்தி குஸுமாகரம் (கிரந்தாக்ஷரம்) — 2 பாகங்கள் விலை ரூ 75/—

II க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 70/—; 2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 65/—; 3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம், விலை ரூ 30/—; 4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 60/—; 5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம், விலை ரூ 25/—; 6. கல்ப சிந்தாமணி விலை ரூ 35/—

III நாகர அக்ஷரம் — நாகர பதத்திற்கு தமிழ் அர்த்தத்தோடு

1. ஸ்ரீமத் பாகவதம்—5 Volumes—12 ஸ்கந்தங்கள், விலை ரூ 415/—; 2. ஸுந்தர காண்டம், விலை ரூ 80/—; 3. ஸ்ரீ நாராயணீயம், விலை ரூ 55/—.

IV 1. மனுசேச்லோக & ராமமந்த்ராசேச்லோக, விலை ரூ 9/—; 2. ஸ்ரீ ராதா க்ருஷ்ண பூஜாவிதானம், விலை ரூ 10/—; 3. நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்), விலை ரூ 9/—; 4. வேதபாட வழிமுறை (Syllabus) (ரிக், யஜுர், ஸாம), விலை ரூ 8/—.

V.P.P.யில் அனுப்புவதில்லை. பூராத் தொகையையும் M.O. (or) Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜாஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி

D-76, மூன்றாவது கிராஸ், ஸ்ரீநகர்காலனி, கும்பகோணம்—612 001

ராட்சசன்

தெலுங்கில் இதற்கென்றே ஒரு கூட்டம் வைத்திருக்கிறார்கள்.

இந்தமுறை சற்றே வித்தியாசமாய் டப்பிங். வில்லனின் தீவில் கஞ்சா பயிராகிறது. வெளியுலகிற்குக் காண்பிக்கப்படாமல் தலைமுறைகளாய் அடிமைகள் வேலை வாங்கப்படுகிறார்கள். வழக்கம்போல் பெரிய போலீஸ் லஞ்சம் வாங்கி வில்லனுக்குத் துணை போக, இன்ஸ்பெக்டர் ஒருவர் அராஜகமாக நடுவீதியில் கொல்லப்படுகிறார். அந்தத் தீவிலிருந்து தப்பி வந்த நாயகன் சபதங்கள் எடுக்கிறான். யார் எந்த ஆயுதம் கொண்டு வந்தாலும், கையாலேயே சண்டை போடுகிறான். இரண்டு சண்டை போட்டவுடன், அம்மா என்று தெரியாமலேயே அம்மாவைத் திருடனிடமிருந்து காப்பாற்றுகிறான். ஹீரோ வேறு யார்? சிரஞ்சீவிதான்.

வில்லனின் மகள் அவனையே ஹீரோ ஹீரோ என்று சுற்றி வந்து, முத்தங்கள் தந்தால்*அப்பாவின் ரகசியங்கள் தருகிறேன் என்று பேரம் பேசி, சீனுக்கு ஒரு டூயட் வீதம் காஷ்மீரின் பனியில் ஆரம்பித்து இந்தியா எங்கும் அவனோடு சுருள்கிறாள். வேறு யார்? ராதா தான்.

அமைதியான இடத்தில் பிள்ளைகளுக்கு ஒரே ஒரு லின் வகுப்பு நடத்தி, ஹீரோவைக் காப்பாற்றி, தன் குடும்பம் அழிக்கப்பட்டதும் அதே வில்லனால்தான் என்று உண்மையைச் சொல்லி, புடவை தவிர எந்த மாடர்ன் டிரெஸ் போடாவிட்டாலும் அதே காஷ்மீர் இத்யாதிகளில் உருண்டு புரண்டு மிச்ச டூயட்களுக்குக் கதாநாயகி யார் தெரியுமா? சுஹாசினி.

பெரிய பட்ஜெட் படமென்பதால் சிரஞ்சீவியோடு டூயட் பாட மூன்றாவதாக ஒரு நடிகை (புதுமுகமோ?) அருவியில் வெள்ளைப்புடவை, கச்சையோடு நனைந்து கனவு டூயட் முடிந்ததும், அவரால் 'அம்மா' என்று தாயாக விலக்கப்படும் விளையாட்டும் உண்டு.

என்ன சொன்னாலும், காடுகளில் குதிரைகளின் வேகம், வேட்டை நாய்களின் துரத்தல்கள், ஸ்டண்ட்மேன்களின் ஆவேசம், தீவு மனிதர்களின் ஒரே யூனிஃபார்ம் என்று அவ்வப்போது அசத்திவிடுகிறார்கள்.

படம் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை வேகம், வேகம், வேகம்.

'வேகம் விவேகமில்லை' என்று யாரோ சொல்லவில்லை?





மந்திரப் புன்னகை

பரபரப்பான ஆரம்பம்தான். கூடவே, டாக்டர் சத்யராஜையும் உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைத்தாகி விட்டது. அப்புறம்தான்...

ஒவ்வொன்றாகச் சொல்வோம்:

ஐயா, புரியாமல்தான் கேட்கிறோம். எந்த கருணை இல்லத்திலாவது குழந்தையை வளர்ப்பதற்குப் பத்து லட்ச ரூபாய் கேட்பார்களா?

காரும், பங்களாவுமாய் இருக்கும் டாக்டரைத் திடீரென்று ஒரு ஸீனில் கடன்காரர் (பட்டாணி) முளைத்து, வட்டியுடன் என் கடனைத் தராவிட்டால் உன்னைத் தொலைத்து விடுவேன் என்பாரா? இத்தனைக்கும் டாக்டருக்கு எதனால் கடன் என்றே தெரியவில்லை. மனைவியோ இல்லை. ஒரே மகள். சாயங்காலம் சாயங்காலம் குடிக்கிறார் என்று காட்டினாலுங்கூட கார், பங்களா எல்லாவற்றையும் தொலைக்கும் அளவிற்கா?

அட, அது போகட்டும், ஜமீந்தார்த் தாத்தா எவ்வளவு பெரிய பணக்காரர். அவரைக் கேட்டால் பணம் தரப் போகிறார். அதை விட்டுவிட்டு நேர்மையான டாக்டர் வில்லனைப் போலீஸிடம் காட்டிக் கொடுக்காமல் கொலை செய்யச் சம்மதிக்கிறாரே. என்னய்யா இது!

இந்த மாதிரி கேள்விகள் கதை முழுக்க எக்கச்சக்கம்.

தைரியராஜ் காரெக்டர் ஒரு கிரிமினல் வேஸ்ட். அந்த ரோலில் ரகுவரன் என்னதான் சிறப்பாக நடித்திருந்தாலும் அனுதாபத்திற்குப் பதில் வெறுப்பு மூட்டையைத்தான் சுமக்க நேரிடுகிறது.

நதியாவிற்கு வேலையே இல்லை. துள்ளிக் குதித்து அலைகிற மானின் காலை ஒடித்துப் போட்ட மாதிரி...; ப்ச்... பாவம்.

சுரேஷ் — இன்னொரு ஐயோ பாவம்.

டி. எஸ். பி.சத்தியராஜ் திருநெல்வேலி பாஷையில் வெளுத்துக் கட்டுகிறார். டாக்டர் சத்யராஜ் தள்ளாடி விழும் நடையில் ஜமாய்த்திருக்கிறார். 'ஜாலிகா இருக்கா?' என்று பாயும் ஸீனில் முத்திரை பதித்திருக்கிறார். சத்யராஜைப் பொறுத்தவரை குறையே சொல்ல முடியாது.


பாடல்கள் மோசமில்லை. அதிலும் அந்த 'க்ளி பெருங்காய டப்பா' ஹம் பண்ண வைக்கிறது.

காமிரா பாய்ந்து பாய்ந்து லொகேஷன்களை ஃப்ரேமுக்குள் அடக்கியிருக்கிறது.

தமிழழகன் முதல் படத்திலேயே நிறைய்ய தர வேண்டும் என்று ஓவராய் ஆசைப்பட்டதினால் மந்திரப் புன்னகை கொட்டாவிகள் நிறைந்த மந்தப் புன்னகை ஆகிவிட்டது. பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்!

— ஜெயமன்மதன்

சில நினைவுகள்
என்றுமே நிலைத்திருப்பவை.



**இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது
பிளாக் & ஒயிட் படங்களே!**

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப்
புரட்டிப் பாருங்கள்!

பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட்
படங்கள் இன்றும் கருக்கழியாமல்,
மங்காமல் இருப்பதைக் காணபீர்கள்.

அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது
ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது.
சொல்லவும் வேண்டுமா?

காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே
உங்களது தேர்வாக இருக்க முடியும்.

**அழியாத நினைவுகளுக்கு
காலத்தால் அழியாத பிளாக் & ஒயிட் படங்கள்!**

INDU





**இந்து
பிளாக் & ஒயிட்
ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்.**

Sista's – HPF.621.86 TM C

அறிவை வளர்க்கட்டும் வறுமையை அல்ல!

"வங்கிகளில் கம்ப்யூட்டர்கள் வந்து விட்டன. இதனால் விரைவான சேவை கிடைக்கும் என்கிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்த முதுநிலை பட்டதாரிகள் கூட எட்டு வருடங்களாய்க் காத்துக் கிடக்கிறார்கள். இந்த நிலையில், இவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற மனிதாபிமான நோக்கிலாவது ஒரு மூன்று நிமிடம் வங்கியில் காத்திருப்போமே" என்கிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கத் தலைவரும், சட்டப் பேரவை உறுப்பினருமான வி.பி. சிந்தன்.

"நாங்கள் அறிவியல் வளர்ச்சியை முடமாக்கிவிட்டு எல்லோரும் கட்டை வண்டிக் காலத்திற்குப் போக வேண்டும் என்று சொல்லவே இல்லை. அறிவியல் திறமைகளை உபயோகப்படுத்தாமல் வீணடிப்பது குற்றம் தான். அதில் எங்களுக்குக் கருத்து வேற்றுமையே இல்லை.... கம்ப்யூட்டர் என்பது இருபதாம் நூற்றாண்டில் கிடைத்துள்ள மிகப் பெரிய அற்புதம்தான். அறிவியலில் விளைந்துள்ள மிகப் பெரிய புரட்சி இது. விண்வெளி ஆய்வு, நிலத்தடிக் கனிவள ஆராய்ச்சி, பாதுகாப்பு நடவடிக்கைகள், வானிலை ஆராய்ச்சிகள் உயிர் காக்கும் மருத்துவம் போன்ற துறைகளில் மிக அதிகமான அளவு கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துங்கள்... வேண்டாம் என்று சொல்லவில்லை.



ஆனால் தகராறு எங்கே ஆரம்பிக்கிறது?

நம் நாட்டில் இன்றைக்கு உள்ள பொருளாதார நிலையில், தொழிலகங்களிலும், வங்கிகள், எல்.ஐ.ஸி., தபால் தந்தித் துறை போன்ற அமைப்புக்களிலும் கம்ப்யூட்டர் இடம் பிடிப்பதைத்தான் எதிர்க்கிறோம்.

கம்ப்யூட்டர் வருவதால் யாரையும் வேலையை விட்டுப் போகச் சொல்ல மாட்டோம் என்று இன்றைக்கு உறுதி அளிக்கிறார்கள். அதை உண்மை என்றே ஏற்பதானால் கூட நீங்கள் ஒரு வங்கியிலோ, வேறு அலுவலகத்திலோ வேலை பார்த்தால் உங்கள் பாடு சிரமம் இல்லை. வெளியே அனுப்ப முடியாது. ஆனால் நீங்கள் ஓய்வு பெறுகிற போது அந்தக் காலியிடம் நிரப்பப்படமாட்டாது. உங்கள் மகனுக்கு எங்கும் வேலை கிடைக்காது. ரயில்வேயில், கம்ப்யூட்டர் மயமாவதன் விளைவாக, பதினாறு லட்சமாக இருக்கும் வேலை வாய்ப்பு பன்னிரண்டு லட்சமாகக் குறையப் போகிறது. இதே நேரத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் காத்துக் கிடப்பவர்களின் எண்ணிக்கை எரிக்



கொண்டே போகிறது. இந்த நிலையில், வங்கிகள், எல்.ஐ.ஸி. என்று எல்லாவற்றிலும் கம்ப்யூட்டரைக்கொண்டுவருவது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானதுதான்!

கனரகத் தொழிற்சாலைகள், துணி ஆலைகள், பஞ்சாலைகள் போன்றவற்றில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களையே (Installed Capacity) முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நாடு இது. நாற்பது சதவிகிதம் திறன்தான் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள அறுபது சதவிகிதம் வீணாகிக் கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் கம்ப்யூட்டர்கள் உதவுமா?

ஒரு வரலாற்று நிகழ்ச்சியைச் சொல்கிறேன். ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் கல்கத்தாவில் நடைபெற்றது. அங்கு எல்.ஐ.ஸி.யில் நிறுவ என்று கம்ப்யூட்டர் வந்தது. இரண்டு லட்சம், மூன்று லட்சம் பேர்கள் மாணவர்கள் உட்படத் திரண்டு எழுந்து, அதை டெலிவரி எடுக்கவே விடாமல் தடுத்தார்கள். அந்தக் கம்ப்யூட்டர் அப்புறம் பம்பாய்க்குக் கொண்டு போகப்பட்டது.

முதல் கோளாறு.... கம்ப்யூட்டர்கள் இங்கே வேலை வாய்ப்பை மிக மோசமாகப் பாதிக்கும். சம்பளம் வாங்கி வேலை பார்ப்பவர்கள்தான் விதவிதமான சட்டை, பேண்ட் என்று போட முடிகிறது. இன்றைக்கு ஏராளமாக துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. என்ன காரணம்? வேலை பார்க்கும் வாய்ப்புக் குறைவதும் அதனால் வாங்கும் சக்தி கணிசமாகக் குறைவதும்தானே! கம்ப்யூட்டர்களால் வாங்கும் சக்தி கூடுதலாகப் போவதில்லை. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படலாம் என்பது இரண்டாவது கோளாறு.

சமீபத்தில் சென்னை பொது மருத்துவமனைக்கு ஸ்கானிங் கருவி வாங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இது போன்ற உயிர் காக்கும் மருத்துவ ஆராய்ச்சிப் பயன்களுக்காகக் கம்ப்யூட்டர் வருவதை நாங்கள் எதிர்க்கிறோமா?

இது போன்ற மருத்துவப் பயன்களில், மற்றும் வேலை வாய்ப்புக்களைப் பாதிக்காத இனங்களில் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த அரசு அக்கறை காட்டவில்லை. மாறாக, தொழில் துறைகளில் கம்ப்யூட்டரைப் புகுத்திப் பெரும் முதலாளிகளுக்கு லாபம் கிடைக்கவே அரசு ஊக்கமளிக்கிறது.''

பேட்டி:

— வெஸ்பால், ப்ரியன்

பரிசுக்கு மேல் பரிசு




• பாலமுரளி

“எப்போ ஒருத்தருக்குப் பாட்டுலை தலைவலி ஏற்படறதோ, எப்போ சில பேர் பாட்டைக் கேட்டா ஓடிப் போயிடலாம்னு தோணறதோ, அப்போ பாட்டுக்கு ஒரு 'நெகடிவ்' சக்தி இருக்கு என்பது நிச்சயமாத் தெரியறது. 'நெகடிவ்' சக்தி இருக்கிறதனாலே ஆக்கபூர்வமான பிளஸ் பாயிண்ட்டும் இருக்கத்தானே செய்யும்! அதனாலேதான் நான் சங்கீதத்தாலே நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று நம்பறேன்! துணிஞ்சு மியூசிக் தெரபியிலே ஆராய்ச்சி பண்ணிண்டிருக்கேன்'' என்று ஒரு ஸீரியஸ் விஷயத்தை வேடிக்கையாகச் சொன்னார் பாலமுரளி. ரொம்பத் தீவிரமாக ஆராய்ச்சியில் இறங்க முடியாததற்குக் காரணம் நிதி வசதி இல்லாததுதானாம். ''குறைந்த பட்சம் பத்து லட்சமாவது தேவை'' என்றார்.

சுவர ராக சுதா நிகழ்ச்சியின் அடிப்படையில் கல்கியும் ஹிந்துஸ்தான் லீவரும் இணைந்து நடத்திய போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாலமுரளி கிருஷ்ணா பரிசுகளை வழங்கி விட்டுச் சிறிது நேரம் அவர்களுடன் உரையாடவும் செய்தார். தமது சகஜமான பேச்சினால் கூடியிருந்த அனைவரையும் நெருங்கிய நண்பர்களாக்கிக் கொண்டார். சுவ ராக சுதா தயாரிப்பாளர் கோவிந்த் நல்லப்பாவிடம் நிகழ்ச்சியை நேரடியாக விமர்சிக்கும் வாய்ப்பும் பரிசு பெற்ற வாசகர்களுக்குக் கிடைத்தது. சுவர ராக சுதாவைக் காஸட்டாக ஒலிப் பதிவு செய்து வெளியிட்டுள்ள ஸி.பி.எஸ். நிறுவனம், பரிசு பெற்றவர்களுக்கு, பரிசுகளுக்கு மேல் பரிசாக அக்காஸட்களை அன்பளிப்பாக வழங்கியது!

புகைப்படம்: **யோகா**

A totality greater than the sum of its parts



The Hinditron totality

A totality that has matured over nearly two decades in the hi-tech electronics environment, today spans the widest spectrum of computer operations in India... marketing and field servicing of indigenous SN personal computers, 16 bit multiuser SN computers and imported 32 bit DEC's VAX supermini computer systems, CAD/CAM work stations and general purpose graphics, software development and export; consultancy services; training in information technology; Data Centre management... besides process control and communications.

Most of all, a totality committed to making advanced technologies work for India.

Hinditron's Total Computing Package

When you buy an SN-system, Hinditron's reservoir of specialised skills and support services is available on tap for you.

You get a comprehensive range of software options, field-proven over practically every segment of industry.

Your organisation gets Hinditron's complete training support -- and one of the Hinditron companies concentrates on organising training programmes and workshops for optimum utilisation of computer resources.

Plus, with Hinditron's nationwide network of service centres, you're guaranteed field-service that's just a phone call away from you.

Complete Solutions from India's Complete Computer Company

Whether your requirements are commercial, engineering or scientific Hinditron offers field-proven solutions for all your computing needs.

You may need a specific application package. Or to interface the computer with other equipment. To tie your office communication together in a network. Even set up your own Data Centre.

Hinditron's totality of infrastructure and expertise can take it all easy for you.

The Hinditron Totality

You may not need all of it today. Your computer investments, however, are necessarily long-term.

Move in with someone you can move up with.

Manufactured by SNP Essen Electronics

Hinditron Offices
BOMBAY: Tel: 6300043/6300527
PUNE: Tel: 64136
CALCUTTA: Tel: 432628
DELHI: Tel: 6410380
MADRAS: Tel: 454565
BANGALORE: Tel: 367289
SECUNDERABAD: Tel: 821117

The SN family of mini computers: SN 73, SN 23, micro SN and SN PC/XT personal computers



HINDITRON you may not need <u>all</u> of it today

Dattaram-HC 6/86

பரிமளா சுவரோரமாய் அமர்ந்து கொண்டு, பக்கத்தில் வெகு நெருக்கத்தில் உட்கார்ந்திருந்த தங்கராஜின் மோவாயைப் பிடித்து —

இல்லே. அது தங்கராஜ் இல்லே. ஒரு கிழவி. சுருக்கங்கள் நிறைந்த முகத்துடன் 'இந்தியா' என்ற தலைப்பின் கீழ் புகைப்படப் போட்டியில் கலந்து கொள்ள எல்லா ஏழைமைத் தகுதிகளும் பெற்ற கிழவி.

அந்தக் கிழவி பரிமளாவைப் பார்த்து வாயைத் திறந்து நான்கே பற்களுடன் சத்தம் போடாமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

இந்திராவிற்கு எல்லாம் மறந்து போய்ச் சிரிப்புத்தான் வந்தது. சிரித்தாள். அந்தச் சிரிப்பொலி கேட்டு, பரிமளா, கிழவியினின்றும் கையை எடுத்துத் திரும்பிப் பார்த்தாள். வெட்கப்பட்டாள். ஒரே ஒரு விரலின் நகத்தை உடனே வாயில் வைத்துப் பற்களுக்கிடையில் மிருதுவாகக் கடித்து, ''நீ எப்ப வந்தேக்கா?'' என்றாள்.

''கிட்டே வாங்க.... இன்னும் கிட்ட'' என்று இந்திரா, பரிமளாவின் குரலை ஒற்றி எடுக்க, பரிமளா வாயில் இருந்த விரலை எடுத்துவிட்டு, இரண்டு கைகளையும் உதறி ''போக்கா'' என்றாள், அந்த வார்த்தை நிறைய சிணுங்கல்களுடன். தையை நீட்டிக் கிழவியைக் காட்டினாள்.

''இதான் என் ஆயா. ரெண்டு காதும் பஞ்சல்'' என்று இரண்டு கைவிரல்களையும் மலர்ந்த தாமரை போல் விரித்து, முன்பின் திருப்பி, தலையை இடவலமாக ஆட்டினாள் பரிமளா.

''அதான் அம்மா, வீட்டிலேயே இந்தக் கொட்டம் அடிக்கறீங்களா?''

''வேணாங்கா. வுட்டுடுக்கா. ஒங்கிட்டேன்னு வந்து மாட்றேம்பாரு.''

''ஏய் பரிமளா! எங்கிட்ட மாட்றதில் தப்பில்ல. எக்குத் தப்பா தெரியாதவங்ககிட்ட மாட்டிக்கப் போறே. அப்புறம் அவதிதான்!''

''உக்காருக்கா'' என்றாள். அவசர அவசரமாக எழுந்து ஒரு பாயை விரித்தாள்.

''இது யாரு?'' என்று கிழவி உரத்த குரலுடன் இந்திராவைப் பார்த்தாள். அளவெடுக்கிற பார்வை. உடம்பு நிறைய சுருக்கங்கள் இருந்தாலும் கண்ணில் மட்டும் சுருக்கமில்லாத கிழவி.

''எங்கூட வேலே செய்யற அக்கா!'' என்று மெதுவாகச் சொல்லி, சைகையால் தீக்குச்சியை அடுக்கிக் காண்பித்தாள் பரிமளா.

கிழவி நெற்றியைத் தொட்டுக் காண்பித்தாள்.

''ஏ கௌவி, சும்மாரு. வம்புக்குன்னே அலேயறே.... வயசான காலத்திலே சாப்பிட்டமா தூங்கினமான்னு இல்லாம.....''

''என்னவாம் பரிமளா?''

''ஒனக்கு வீட்டுக்காரர் இல்லியான்னு கேக்குது.''

''கேட்டுட்டுப் போறுங்க.''

''இதுக்கு எதுக்கு அந்த வெவகாரம்? இது என்னா, 'ஐயோ, சின்ன வயசிலே இப்படி ஆய்டிச்சே'ன்னு சீமையிலேர்ந்து ஒரு மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வந்துரப் போவுதா? அது கெடக்கு. நீ சொல்லுக்கா. லீவு நாளு எப்படிப் போவுது?''

''அது பத்தித்தான் சொல்ல வந்தேன், பரிமளா!'' அப்பாடா பாரத்தை இறக்கி விடலாம்.

''என்னக்கா?''

''நாளையிலேர்ந்து நான் வேலேக்கு வரப் போறதில்ல. இனிமே எப்பவும் லீவுதான்.''

''என்னது? ஏங்கா? யாராவது தப்பாப் பேசியிருந்தாச் சொல்லு. இல்லே, எவனாவது கையைக் கிய்யப் புடிச்சு இழுத்துட்டானா... அப்படின்னாலும் சொல்லு. மொதலாளி கிட்டே சொன்னா மறுநிமிஷம் அவன் செயில்ல இருப்பான். நம்ப மொதலாளி மாதிரி ஒரு ஆளு இனிமேல் பொறந்து வரணும். எங்க கல்யாணச் செலவுக்கு வள்ளிசா ஆயிரம் ரூவா அவர்கிட்டே கொடுக்கிறேன்னு சொல்லியிருக்காராம்.''

''யார்கிட்டே?'' இந்திராவின் குரலில் ஒலியை விடக் காற்றுதான் அதிகமாக இருந்தது. எந்த முதலாளியைப் பற்றிச் சொல்ல வந்தாளோ, அதே முதலாளி பரிமளாவைப் பொறுத்தவரை தேவன்.

''யாருகிட்டே.... என்னைக் கட்டிக்கப்

9



போறவர்கிட்டேதான்.''

''தங்கராஜு" கிட்டேயா?'' இந்திரா விற்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட் டது. சொல்லி விடு, சொல்லி விடு என்று துடித்த மனம் தயங்கத் தொடங்கியது.

''அட ஆமாக்கா. அந்தப் பணத்தில்தான் வேஷ்டி, புடைவை எல்லாம் வாங்கப் போறோம். தாலி ஒண்ணுதான் பாக்கி. அதுவும் சீட்டு முடிஞ்சவுடனே அவர் கைக்கு வந்துடப் போவுது. கல்யாணம் எங் கேங்கிறே? ஊருக்கு வெளியே இல்ல அய்ய னூர் கோவில், அங்கேதான். ஐயனூருக்குச் சாராயம் படைச்சி, கோழி அடிச்சி அவரு ஆசீர்வாதத்தோட எங்க கல்யாணம்,எப்படி? ச்சே.... உடனே நான் எங்கதையைப் பேச ஆரம்பிச்சிட்டேம் பாரு.... சொல்லுக்கா, எதனால் வேலையை விடப் போறே?''

சொல்லாதே. இந்திரா நாக்கு நுனி வரை வந்துவிட்ட உண்மையை நிறுத்திவிட் டாள். முதலாளி எல்லாரிடமும் இப்படித் தான் நடந்து கொள்ளப் போகிறாரா என்ன? அனாவசியமாய் நேற்றைய கசப்புக்களைச் சொல்லி, அதனால் இவள் கொதித்து எழுந்து, அதனால் தங்கராஜு"விற்கு அந்த ஆயிரம் ரூபாய் கிடைக்காமல் போய்....

''வேலை செய்யறப்போ தலையைச் சுத்தி சுத்தி....'' என்று தொடங்கி ஜெயபாலிடம் சொன்ன காரணத்தை வார்த்தை மாறாமல் சொன்னாள். இனிமேல் யாராவது கேட்டால் இந்திரா வேலையை விட்டு நின்றதற்கு இது தான் காரணம்.

''நான் கௌம்பட்டுமா பரிமளா, உங் கிட்டே இந்த விஷயத்தைச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். நான் இல்லேங் கறதால என்னை மறந்துடப் போறே. கல் யாணத்துக்கு மறக்காமல் கூப்பிடு.''

''நீதாங்க்கா என் கல்யாணத்தை முன்னே நின்னு நடத்தி வைக்கப் போறே. நீதாங்க்கா என்னை அலங்காரம் பண்ணி, நான் கன்னி கழியறதுக்கு வழி அனுப்பப் போறே. நான் எப்படி உன்னை மறந்துடுவேன்?'' பரிமளா வின் சிறிய உதடுகள் திடீர் என்று துடித்தது. அவள் கண்களில் உபரியாக நீர் படர்ந்தது. இந்திராவின் மீது சாய, ''என்னம்மா இது?'' என்று அவளைத் தட்டிக் கொடுத்தாள் இந்திரா.

கிழவி ஒன்றும் புரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

இந்திரா மெல்ல பரிமளாவை விலக்கி னாள்.

''டயமாய்டிச்சு பரிமளா, நான் போய் அண்ணனுக்குச் சோறு போடணும். நந்து வேறே என்னைக் காணோம்னு ஏங்கிப் போய்டுவான். நான் வரட்டுமா?''

''ஓம் பையனை என் கண்ல காட்டவே மாட்டியாக்கா? இப்ப கூட்டிக்கிட்டு வந் திருக்கலாமில்ல? அவனுக்கும் லீவுதானே?''

''எம் பையன் எங்கேயும் போயிட மாட் டான். இன்னிக்கு என்னவோ படிப்பு படிப் புன்னு உக்காந்துட்டான். வர்ற புதன் கிழமை

அவுங்க ஸ்கூல்ல ஆண்டு விழாவாம். நம்ம தொரை, கலெக்டர் கையால் ப்ரைஸ் எல்லாம் வாங்கப் போறாராமே, வா, வான்னு கூப்புடுறான். போவணும். அண்ணி வேறே அன்னிக்கு என்னவோ கோயில்லே பொங்கல் வைக்கப் போறேன்னு சொல்லிக்கிட்டிருக்குது.. உங்க பாண்டிய அண்ணனைச் சாப்பாட்டுக்குக் கூப்பிட்டிருக்காங்க. அவரு வேறே வரேன்னு சொல்லிட்டாராம். நான் சமையலைப் பார்ப்பேனா, விருந்தாளிங்களைக் கவனிப்பேனா, இல்லே, எம் பையனைக் கவனிப்பேனா.... ஒண்ணுமே ஓட மாட்டேங்குது இப்பத்திலேர்ந்தே.... எப்படியும் அன்னிக்கு ஸ்கூலுக்குப் போவணும். பையனுக்காவது போவணும். நீயும்வாயேன். உங்கண்ணன் சாப்பாட்டுக்கு வராரில்லே. அப்பவே வந்துடு.''

''என்னை வேலைக்குப் போக வேணாங்கறியா?''

''அவருக்கு மட்டும்?''

''அண்ணன் பட்டாசு பாக்டரி, சாப்பாட்டுக்கு நடுவுலே போய்ட்டு வரேன்னு ஒருநாள்தானேன்னு விடுவாங்க. அது போவட்டுங்கா. நந்தகுமார் நெஜமாவா கலெக்டர் கையால் பிரைஸ் வாங்கப் போறான்?''

''ஏய்.... தங்கராஜுதான் ஒன்னைக் கட்டிக்கறேன்னு ஒத்தைக் கால்ல நிக்கும்போது, நீ ஏன் எம்பையன் மேல் ஆசைப்படறே?''

''பாத்தியா.... மறுபடியும் ஆரம்பிச்சுட்டியே!'' என்று மின்னல் சிரிப்பு சிரித்தாள் பரிமளா.

''இந்தச் சிரிப்புக்காகத்தான் சொன்னேன்'' என்றாள் இந்திரா.

★

''ஸ்ஸ்'' என்று விரலை எடுத்துக் கொண்டாள் இந்திரா. அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பாத்திரம் தன் கோபத்தை ஏதோ நினைவாய் இருந்த இந்திராவிடம் காட்டிவிட்டது. ஏதோ நினைவாய் என்று சொல்வதுகூடத்தப்பு.பரிமளாவைப்பார்த்து விட்டு வந்ததிலிருந்து அவளைப் பற்றிய நினைவுகள். இந்த மூன்று நாட்களாய், பரிமளா அன்றைக்குக் கிழவியிடம் நடத்திய கூத்து அடிக்கடி புன்முறுவலை வரவழைத்தது. கண்ணில் நீருடன் அவள் மார்பில் சாய்ந்தது பரிதாபத்தைச் சுரக்கச் செய்தது.

கையில் இருந்த கரண்டியால் பால் பாயாசத்தை ஒருமுறை கோதிவிட்டாள்.

''நந்து, அந்த முந்திரிப் பருப்பு டப்பாவை எடேன்.''

அரசியல்வாதிபோல் கையைக் கையை உயர்த்திச் சைகை செய்து உதடுகளை அசைத்துக் கொண்டிருந்த நந்தகுமார், ''என்னம்மா இது?'' என்று சலித்துக் கொண்டு முந்திரிப் பருப்பு டப்பியை எடுக்கப் போனான்.

''நீ என்ன செய்யறே கையைக் கையை உதறிக்கிட்டு?''

''எங்க எச்.எம். நான்தான் மேடையில் பேசணும்னு சொல்லியிருக்காரு. தப்பாப் பேசக் கூடாதில்ல. அதுக்காகத்தான் இப்ப ரிகர்சல் பார்த்துக்கிட்டு இருக்கேன். ஐயா இன்னிக்கு சாயங்காலம் கலெக்டர்கிட்டே நா ஆஆலு பிரைஸ் வாங்கப் போறுரு.''

''எம்பெருமை சொல்றதுக்குள்ள ஏழு ஊரை எலி தின்னுடிச்சாம். எத்தனை தடவைடா நீ ப்ரைஸ் வாங்கற விஷயத்தைச் சொல்லுவே. அத்தை வேறே கோயிலுக்குப் பொங்கல் இடப் போயிட்டாங்க. சரியும் இல்ல. வீட்டுக்கு விருந்தாளி இப்ப வந்துடப் போறாரு. கொஞ்சம் ஒத்தாசை பண்ணு சலிச்சுக்காம. நீ எப்ப ஸ்கூலுக்குப் போகப் போறே?''

''சாப்பிட்டுப் போயிடுவேன். சரி.... முந்திரிப் பருப்பை ஒடைக்கவா?''

''ரெண்டு ரெண்டா ஒடைச்சிடு ராஜா! அப்பத்தான் நெய்யில் முறுகலா ஆகும்.''

''இந்திரா'' என்று ஹாலிலிருந்து ஜெயபால் குரல் கேட்டது.

எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டு ஹாலுக்கு ஓடினாள். பாண்டியன் வந்திருந்தான். சிரித்தான்.

''இன்னிக்கு வீட்ல யாருக்குமே சாதம் இல்லாமப் பண்ணிடறேன். அவ்வளவு பசி'' என்றான்.

''சீக்கிரம் இலை போடு இந்திரா!''

இந்திரா மறுபடி சமையலறைக்கு ஓடினாள்.

நந்தகுமார் மறுபடி சாயங்காலம் பேசப் போகும் பேச்சுக்கான ஒத்திகையில் இறங்கி இருந்தான். அவனை நம்புவதில் அர்த்தம் இல்லை. இந்திராவே பறந்து பறந்து வந்தாள். சமையல் அறைக்கும் ஹாலுக்கும் ஒரு கிலோ மீட்டர் நீளம்போல் பட்டது. சிட்டுக் குருவி போல் அவள் ஒவ்வொரு பாத்திரமாய்க் கொண்டு வந்து சேர்ப்பதற்குள் நுரையீரலில் இருந்த மூச்சையெல்லாம் தொலைத்து விட்டாள். மார்பு அவசர அவசரமாக ஏறித் தாழ்ந்தது. மூச்சிரைப்பதை வெளியில் காட்டாமல் இருக்கச் சிரமப்பட்டாள். ஜெயபால் இரண்டு நுனி இலைகளை எடுத்து, அதன் ஓரப் பிசுறுகளைத் துண்டித்தான்.

''மாப்பிளே, கை கழுவிக்கறியா?'' என்று கேட்டான்.


''வேண்டாம். கை அழுக்கு போயிட்டா சாப்பாட்லே டேஸ்ட் இருக்காது'' என்றான் பாண்டியன்.

இந்திரா மனத்தில் சிரித்துக் கொண்டு, இலையில் மழை நீர் போல் தண்ணீரைத் தெளித்தாள். பாண்டியன் நிமிர்ந்து பார்க்காமல் இலைத் தண்ணீரைப் புறங்கையால் 'ஸ்வீப்' 'ஸ்வீப்' என்று தேய்த்துவிட்டான். அவன் இலை சாப்பாடு, சாப்பாடு என்று அவசரப்பட, முதலில் அந்த இலையில் சாதத்தைத் தள்ளினாள்.

''சாதம் மல்லியப்பூவு'' என்றான் பாண்டியன் மேல் எழுந்த ஆவியைக் கையால் பிடிக்க முயற்சி செய்து.

ஓர் ஓரத்தில் நெய் ஊற்றி, சாம்பாரை அதில் வடித்துப் பிறகு, மற்றப் பொரியல், கூட்டு சமாசாரங்களை வைக்கத் தொடங்க, பாண்டியன் தண்ணீர்த் தம்ளரில் இருந்த தண்ணீரை ஒரே மடக்கில் குடித்துவிட்டு, சாதத்தில் கை வைத்து அளைந்தான்.


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்,
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.




முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.



984.55 Tam

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !



"உங்க ஆபீஸிலே இனிமே கம்ப்யூட்டர்தான் சம்பளப் பட்டியல் தயாரிக்கப் போகிறதாமே?"

"ம்.... யார் தயாரிச்சா என்ன, கடைசியிலே முழுசா போய்ச் சேர்றது பெண்டாட்டிகிட்டேதானே!"

— ராமபிரான்

"வாசனை தூக்குதுப்பா ஜெயபால். ஒரு படி சோறு சத்தமில்லாம உள்ளே போயிடும்" என்று கவளங்களை வாயில் போட்டுக்கொண்டான்.

இந்திராவிற்கு அவன் புகழ்ச்சி கன்னத்தைச் சிவக்கச் செய்தது. பாண்டியன் சாப்பிடுவதைப் பார்த்தால் ஒருபக்கம் சிரிப்பாக இருந்தது. பக்கத்து வீட்டு மரகதம் சுவரில் வரட்டி தட்டுவதை நினைவுபடுத்தியது. எவ்வளவு பசி! எவ்வளவு பசி!

அண்ணன் இலையில் சாம்பார் ஊற்றுகையில் அந்த விக்கல் சத்தம் கேட்டது. பாண்டியனின் அவசரத்தால் ஏற்பட்ட விக்கல்.

"சத்தமில்லாம ஒரு படி சாப்பிடுவேன்னே.... ஒரு கவளம்கூட முடியலே.. அதுக்குள்ள விக்கல் எட்டு ஊருக்குக் கேக்குது. தண்ணியைக் குடிப்பா."

இந்திரா சாம்பாரை ஊற்றுவதை நிறுத்திவிட்டுத் தண்ணீர் தம்ளரைப் பார்த்தாள். காலி. அண்ணன் தம்ளரும் காலியாகி இருந்தது.

"முண்டம், சாப்பிடறதுக்கு முன்னால் தண்ணி கொண்டு வந்து நெறைய வைக்கக் கூடாது. சாகப் போறவன் தண்ணி கேட்டா, கருமாதிக்குத்தான் கொண்டு வருவே போல இருக்கு.... போய்த் தண்ணி எடுத்துட்டு வா.

ஜெயபால் வாக்கியத்தை முடிக்குமுன் அவள் சொம்புத்தண்ணீரை எடுத்துக்கொண்டிருந்தாள். உடல் நடுங்கியது. மனம் நடுங்கியது. என்ன செய்தால் இவர்களுக்கு எல்லாம் திருப்தியாக இருக்கும். செத்துப் போய்விட்டால் சரியாகி விடுமோ? உலகத்துப் பிரச்னையே உயிரோடு இருப்பதுதானோ?

தண்ணீர்ச் சொம்பை மிக விரைவாக எடுத்து வந்து, பாண்டியனுக்கு அருகில் வைக்க முயலும்போது, புடைவை தடுக்கி, கால் கட்டை விரல் மடங்கி, விழாமல் இருக்க மிகச் சிரமப்பட்டு —

செம்பு கை நழுவிப் போயிற்று. கர்ணனைப் போல் தன்னிடம் மிச்சம் வைத்துக் கொள்ளாமல் அத்தனை நீரையும் வெளியே இரைத்து, ஓர் ஒழுங்கான சங்கீதத்துடன் உருளத் தொடங்கியது.

தண்ணீர் பாண்டியனின் இலை, பாண்ட் என்று கம்யூனிஸக் கொள்கையுடன் எல்லா இடத்திற்கும் பரவத் தொடங்கியது.

ஜெயபால் எழுந்துவிட்டான்.

"மூதேவி" என்று கத்தினான். முகம் சிவந்து போயிருந்தது.

"ஒரு சாதம் போடத் துப்பில்லாதவ. நீயெல்லாம் கல்யாணம் பண்ணி, ஒரு கொழந்தையும் பெத்தெடுத்துட்டே..... கேவலம் தண்ணிச் சொம்பைக் கட்டிக் காப்பாத்த முடியல.... கவுத்துக் கொட்டிட்டே. எப்படி குடும்பம் நடத்த முடியும் ஒழுங்கா உன்னால? அதான் தொலைச்சிட்டு வந்து பிசாசு மாதிரி என் தலையில் ஏறி உக்காந்திருக்க."

"ப்ச். சும்மாயிருப்பா" என்றான் பாண்டியன். "என்ன ஆயிட்டது இப்ப? அவசரமாத் தண்ணி வேணுங்கறதால, அள்ளிக் குடிச்சுக்கன்னு ஓடவிட்டுட்டாங்க. வேணும்னு கொட்டிட்டாங்க? கை தவறித்தானே போய்டிச்சு?"

பாண்டியனின் விக்கல் காணாமல் போயிருந்தது.

இந்திரா வாசலில் காலை வைத்தாள். பகலில் ஏற்பட்ட காயம் மனத்தில் இன்னொரு வடுவாய் மாறியிருந்தது. பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாது. நிறைய பாரங்களைச் சுமக்க வேண்டி இருக்கிறது.

நடந்தாள். மாலை வெயில் நீளமான நிழல்களை நழுவ விட்டது. அவளுடைய ஒரே ஆறுதலான நந்தகுமாரை நாடி நடந்தாள். இந்நேரம் ஸ்கூலில் கலெக்டர் வந்திருப்பார். நந்தகுமார் அவளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். பரிசு வாங்கப் போகிறான். பரிசு வாங்கப் போகிறான் என் மகன். என் மகன்!

"இந்திரா."

அந்தக் குரல் அவளை நிறுத்தியது. திரும்பினாள். பாண்டியன் நின்றிருந்தான் பக்கத்தில். இந்திராவிற்குப் பகல் நேரத்து அவமானம் நினைவுக்கு வர முகம் சுருங்கினாள்.

"ரொம்ப அவசரமா?"

"ஆமா" என்றாள்.

"நான் ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசலாம்னு...."

"எம் மகன் ஸ்கூல்ல கலெக்டர் கையால் ப்ரைஸ் வாங்கப் போறான். அதைப் பாக்கத்தான் போய்ட்டிருக்கேன்."

"இது அதைவிட முக்கியமான விஷயம். கல்யாண விஷயம்."

இந்திரா சட்டென்று மகிழ்ந்து போனாள். கல்யாண விஷயம் என்றால், பரிமளா தங்கராஜு விஷயமாக இருக்க வேண்டும்.

"சொல்லுங்க" என்றாள், சுற்றிலும் பார்த்துக் கொண்டே.

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா, நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு...." வாக்கியத்தை முடிக்காமல் பாண்டியன் அவள் முகத்தை, ஒரு வெட்க முறுவலுடன் உன்னிப்பாகப் பார்த்தான்.

(தொடரும்)

இவருடைய பற்களுக்கு
இவர் பாதுகாப்பு அளித்துள்ளார்



இந்த ஃப்ளோரைட் பாதுகாப்பினை
ஸிபாகா ஃப்ளோரைட் அளித்துள்ளது



உங்கள் பற்கள்
பல்லாண்டு நீடித்திருக்க,
சொத்தை விழுவதிலிருந்து
அவைகளைப் பாதுகாக்க வேண்டும்.
இதோ ஸிபாகா ஃப்ளோரைட். அவைகளுக்கு ஃப்ளோரைட் மூலம் இன்றியமையா பாதுகாப்பளிக்கிறது. ஏனெனில், தீங்கு விளைவிக்கும் அமிலங்கள் பற்களின் பரப்பைத் தாக்கும்போது, பற்களினால் கிரகிக்கப்பட்ட ஃப்ளோரைட், பல்லின் எனாமலுக்கு சொத்தையை எதிர்க்கும் ஆற்றலைக் கொடுக்கிறது. இதன் மூலம் பற்சிதைவு ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தப்படுகிறது.
பற்சிதைவையும் சொத்தையையும் ஸிபாகா ஃப்ளோரைட் உபயோகித்து தடுத்து நிறுத்துங்கள்.

உங்கள் பற்கள் பல்லாண்டு வாழ

ஸிபாகா ஃப்ளோரைட்
டூத்பேஸ்ட்

இந்தியாவின் முதன் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

ULKA-HCG-CF-12-86– TAM

ஒரு 'புலி' பூனையாகிறது!

ஜெ.எஸ்.ராகவன்

தலைவரின் நெற்றிக் கண்ணிலிருந்து தப்பி, ஏதேனும் வாரியத்திலாவது போய் விழுவோமா என்று தெரிந்து கொள்ளத் துடிக்கும் பகுத்தறிவுப் போராளியிலிருந்து, 'நம்ம மொதல், ரெண்டாவது சம்சாரங்களுக்கு ஒத்துப் போவதில்லீங்க. அதனால் பரிகாரமா மூணாவது ஒண்ணைக் கட்டிக்கலாமான்னு பார்த்துச் சொல்லுங்க' என்று கேட்டுக் கொண்டு வரும் செண்ட் வாசனைப் பேர்வழிகள் வரை ஒருத்தர் கூட அன்றைக்குத் தன்னைத் தேடி வராத வருத்தத்தில் இருந்தார் ஜோதிடப்புலி சோமசுந்தரம்.

"என்னப்பா, யாரும் வரலியேன்னு பார்க்கிறீங்களா?" என்று கேட்டுக் கொண்டு உள்ளே வந்தாள் யக்ஞப் பிரியா. "ஏன் ஒருத்தரும் வரலேங்கிற காரணத்தைத் தெரிஞ்சுக்க உங்க ஜாதகத்தைப் பார்க்க வேண்டாம். பேப்பரைப் பாருங்க: இன்னிக்கு பந்த்!"

"ம்... உனக்கு இந்த ஜோதிடம், ஜாதகம், கைரேகை, எல்லாம் வேடிக்கை சமாசாரம் தான். இதனோட அருமை உனக்குத் தெரியாது. நம் முன்னோர்கள்..."

"போங்கப்பா. இந்த இருபதாம் நூற்றாண்டு ரோபோ, ராக்கெட், சாடிலைட், கம்ப்யூட்டர்னு டாப் கியர்லே போயிண்டிருக்கும் போது, நீங்க அம்சம், தோஷம், பிரதோஷம், செவ்வா தோஷம்னு அடுக்கிண்டு போனால் யாருப்பா..."

"என்ன செய்யறது. எனக்குப் பழையது தான் பிடிக்கும். அதிலே இருக்கிற சக்தி..."



"அந்தப் பழையதைக் கூடப் புதிய பாணியிலே கொடுக்கத் தெரியணும் அப்பா. அப்போதான் அதிலே கவர்ச்சி இருக்கும்."

"அது சரிம்மா. உனக்குத் தெரிஞ்ச பையன். ரொம்ப நல்லவன். அப்படின்னு சுத்தி வளைச்சு அன்னிக்குச் சொல்ல ஆரம்பிச்சியே... அவனோட ஜாதகம் இருக்கா?"

"ஜாதகம் இல்லேப்பா. போட்டோதான் இருக்கு."

போட்டோவைப் பார்த்த ஜோதிடப்புலி ஈழத்துப் புலியாகச் சீறுகிறார்.

"யக்ஞப் பிரியா! இவனையா நீ கல்யாணம் பண்ணிக்கப் போறே? நடக்காது; நடக்கவே நடக்காது. தினப் பொருத்தத்திலிருந்து வேளைப் பொருத்தம்வரை, தசப் பொருத்தமும் சேர்ந்து இருந்தாக் கூட இந்தச் சோமசுந்தரம் அனுமதிக்க மாட்டான்... பையனா இவன். இடியட்..ஸ்கௌண்ட்ரல்..."

கோபத்துடன் ஜோதிடப்புலி கிரகத்திலிருந்து வெளிநடப்புச் செய்ய, யக்ஞப் பிரியா விழிக்கிறாள்.

மறுநாள் குளுகுளு கம்ப்யூட்டர் ஷோரூமில் ஹார்ட்வேர், மற்றும் சாஃப்ட் வேர் புடைசூழ உட்கார்ந்திருக்கும் கிருஷ்ணகுமார், யக்ஞப் பிரியாவைப் பார்த்தவுடன், அவளுடைய அழகிய தலைக்குள் இருக்கும் குட்டி கம்ப்யூட்டரில் அன்று 'சந்தோஷம்' புரோக்ராம் செய்யப்படவில்லை என்று உணர்கிறான்.

"கிருஷ்ணகுமார், உங்களுக்கு இவரைத் தெரியுமா?"

யக்ஞப் பிரியா காட்டிய போட்டோவைப் பார்த்துவிட்டுப் பயங்கரமாகச் சிரிக்கிறான்.

"தெரியாமலா? போன வாரம் கிருஷ்ணம்பேட்டை போற ரோடிலே பராக்குப் பார்த்துண்டு என் ஹீரோ ஹோண்டாவிலே சொத்துன்னு தானே வந்து விழுந்த ஆளாச்சே..."

"அப்படியா? அப்புறம்?"

"ரோட்டைப் பார்த்துப் போறதானேய்யா இல்லாட்டி வீடு திரும்பாமல் நேரே கிருஷ்



ணும்பேட்டையே போக வேண்டியது தான்னேன். அதுக்கு இவர், "டேய்! என்னை யாருன்னு நினைச்சிண்டே? நான் ஜோதிடப்புலி சோமசுந்தரம்டான்னு கத்தி விட்டு, சமீபத்திலே நான் 'அப்ஜு உத்சவ்'லே பார்த்த ஒரு கோர தாண்டவத்தை அப்பட்டமா காப்பி அடிச்ச மாதிரி ஆடிக் காமிச்சார். அது சரி... ஆமா... அவர் போட்டோ உன்கிட்டே எப்படி...? யார் இவர்?"

"இவரா... இவர் வேறு யாரும் இல்லே. என்னைப் பெற்றவர், என்னோட அப்பா, தந்தை, பாரெண்ட், ஃபாதர் போறுமா?"

"ஓ... எ... இ... இ... உ... அ.. அ... வா?" கிருஷ்ணகுமாரின் தமிழ் பத்திரிகைக் கேள்வி — பதில் சங்கேத மொழியைப் புரிந்து கொண்ட யக்னப் பிரியா பலமாகப் பெருமூச்சு விட்டாள்.

"மைகாட்! உங்க ரெண்டு பேர் போட்டோ ஒத்துப் போகலே. நம்ம ஜாதகம் ஒத்துப் போகுமா தெரியலே..."

கிருஷ்ணகுமாரின் மூளை அவனைச் சூழ்ந்திருக்கும் கம்ப்யூட்டர்களைப் போல் பரபரவென்று வேலை செய்கிறது.

"வெய்ட் யக்னப் பிரியா, உங்கப்பா பெயரை மறுபடியும் சொல்."

"ஜோதிடப் புலி, சோமசுந்தரம்."

"பிறந்த தேதி, நேரம், ஊர்?"

"29.2.1928, நடுநிசி 12 மணி, மன்னார்குடி."

"உங்கப்பா லீப் இயர்லே 'அந்த'த் தேதியிலே பிறந்தவரா? அதான் அப்படி குதிக்கிறார். அவரை எப்படி வளைச்சுப் போடறேன் பார். ராஜீவ், பவாரை வளைச்ச மாதிரி!"

"கிருஷ்ணகுமார், என்ன செய்யப் போறீங்க?"

"தும்பையும், வாலையும் சேர்த்துப் பிடிக்கப் போறேன்!"

நிறைந்த அமாவாசை, சுக்ர வாரம், திருவோண நட்சத்திரம், கடக லக்னம் கூடிய சுபவேளையில் 'யக்னப் பிரியா ஜாதக கம்ப்யூட்டர் சென்டர்' திறப்பு விழாவிற்காக யக்னப் பிரியாவும், கிருஷ்ணகுமாரும், டிஸ்கெட்டும், பிரிண்டரும் போல் இணைந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

"ஜோஸ்யமும், கம்ப்யூட்டரும் இரு துருவங்கள். இதை ஒண்ணு சேர்க்க முடியும்னு நான் நினைக்கவே இல்லே."

"ரொம்பப் பேருக்குத் தெரியாது, யக்னு. பிறந்த நாள், நேரம், இடம் இந்த விவரங்களை கம்ப்யூட்டரில் செலுத்தி, அதன் காதைத் திருகினால், அது பதினெட்டு அம்சக் கணக்குகளைத் துல்லியமாகப் போட்டுக் கொடுத்துடும். ராசி, அம்சம், பாவம் மூன்றும் கரெக்டாத் தெரியறதினாலே, அந்தக் குறிப்புக்களை வெச்சுண்டு ஒரு ஜோஸ்யர் ஜாதகப் பொருத்தம், எதிர்காலம், பரிகாரம் போன்ற சமாசாரங்களை ஈசியாச் சொல்லிடலாம்."

"அப்படின்னா, கம்ப்யூட்டர் கணக்குத் தான் போடுமே தவிர, எதிர்காலப் பலன் சொல்ல எங்கப்பா மாதிரி 'புலி'கள் தான் வேணும்னு சொல்லுங்க!"

"அது கூட வேண்டாம்மா. ஜாதகக் கணக்கு வழக்குகளோட சம்பந்தப்பட்ட பலாபலன்களையும் ப்ரோக்ராம் பண்ணிட்டா, கம்ப்யூட்டர் அந்த வேலையையும் பார்த்துக் கொள்ளும். அப்புறம் என்னை மாதிரி ஆட்களுக்கு வேலையே இல்லே."

யக்னப் பிரியா கிருஷ்ணகுமாரைப் பார்க்கும் கோணல் பார்வையைக் கவனித்த ஜோதிடப்புலி இப்போது கூடத் தனக்கு வேலை இல்லை என்று உணர்ந்து பூனை போல் வெளியேறுகிறார்.

கிருஷ்ணகுமார் காதில் யக்னப் பிரியா கிசுகிசுக்கிறாள்.

"அப்பாவும் நீங்களும் இப்படி ஒண்ணா சேர்ந்ததை சிம்பாலிக்காகக் காட்டணும்னா என்ன செய்யணும் தெரியுமா?"

"கம்ப்யூட்டரின் நாலு மூலைக்கும் மங்களகரமா மஞ்சள் தடவணும்!"

புதுக் கவிதைப் போட்டி — 1

9.11.86 கல்கி இதழ் மேலட்டைக்குப் பொருத்தமான கவிதை



வேர் வரை போகட்டும்!



முதல் பரிசுக் கவிதை:

ஆரவாரமாக மேலெழும்பும் கனவுகளைத்தான்
ஆவலாகப் பார்க்கிறோம் நாம்.
பார்வை கொஞ்சம் பாதம்வரை போகட்டும்
பறக்கத் துடிக்கும் பசுமை இலைகளின்
பசிக்குணவூட்டும் வேர்வரை போகட்டும்
பிடிப்பின்றிப் போய்விட்டால்
பறப்பதொன்றும் சாத்தியமில்லை
வேர்களை முதலில் பாதானம் அனுப்புங்கள்
விண்ணைத் தொடர்வது விரைவாகும் பிறகு

— க. தங்கவேடேகவரன்,
இரண்டாமாண்டு சட்டவியல்,
பி.எம்.எஸ். சட்டக் கல்லூரி,
பெங்களூர்—560 019.

இரண்டாம் பரிசுக் கவிதை:

பூச்சூடும்
கனவுகளின் சிலிர்ப்பை
விரல்கள்
தளிரிடம் சொல்கையில்
தளிர் சூடிக் கொண்டது
விரல்களையே பூவாக!

— எம். முத்துவடுகு.
+ 2,
ச. இராம மேல்நிலைப் பள்ளி,
நாட்டரசன்கோட்டை.

பல தாழ்வாரங்களில்
வேலைக்காகத்
தவங்கிடந்து
அலுத்துப் போய் —
இந்தத் தாவரத்திடம்
ஆறுதலடையும்
சோகவனச் சிதை!

— எஸ். தாரா
+ 2
என்.எல்.ஸி. பெண்கள் ஹையர் செகண்டரி
பள்ளி, நெய்வேலி.

துளிராயிருந்தேன்
துக்கமில்லை!
மலர்ந்தேன்
மனத்திலே
மணக் கவலை!

— ஜெ. நரசிம்மன்,
இரண்டாம் ஆண்டு எம்.எஸ்ஸி — கணிதம்
ஏ.எம். ஜெயின் கல்லூரி,
சென்னை

என்னைக் காணவில்லை 22

மூதுகுக்குப்பின்னால் தூரத்தில் பிரேமா வருவதை உணராமல் பரத் கேட்டான். "ஏன் முருகேஷ், பிரேமாவை எப்படி விசாரிக்கிறது? எதைச் சொல்வா?"

"அசோக்கைப் பார்க்கப் போனேன். காணோம். இங்கேதான், வந்திருக்கணும்னு நினைச்சு வந்தோம். சினிமா போயிருக்கிறதா வாட்ச்மேன் சொன்னான். எங்கே அசோக்? இப்படித்தான் கேக்கணும் பரத்" என்றார் முருகேசன்.

"நிச்சயம் பொய்தான் சொல்வா."

"சொல்லட்டும். நாமும் பொய்யை நம்பிப் புறப்படலாம். நேரா இன்ஸ்பெக்டர் நாதனைப் பார்க்கலாம். விவரங்களைச் சுருக்கமாகச் சொல்லி, பிரேமாவைக் கைது செஞ்சி விசாரிக்க விஷயங்களை வரவழைக்க வேண்டிய அவசியத்தைச் சொல்லி, முறைப்படி பெண் போலீஸோட வந்து அரெஸ்ட் பண்ணலாம்."

"எல்லாம் சரி. பிரேமா திரும்பி விடுதிக்கு வருவான்னு எப்படி நீ எதிர்பார்க்கிறே? என் கணிப்பு—இன்னைக்கு ராத்திரி முழுக்க, வரமாட்டா. அப்படியே வந்தாலும், நீசொல்ற மாதிரி ஃபார்மலா விசாரிச்சுட்டுப் போறது தான் தப்பு."

"பின்னே என்ன பண்ணணும்னு சொல்றே?"

"ஒரு சீன் கிரியேட் பண்ணியே ஆக..." என்ற பரத் காலடி ஓசை கேட்டுத் திரும்பி, "வெல்கம் மிஸ் பிரேமா, ஐ யாம் பரத். நினைவிருக்கா?" என்றான்.

சொர்க்கத்துக்கு விலாசம் விசாரித்துக் கொண்டிருப்பான் என்று ஈஸ்வரன் சொன்ன பரத் கண்ணெதிரே நின்று புன்னகை புரிய.... ஐந்து அடி மூன்று அங்குலங்களும் அதிர்ந்தாள் பிரேமா.

"என்ன சார் இது. இந்த நேரத்திலே? இவரு......"

"இன்ஸ்பெக்டர் முருகேசன். உங்க கூட நாங்க ரெண்டு பேரும் பேசணும். ஹாஸ்டல் உள்ளே விசிட்டர்ஸ் ஹாலுக்குப் போய்டலாமா?"

"சார், இப்ப மணி ஒண்ணு."

"அதனால என்ன? ஒரு குமரிப் பொண்ணு தனியா நடமாட முடிகிற ஒரு நேரம். நட்சத்திரம், ராகு காலம் பார்க்க முடியாது. வர்றீங்களா மிஸ் பிரேமா" என்று குரலில் அழுத்தம் தந்ததும், தயங்கி நடந்தாள்:

"வாட்ச்மேன்; போய்யா, வார்டனம்மாவைக் கூட்டிட்டு வா."

பத்து நிமிடத்தில்.... விசிட்டர்ஸ் ஹாலில் ஏழெட்டுப் பெண்கள் கூடி நிற்க.... தலை கலைந்த வார்டனம்மா, "என்ன சார் இது அர்த்த ராத்திரில கலாட்டா பண்றீங்க? உங்க கடமையைத்தான் செய்யறீங்கன்னாலும், அதுக்கு நேரம் காலம் இல்லையா?" என்றாள்.

பேசி முடித்துவிட்டு ரிசீவரை வைத்த முருகேசன்; "ஒரு கொலை—முக்கியமான குற்றம். அதிலே சம்பந்தப்பட்டவங்களை நேரம் காலம் பார்த்து விசாரிக்க முடியாது. தவிர, இன்னொரு கொலையைத் தவிர்க்க வேண்டியிருக்கு."

லேசான நடுக்கத்தோடு நின்று கொண்டிருந்த பிரேமாவை நெருங்கினான் பரத். "சொல்லும்மா, அசோக் எங்கே இப்போ?" என்றான்.

"தியேட்டர்லேர்ந்து வெளியே வந்து அவர் வீட்டுக்கு அவர் போய்ட்டார். என் ஹாஸ்டலுக்கு நான் வந்துட்டேன்."

"நான் நம்பணும் இதை...?"

"உங்களுக்கு இதிலே என்ன சந்தேகம்?"

"சரி, இதை விடுங்க. ஈஸ்வரன் யாரு?"

"எந்த ஈஸ்வரன்?"

"என்னைக் கடத்தி மிரட்டினானே அந்த ஈஸ்வரன்."

"உங்களைக் கடத்தினாங்களா?"

"பாட்டில் உபயோகிக்கிற பாப்பாவா வேஷம் போட வேணும் பிரேமா. நீ நல்லா வேஷம் போடக்கூடியவங்கிறது தெரியும் எங்களுக்கு. எங்க நேரத்தை மிச்சம் பண்ணினா நல்லது. இப்போ போலீஸ் ஜீப் வரும். பொம்பளை போலீஸ்காரங்க வருவாங்க. உன்னை ஏத்தி அழைச்சுட்டுப் போவாங்க. இதைத் தமிழ்ல கைது செய்தல்னு சொல்வாங்க."

"என்னது? அரெஸ்டா? என்னையா? எதுக்கு?"

"நாகராஜனைக் கொன்னதுக்கு."

"நான்சென்ஸ். நான் எதுக்குக் கொல்லணும்?"

"அதைத்தான் கேட்கிறோம். நீயும் உங்கண்ணனும் சேர்ந்து எதுக்காக நாகராஜனைக் கொன்னீங்க?"

"பொய்! எனக்கு எதுவும் புரியலை."

"சரி, உன் இஷ்டம். ஸ்டேஷனுக்கு வந்து தான் சொல்வேன்னு சொல்றே. பரவாயில்லை. பிடுங்கறதுக்குத் தோதா நீள நீளமா நகங்கள் வச்சிருக்கே. இப்போ நவீனமா நிறைய இயந்திரங்கள் வாங்கியிருக்காங்க டிபார்ட்மெண்ட்ல. உயிரை மட்டும் வச்சுக்கிட்டு டிசைன் டிசைனா சித்ரவதை செய்யும். நரக வாழ்க்கைக்கு உனக்கு ஒத்திகை தேவைப்

படுதுன்னு விரும்பறே. ரைட். அனுபவி.''

டெலிபோன் ஒலிக்க.... வார்டன் எடுத்து. ''இன்ஸ்பெக்டர், உங்களுக்கு'' என்றதும் முருகேசன் வாங்கிக் கொண்டார்.

''ஹலோ, முருகேசன் பேசறேன், சரி, சரி, நான் பார்த்துக்கறேன், நீங்க ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்று வைத்தார்.

பிரேமாவை நெருங்கினார். ''ஒரு கான்ஸ்டேபிளை அசோக்வீட்டுக்குப்போய்ப்பார்த்து போன் பண்ணச் சொல்லியிருந்தேன். இன்னும் வரல்லையாம். சொல்லிடும்மா. அழகா இருக்கே. முகம் பளபளன்னு இருக்கு. லாக்கப்ல வச்சி விசாரிக்கிறப்போ கொஞ்சம் கோணல் மாணலாய்டுவே. கல்யாணமாக வேண்டிய பொண்ணு. எங்கே அசோக்?''

''எனக்குத் தெரியாது'' என்றாள் பிரேமா அழுத்தமாக.



வாசலில் ஜீப் வந்து நிற்கும் ஓசை கேட்டதும்....

''சரி முருகேஷ் விட்டுடு. மிச்சத்தை ஸ்டேஷன்ல வச்சி முறைப்படி விசாரிச்சா சொல்லிடுவாங்க, தன்னாலே. வாங்கம்மா பிரேமாம்மா'' என்றான் பரத்.

''வர முடியாது. ஏன் வரணும்?''

''உன்னைச் சந்தேகத்தின் பேரிலே கைது செய்யறோம்'' என்றார் முருகேஷ்.

இதற்குள் ஒரு பெண் சப்–இன்ஸ்பெக்டரும், நான்கு பெண் கான்ஸ்டேபிள்களும் வந்து நின்றார்கள்.

''வாங்க மேடம். இந்தப் பொண்ணுதான். கூட்டிக்கிட்டுஸ்டேஷனுக்குப்போங்க.நாங்க பின்னாலேயே பைக்ல வர்றோம்.''

''வாரண்ட் இருக்கா?'' என்றாள் பிரேமா.

''சட்டம் பேச வேணாம் பாப்பா. தோத்துப் போய்டுவே.''

''என்ன சந்தேகம் என் பேர்லே?''

''நீயும், உங்க அண்ணன் ஈஸ்வரனும் சேர்ந்து....''

''வெய்ட், எனக்கு அண்ணன் யாரும் இல்லே.''

''இல்லாத அண்ணனுக்கு நீ எழுதின லெட்டர் பார்க்கிறியா?''

பரத் துண்டுகளை இணைத்து ஒரு வெள்ளைக் காகிதத்தில் ஒட்டியிருந்த கடிதத்தைப் பாக்கெட்டில் இருந்து எடுத்துக் காட்டி, ''இது ஈஸ்வரன் ரூம்ல குப்பைக் கூடையிலே பொறுக்கினதும்மா. வர்றியா இப்போ? முரண்டு பண்றதோ, எதிர்த்துக்கிறதோ, வேஸ்ட். பிகாஸ், திஸ் ஈஸ் க்ளைமாக்ஸ். அழைச்சுட்டுப் போங்க மேடம்.'' என்றான்.

அரை மணி நேரத்தில் ஸ்டேஷன் லாக்கப்பில் பிரேமா, வெளியே பரத், முருகேஷ், நாதன் இருக்க... லாக்கப்பிற்குள் இருந்து வியர்த்துப் போய் வெளியே வந்த சப்–இன்ஸ்பெக்டர் சாரதா, ''ரொம்ப பிடிவாதம் பிடிக்கிறா. எந்தத் தகவலும் சொல்ல மாட்டேங்கறா. ஈஸ்வரன் வீடு எங்கே இருக்குன்னும் சொல்லலை. அசோக் இப்போ எங்

பட்டுக்கோட்டை பிரபாகர்



கேன்னும் சொல்லலே. எது கேட்டாலும் தெரியாது. தெரியாதுன்ரு. அறைஞ்சி, அறைஞ்சி என் கைதான் எரியுது. இன்னும் மோசமான முறைகள்ல இறங்க வேண்டி யிருக்கும்னு நினைக்கிறேன். இப்போ மயக்க மாவிட்டா, தெளியட்டும்'' என்ருர்.

பரத் நகம் கடித்து. "சார், அசோக் இப்போ ஈஸ்வரன் கிட்டேதான் இருக்கணும், ஈஸ் வரேனுட வீட்லேதான் என்னைக் கடத்திப் போய்க் கட்டிப் போட்டிருந்தாங்க. கொண்டு போனப்போ, கண், காது எல் லாத்தையும் கட்டிட்டாங்க. கொண்டாந்து தண்டவாளத்திலே போட்டப்போ நான் மயக்க நிலேயிலே இருந்தேன். ஆனு.... இப்ப ஒரே ஒரு வழி இருக்கு. அந்த இருப்பிடத்தை என்னுல ஓரளவு யூகம் பண்ண முடியும். ஒரு அம்பாஸிடர் கார் வேணும். நாதன் சார், ஒரு ஜீப்பிலே நீங்க, நிறைய கான்ஸ் டேபிள்களோட அந்தக் காரைத் தொடர்ந்து வாங்க.'' என்ருன்.

'பதினேந்து நிமிடங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.'

''முருகேஷ், கல்யாண மண்டபத்துக்குப் பக்கத்திலே என்னை டாக்சில கடத்தின ஸ்பாட்டுக்குத் காரை ஓட்டச் சொல்லு. அங்கே ஆரம்பிக்கலாம்'' என்ருன் பரத்.

அம்பாஸிடர் காரும், பின்னுல் ஜீப்பும் தொடர்ந்தன.

மயக்க நிலேயில் அசோக் கிடக்க.... சற்றுத்தள்ளி அவனேப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்த ஈஸ்வரன், கதவு மூன்று முறை தட்டப்பட்டதும், எழுந்து சென்று திறந்தான். உள்ளே வந்தான் தோஸ்த்.

''கொண்டாந்தியா?'' என்ருன் ஈஸ்வரன்.

''இதோ. வயித்துக்குள்ளே போய் ஒரே மணி நேரத்திலே ஆள் காலி ஈஸ்வரன். இவன்தானு அசோக்! என்ன செய்யப் போறே?''

''பாரு'' என்று ஒரு டம்ளரில் நீர் எடுத்து, அவன் கொடுத்த சிறிய பொட்டலத்தைப் பிரித்து உள்ளே இருந்த நீல நிறப் பொடி யைக் கொட்டி, டம்ளரை அசைத்து, அசைத் துக் கலக்கினுன்.

பாத்ரூமுக்குப் போய் ஒரு சொம்பில் நீர் கொண்டு வந்து கண் மூடிப் படுத்திருந்த அசோக்கின் முகத்தில் பளிச் பளிச் என்று தெளித்தான்.

அசோக் இமைகளேப் படபடத்து விழித் தான். வாயால் சுவாசித்தான். சூழ்நிலே யைப் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டான்.

''என்ன முழிக்கிறே, எழுந்திரி தம்பி'' என்று கை கொடுத்து எழுப்பிச் சுவரோடு சாய்த்து உட்கார வைத்து. ''இந்த பேப்பரை யும், பேனவையும் பிடி, எழுது....'' என்ருன்.

''என்ன எழுதணும். நீங்க யாரு?''

''அது அப்புறம். இது துப்பாக்கி. இதை அழுத்தினுச் சுடும். சுட்டா நீ செத்துப் போவே, அதை நீ விரும்ப மாட்டே. அதனுல நான் சொல்ற மாதிரி எழுதியாகணும், இப்போ. ம், எழுது.''

எதுவும் புரியாமல் அசோக் விழித்து: ''பிரேமா எங்கே? என்ன இதெல்லாம்?''

''டேய்! இன்னும் ஒரு கேள்வி கேட்டே, வாயிலேயே சுடுவேன். எழுதுடான்னு...'' என்று அவன் தலேயின் முன்னுச்சி மயிரைப் பிடித்துச் சுவரில் நச் என்று மோத..., துப் பாக்கியைப் பார்த்து லேசான நடுக்கம் கொண்ட அசோக், ''என்ன எழுதணும்?'' என்ருன்.

''நான் குற்றவாளி. என்னடா பார்க்கிறே. எழுதுடா. நான் குற்றவாளி, போலீசில் மாட்ட விருப்பம் இல்லே. ஆனுல் குற்றம் என்னை உறுத்துகிறது. அதனுல் நான் தற் கொலே செய்து கொள்கிறேன். இப்படிக்கு அசோக், எழுதியாச்சா?''

அசோக் தயங்க... ஒவ்வொரு வார்த்தை யையும் மிரட்டி மிரட்டி எழுத வைத்தான்.

''சரியா ஐம்பது கிலோ மீட்டர் வேகத் திலே போப்பா. சீரா போகணும். நடுவிலே எங்கேயும் பிரேக் அடிக்கக் கூடாது. நான் சொல்றப்போ திருப்பணும். ம். ஸ்டார்ட் செய்'' என்ருன் பரத். காரின் பின் ஸீட்டில் சாய்ந்து கொண்டான். கண்ணே மூடிக் கொண்டான். அருகில் முருகேசன்.

கார் புறப்பட்டது.

பின்னுல் ஜீப்பும் புறப்பட்டது.

பரத் மனத்திற்குள் நிதானமாக 1,2,3,4, என்று எண்ண ஆரம்பித்தான். ஏற்கெனவே மனத்தில் நிறுத்தின எண்களே நினைவுக்குக் கொண்டு வந்து.... 74 வரும்போது ''டிரை வர், லெஃப்ட்லு ரோடு பிரியறதா?'' என்ருன் கண்களேத் திறக்காமல்.

''ஆமாம் சார்.''

''அதிலே திரும்பிப் போய்க்கிட்டே இரு... நேரா....''

மீண்டும் எண்ணத் தொடங்கினுன். 456, 457.... 458....

''டிரைவர் ரைட்லே திருப்புங்க.''

காரும், ஜீப்பும் திருப்பப்பட்டன.

செக்ரட்டரி: ஏம்மா, இந்த பெர்சனல் கம்ப்யூட்டரை 'தண்டம். தூக்கிப் போடு'ன்னு சொன்னீங்க!

நடிகை: பின்னே என்ன? எல்லாம் தப்பா காண்பிக்குது. எனக்கு நடந்த கல்யாணங்களை விட, விவாகரத்தை அதிகமா காண்பிக்குது.

— ராமமோகன்



பயணம் தொடர்ந்தது.

"பரவாயில்லே, கையெழுத்து அழகாவே இருக்கு" என்று வாங்கிப் பார்த்த ஈஸ்வரன், "சரி, எழுதிக் கிளிச்சுப் போயிருப்பே. இந்தா, டிரிங்ஸ் சாப்பிடு" என்று டம்ளரை நீட்டினான்.

"வேணாம்" என்றான் அசோக்.

"சும்மா சாப்பிடுப்பா."

"இல்லே, வேணாம்."

"அட! சாப்பிடுடா!"

வாங்கி மடக், மடக் என்று குடித்தான் அசோக்.

"வெரிகுட். படுத்துக்க, இனிமே உனக்குப் பர்மனென்ட் ரெஸ்ட்தான். யாரும் உன்னைத் தேடி அலைய மாட்டாங்க. யாரும் உன்னைத் தொந்தரவு செய்யவும் மாட்டாங்க."

கண்கள் செருக... காட்சிகள் குழம்ப... நாக்கு உளற.... அசோக் திணறினான்.

"என்ன செய்யப் போறே இவனை?"

"சிம்ப்பிள். அய்யா முழுசும் அடங்கினதும் பாக்கெட்ல லெட்டரை செருகிட வேண்டியது. கொண்டு போய் பீச்சாங்கரையிலே போட்டுட வேண்டியது. போலீசோட ஃபைல் முடிஞ்சுடும். நம்ம கவலையும் முடிஞ்சுடும்."

"பா.... பா.... பாவிகளா!" என்றான் அசோக்.

"யாரு பாவி? உங்கப்பா பாவி! பாவம் அதனாலே நீயும் படறே. கடைசியா, இந்த உலகத்துக்கு ஏதாச்சும் சொல்ல விரும்பறியா? சும்மா சொல்லேன், சாக்ரடீஸ் மாதிரி, உன் கல்லறையிலே எழுதி வச்சிடலாம். ஒரு கடைசி ஆசையை நிறைவேத்தின புண்ணியமாவது கிடைக்கட்டுமே எனக்கு. என்ன?"

அதற்கு மேல் எதுவும் பேச இயலவில்லை அசோக்கால். வயிற்றில் சங்கடம் உணர்ந்தான். எதுவோ அறுத்தது. அரித்தது. பிசைந்தது. பிடுங்கியது. விக்கல் வந்தது. மயக்கம் வந்தது. வாயோரத்தில் எச்சில் நுரை தள்ளியது.

சுவரோரம் சாய்ந்திருந்தவன் தொய்ந்து விழுந்தான்.

★

923... 933... 934... 935... 936... 937..... 938....

"நிப்பாட்டு அப்படியே" என்றான் பரத்.

காரும், ஜீப்பும் கர்ர்ர்ரக் என்று டயர் தேய்ந்து நிற்க....

"வெளியில் என்ன சத்தம், கார் சத்தம் மாதிரி இல்லே? நீ பாரு" என்றான் ஈஸ்வரன்.

அவன் நண்பன் கதவை லேசாகத் திறந்து பார்க்க...

பரத் கத்தினான்:

"அதோ.... கதவு திறந்து பார்க்கிறான் பாருங்க. அந்த வீடுதான். அவன் ஈஸ்வரன் ஃபிரண்டு. டாக்சி டிரைவர். வாங்க ஓர் அதிரடி நடத்திடலாம்."

"அப்புறம்?" என்றான் சுசிலா.



''ஆபீஸ்லே இருக்கிற இரண்டு கம்ப்யூட்டர்களுக்கும் அடிக்கடி சண்டை வரதே. ஏன்?''

''எல்லாம் வயசுக் கோளாறுதான். ஒண்ணு முதல் ஜெனரேஷன் கம்ப்யூட்டர். அடுத்தது மூணாவது ஜெனரேஷன் கம்ப்யூட்டர்!''

— ராமாராவ்

''எனக்குத் தூக்கம் வருது சுசி. காலைல சொல்றேனே....''

''எனக்கு டென்ஷன்ல பிளட் பிரஷர் ஏற்பட்டு ஹார்ட் வெடிச்சா பரவால்லையா?''

''ஹார்ட் வெடிச்சா எல்லாமே வெடிச்சிடும் சுசி. அதை என்னால சகிக்க முடியாது. ஒன் லைன் ட்ரீட்மெண்ட் மாதிரி சொல்லிடறேன். கேளு கேள்வியை?''

''நாகராஜனைக் கொன்னது யாரு?''

''ஈஸ்வரன்.''

''ஈஸ்வரன் யாரு?''

''பிரேமாவோட அண்ணன்.''

''பிரேமா யாரு?''

''ஈஸ்வரனோட தங்கை.''

''இந்தத் திமிர்தானே கூடாது? ஒழுங்கா சொல்லுங்க. என்ன பகை?''

''நாகராஜனோட ஃபாக்டரில வைத்தியநாதன்னு ஒரு தொழிலாளி. அவன் யூனியன்ல் செல்வாக்கு வளர்த்துக்கிட்டுத் தொழிலாளர்களுக்காகப் போராட ஆரம்பிச்சான். நாகராஜனுக்கு யூனியன்ல யாராச்சும் வளர்ந்துட்டா ஆகாது. உடனே வளைச்சுப் போடுவாரு, இல்லே ஒடிச்சுடுவாரு. வைத்தியநாதனை வளைக்க முடியலே. அதனால் நைட் ஷிஃப்ட்ல லோடிங் நடக்கறப்போ, வைத்தியநாதனுக்கு கம்பெனி லாரி ஏறி ஒரு செயற்கை விபத்து ஏற்படுத்தினார். வைத்தி காலி. ஃபாக்டரி ஆக்ஸிடெண்ட்ன்னு பணம் வாங்கிட்டு போலீஸ் சலாம் போட்டுடுச்சு. அதிலே பாதிக்கப்பட்டவங்க ரெண்டு பேரு. பிரேமா அண்டு ஈஸ்வரன். இவங்க அப்பாதான் வைத்திய நாதன். ஈஸ்வரன் விசாரிச்சான். லாரி ஓட்டின ஆசைங்கிற டிரைவரைத் தனியா அழைச்சுட்டு வந்து, கட்டிப் போட்டு மண்ணெண்ணெய் ஊத்தி, நெருப்புக் குச்சியைக் கைலே வச்சுக்கிட்டு உண்மையைச் சொல்டான்னு சொன்னதும், நாகராஜன்தான் பணம் கொடுத்து லாரியை விட்டு மேலே ஏத்தச் சொன்னாருன்னு உண்மையைக் கக்கிட்டான். அவனை விடுவிச்சுட்டுத் தனிப்பட்ட முறையிலே நாகராஜன் குடும்பத்தையே பழி வாங்க அண்ணனும் தங்கையும் தீர்மானிச்சாங்க. தங்கை அசோக்கை வளைச்சுப் போட்டு மாஞ்சி மாஞ்சி காதலிச்சா. வீட்டு விவரங்கள் எல்லாம் தெரிஞ்சுக்கிட்டா. நாகராஜனைக் கொல்லச் சந்தர்ப்பம் பார்த்தாள். அப்பாவுக்கும் பிள்ளைக்கும் லடாய் வந்ததும், கொலை செஞ்சி பழியை அசோக்மேலே போடத் தீர்மானிச்சுத் திட்டம் சொன்னா, தகவல் தந்தா, ஈஸ்வரன் செயல்படுத்தினான்.''

''எப்படி?''

''காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதிச்சு, பங்களாவுக்குள்ளே நுழைஞ்சு, நாகராஜனோட ரீடிங் ரூமிலே கட்டிலுக்கடியிலே மூணு மணி நேரம் காத்திருந்து.... நாகராஜன் உள்ளே வந்ததும் குத்திட்டு, வாசல் கதவைத் திறந்து வெளியேறி, மறுபடி காம்பௌண்ட் சுவரேறிக் குதிச்சு வந்துட்டான். தட்ஸ் ஆல் யுவர் ஆனர்.''

''அசோக்கை ஏன் தேடினாங்க?''

''வம்சத்தையே தீர்த்துடறதுன்னு தீர்மானம். அசோக்கை போலீஸ் பிடிச்சு தூக்கில் மாட்டும்னு சந்தோஷப்பட்டாங்க. அவன் தப்பிச்சதும், நாமே கண்டுபிடிச்சு தீர்த்துடலாம்னு முடிவு செஞ்சு.... மற்றவை உனக்குத் தெரியும்.''

''அசோக் பிழைச்சுடுவாரா பரத்?''

''ஆபத்தில்லேன்னுதான் டாக்டர் சொன்னார். உடனடியா கொண்டு போனதாலே உடனே ஸ்டமக் வாஷ் பண்ணி ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சுட்டார். ஒரு தடவை கண் திறந்து பார்த்தான். உயிர் பொழைச்சதும் பாவம், இன்னொரு அதிர்ச்சி இருக்கு அவனுக்கு.''

''என்ன அது?''

''பிரேமா துரோகின்னு இன்னும் தெரியாதே, அவனுக்கு?''

''பாவம் இல்லே? அவ்வளவு சொத்துக்களும் போச்சுதானே?''

''போகாது. நாகராஜன் அப்பா சம்பாதிச்ச சொத்துக்கள் மேலே அசோக்குக்கு உரிமை உண்டு. கோர்ட் மூலமா வக்கீல் வச்சுப் போராடித்தான் அதை அசோக் அடைய வேண்டியிருக்கும். மாயாவும் அவ அண்ணனும் இடையிலே ஏதோ பூந்து குழப்பம் செஞ்சு வச்சிருக்காங்க. எவ்வளவு விசாரிச்சாலும் அவங்க ஒத்துக்கப் போறதில்லே.''


''பரத் என் கவலை — அழகான அசோக் முன்போல கலகலப்பாகணும்'' என்றாள் சுசிலா.

''அதென்ன அழகான?''

''உண்மையைச் சொல்லத் தயக்கம் கூடாது பரத். இந்த அரசாங்கம் மோசம் பரத். வீடு இழந்தவங்களுக்கு வீடு, மாடு இழந்தவங்களுக்கு மாடு தர்றது மாதிரி, காதலி இழந்த அசோக்கிற்குக் காதலி ஏற்பாடு செய்யுமா? செய்யாது. அதனால் தனிப்பட்ட முறையிலே நான் இதிலே....'' என்றவளின் உதடுகளை விரல்களால் பிடித்து மூடினான் பரத்.

''கிள்ளி எடுத்துடுவேன் படவா, கிஸ் பண்ண வேண்டிய இடமாச்சேன்னு பார்க்கறேன்'' என்றான் பரத்.

(முற்றும்)





உங்களுக்கு, உங்களுடைய ஃப்ளோர் பிடிக்கவில்லையா?
ULKA-RH-3-86 TAM

ஸுமீத்தின் தனித்தன்மை


அதன் உயிர்நாடியாக அமைந்திருக்கும் கனரக மோட்டார்

கனரக மோட்டார் 30 நிமிடங்களுக்குத் தடைபடாமல் இயங்கும்.
விசேஷமாக டிசைன் செய்யப்பட்ட நான்கு ஜாடிகளுடன்
குறைந்த அளவுள்ள அரைவைக்கு ... அம்மியடைக்
சமையல் வேலைகள் அனைத்தையும் மிக விரைவாக
முடித்துத் தருகிறது ஸுமீத் டொமஸ்டிக் கிட்சன் மெஷின்.






உலர் அரவை:- மிளகாய் வற்றல், கரம் மசாலா 2 நிமிடங்களில்



ஈர அரவை:- உளுந்து, அரிசி மற்றும் தேங்காய் சட்னி 2 நிமிடங்களில்




மாமிசத்தைப் பொடிக்க 1 நிமிடம், பருப்புகளைப் பொடிக்க சில விநாடிகள்



தயிர் கடைய மில்க் ஷேக் செய்ய, முட்டையைக் கலக்க 1 நிமிடம்

இப்போது ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணையுங்கள்



ஸுமீத்துடன் மற்றுமொரு அனுகூலமும் இருக்கிறது. விரும்பினால் புதிய ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணைத்துக் கொண்டு எத்தனையோ காரியங்களைச் சாதிக்கலாம். அது 3.88 லிட்டர் கொள்ளளவுடன் உடைக்க முடியாத ... திண்ணமானது ... 5 மாற்று பிளேடுகளுடன் ... ஸுமீத் டொமஸ்டிக் மோட்டார் யூனிட்டுடன். இந்த ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணைத்து, அது புரியும் அற்புதங்களைப் பாருங்கள்.

ஸுமீத்®

400 வா. 220-240 வோ ~ 30 நிமிடங்கள் ரேட்டிங்

கடுமையான சமையல் வேலைகளைச் சமாளித்திடவே கட்டுறுதியோடு உருவாக்கப்பட்டுள்ளது.

எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள்—
உங்களுக்கென ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்.

சர்வீஸ் சென்டர்கள்:

கோயம்புத்தூர்: ஜே. இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், ... அரசாங்க கலைக் கல்லூரி சாலை, கோயம்புத்தூர் 641 018, போன்: 24579/25566/37157.


சென்னை: ... அண்ட் என்ஜினியர்ஸ் 81, ... 111 மவுண்ட் ரோடு, சென்னை-600 006, போன்: 450700/452055; **விவேக் ஏஜென்ஸிஸ்** 92/1 ஆர். எச். ரோடு, சென்னை-600 004, போன்: 76923/75661; **மெஸர்ஸ் விவேக் அண்ட் கம்பெனி,** 167, ... சாலை, சென்னை-600 017, போன்: 444129; **மெஸர்ஸ் விவேக் அண்ட் கம்பெனி** 205, ... சென்னை-600 017, போன்: 663545; **வி.ஜி. பன்னீர்தாஸ் அண்ட் கம்பெனி,** ... 40 மவுண்ட் ரோடு, சென்னை-600 002, போன்: 840234/840184.

மதுரை: ஜே. இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், 327 வடக்கு மாசி தெரு, மதுரை-625 001, போன்: 24028

திருச்சிராப்பள்ளி: ஸ்டாண்டர்டு எலெக்ட்ரிக் கம்பெனி, ... ரோட், திருச்சிராப்பள்ளி-620 002. போன்: 24343 கிளைகள்: தூத்துக்குடி, திருநெல்வேலி, ஸேலம், சென்னை.

OBM/3187A/1.TAM


இப்போது ராயல் ஹவுஸ்:ப்ளோரிங் செய்து பாருங்கள்!
ராயல் ஹவுஸ். இதில் உள்ள சிறப்புகள், ஒருவேளை, மற்ற :ப்ளோரிங்கில் கிடைக்கக் கூடும். இதனை எளிதாக பரப்பலாம்— தொல்லை இல்லை. தொந்தரவு கிடையாது. சில மணி நேரங்களில் பரப்பில் அழகு பாவுகிறது. சுலபமாக பராமரிக்கலாம்— கறை படியும் பயமே இல்லை.
இதன் மீது நடப்பதே சுகம்— மெத்தை போன்ற இதம். விரும்பும் டிசைன்கள்— பார்த்தால் பரவசம். மேலும் செலவும் மிச்சம். அத்துடன் அதிநவீனம்— ஜெர்லண்ட் இதனை வெளிநாடுகளில் அறிமுகப்படுத்தியது. இப்போது ராயல் ஹவுஸ் இதனை இந்திய நாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.
Royal House
Cushion Vinyl Flooring
எளிதாக பாவலாம், எழிலைத் தூவலாம்
ராயல் குஷன் வினைல் ப்ராடக்ட்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
ராம்கிருபா, 25, பரேக் ஸ்ட்ரீட், பிரார்த்தனு சமாஜ், பம்பாய்-400 004 ● 415, வொர்ல்ட் டிரேட் சென்டர், பாராகம்பா லேன், புது டில்லி-110 001
ULKA-RH-3A-86 TAM



Something sensational has been going on in more than 100 drawing offices over the past year.

Productivity has been stepped up by over 400%, drawings have consistent clarity and accuracy, and there's push button retrieval of drawings. A transformation brought about by Omega Draftsman — India's first electronic drafting system.

Look at all that the Omega Draftsman can do –

Drawings of any size and to any scale can be created, stored, retrieved and edited to generate revisions and new drawings in a matter of minutes.

Not only that, the Omega Draftsman provides a set of unique features:

- drawings are automatically saved against power failure
- the entire screen is available to the user for creating drawings
- commonly used command options are distributed on the tablet and mouse for ease of use
- the speed of command selection allows the user to work as fast as he chooses
- a number of construction facilities are provided to aid drafting


All done through a complete drafting system consisting of a high resolution colour monitor, tablet and mouse, large capacity discs to store drawings and a choice of plotters.

For details regarding demonstrations contact any OMC office:

OMC

OMC COMPUTERS LIMITED
V Floor, Chenoy Trade Centre, 116 Parklane,
Secunderabad 500 003
Tel: 70556/823175/825178/82 4375

- New Delhi 666971/665408
- Bombay 2028360/2026212
- Bangalore 568211/575788
- Madras 471034
- Calcutta 467126
- Pune 58305



OMEGA Draftsman

Sista's-OMC-489/86

மனோவின் அழகு எப்படித் தெரியுமா? ஒருமுறை அவளைப் பார்ப்பவர்கள் — ஆண்களாகட்டும், பெண்களாகட்டும், குறைந்த பட்சம் இரண்டு முறைகளாவது திரும்பிப் பார்க்காமல் இருப்பதில்லை. அந்த அளவுக்கு அவள் அழகிலே சொக்கத் தங்கமாய் இருந்தாள்.

இருந்தால் என்ன பிரயோஜனம்? அவள் அழகு இப்போது பயன்படாத ஆற்று நீர் மாதிரி அல்லவா ஓடிக் கொண்டிருக்கிறது?

சுந்தரத்திற்கு மனோவைப் பார்க்கும் போதெல்லாம்நெஞ்சை அரித்துக்கொண்டேயிருக்கிறது.

தாலிக் கயிறு இல்லாத அவளது வெற்றுக் கழுத்தைப் பார்க்கும்போதெல்லாம் சுந்தரத்தின் நெஞ்சிலே தீப்பந்தங்கள் சுழற்றி வந்தன.

அந்தப் பாழும் நெற்றியிலே அவன் குங்குமம் இட்டு அந்த நெற்றிக்கு ஏன் ஒரு மணத்தைக் கொண்டு வரக் கூடாது?

அவனுக்குத் தெரியும், தான் கல்யாணம் செய்து கொள்வதாக, அதுவும் ஒரு விதவையைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொன்னால் அவன் அக்கா எவ்வளவு சந்தோஷப்படுவாள் என்று.

அதேபோல் சுந்தரம் விஷயத்தைச் சொன்னதும், அவனது அக்கா சுமதி பூரித்துப் போய் நின்றாள்.

"சுந்தரம், இனி ஒரு நிமிஷம்கூட வேஸ்ட் பண்ணாதேடா! உடனே நட" என்று அவனை இழுத்துக் கொண்டு மனோவைப் பெண் கேட்பதற்காக எதிர் வீட்டுக்கு விரைந்தாள்.

விஷயம் கேள்விப்பட்டு மனோவும் அவளது தாயும் அதிர்ச்சி அடைந்தனர் — இன்ப அதிர்ச்சிதான்!

என்றாலும் மனோவும் அவள் தாயும் உடனடி சம்மதத்தைத் தெரிவிக்காமல் தமக்குள்ளாக மெல்ல பேசிக் கொண்டனர். பிறகு மனோவின் அம்மா —

மனோ காத்திருப்பாள்

"ஒரு நிமிஷம் உன்னோடு தனியாகப் பேசணும் தம்பி, கொஞ்சம் வரியா?" என்று அவனைப் பின்பக்கமாக அழைத்துப் போனாள்.

"தம்பி, மனோவைக் கட்டிக்கப் போவதாகச் சொன்னதாலே எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? உனக்கு எந்த வகையிலே நன்றி சொல்றது என்று புரியலே! ஒரு விதவையின் உள்ளுணர்வுகளைப் புரிஞ்சுக்கிட்டுத்தானே பெண் கேட்க வந்தே, மனோவை?" என்றாள்.

"ஆமாம். அதிலே சந்தேகமே வேண்டாம். ஏன் இந்தக் கேள்வி?"

"உன் செயலிலே சுயநலம் இருக்கிறதாக நான் நினைக்கிறேன் தம்பி."



"நான் மனோவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னது சுயநலமா? எப்படி?" கொஞ்சம் காரமாகவே கேட்டான்.


"கோபம் வேண்டாம் தம்பி. விதவைகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவன் என்றால் நீ முதலிலே உன் அக்காவுக்கு இல்லே தம்பி மறு கல்யாணம் செய்து வைச்சிருக்கணும்? உன் அக்கா சுமதிகூட மனோவைப் போல் கல்யாணமான ஒரே மாசத்திலே கணவனை இழந்து உன் வீட்டிலே நுழைஞ்சிருக்கிற பொண்ணுப்பா. அவளின் உணர்வுகளைப் புரிஞ்சுக்கிட்டு நீ ஏன் அவளின் மறு கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலே? என்னிக்காவது இதைப் பத்தி எண்ணியாவது பார்த்திருப்பியா? அதனால்தானப்பா சொன்னேன், உன் எண்ணத்திலும் செயலிலும் சுயநலம்தான் இருக்குன்னு. மனோவைப் பார்த்துப் பரிதாபப்பட்டுப் போனது போல உன் அக்காவைப் பார்த்து நீ பரிதாபப்பட்டிருந்தால் நான் இன்னும் நிறைய சந்தோஷப் பட்டிருப்பேனே! இது ஒரு தாய் ஒரு மகனோடு பேசற பேச்சாகச் சொல்றேனப்பா!"

அதிர்ந்து போனான் சுந்தரம். ஆழ்ந்த மௌனத்தில் இரண்டு நிமிடங்கள் கழிந்தன. பிறகு, நடுங்கும் குரலில் அவனிடமிருந்து அந்த வார்த்தைகள் வெளிப்பட்டன. "முதலில் சுமதி அக்காவுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் துணையைத் தேடற முயற்சியில இறங்கப் போறேன்மா. அதுக்குப் பிறகு மனோவைத் தேடி நானே வருவேன்."

"அவ உனக்காகக் காத்திருப்பா தம்பி!" என்று இதமாகச் சொன்னாள் அந்தத் தாய்.

— கே.ஜி. எஃப். பழனிச்சாமி

கம்ப்யூட்டர் ஜீனின் கடைசி அத்தியாயம்



கே.பரணி

நம் கணக்குப்படி அதன் வேகம் ஒரு வினாடிக்கு இரண்டு லட்சம் மைல்கள்—ஒளியின் வேகத்தைவிட அதிகம். அது சிவப்பாக இருந்தது. உருண்டையாக இருந்தது. கண்ணாடி போல் இருந்தது. பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அதன் பெயர் கேஸ்ட்ரோ — 701

A55A சோம்பல் முறித்தாள். **A55A**தான் அவள் பெயர் — **MXYA** என்ற மையத்தில். அவள் அழகாக இருந்தாள். வெண்மை நிறத்தில் இருந்தாள். நம் கணக்குப்படி ஐந்து அடி ஆறு அங்குலம் இருந்தாள். நல்ல புஷ்டியாகக் கொழு கொழுவென்று இருந்தாள். ஏதோ ஓர் உலோகத்தால் ஆன உடையில் கழுத்து முதல் தொடை வரை மூடப்பட்டிருந்தாள்.

மனத்தில் புரியாத குழப்பமும், உடலில் என்னவென்று புரியாத மாற்றமும்—கொஞ்ச நாட்களாகவே இருந்தன.

ரோபாட் வந்து நின்றது. அது அவளுக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட ரோபாட். அகஸ்தியர் மாதிரி குட்டையாக இருந்தது. அவளிடம் ஒரு மாத்திரையை நீட்டியது. வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள். கரைந்தது. அந்த வேளை உணவு அவ்வளவுதான்.

டீ.வி.யிலிருந்து கிளம்பிய மெலிதான ஹிப்னாடிஸச் சத்தத்தில் அவள் லயித்துத் திரையில் கவனித்தாள். மீண்டும் தன் மனத்தில் ஏதேதோ புரியாத உணர்வலைகள் கிளர்ந்தெழ, குழம்பினாள்.

திரையில் இருவர் ஓடிப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் உடை அவள் இதுவரை பார்த்திராததாக இருந்தது. அது நம்முடைய காலத்து சினிமாவின் காதல் காட்சியென்று அவளுக்குத் தெரியாது.

N66Nக்கும் இதே நேரத்தில் இதே அனுபவம் கிடைத்துக் கொண்டிருந்தது.

மனத்தில் புரியாத குழப்பங்களுடன் உடலில் புரியாத மாற்றங்களுடன், தன் ரோபாட் அருகே அமர்ந்திருக்க, அவனும் ஒரு 'பறக்கும் தட்டில்' பயணித்துக் கொண்டிருந்தான்.

அவன் நெடுநெடுவென்று ஆறடி உயரம் இருந்தான். கட்டான உடலோடு இருந்தான். கழுத்து முதல் தொடை வரை மூடிய உலோக ஆடையில் இருந்தான். சற்று முன் டீ.வி.யில் பார்த்த காட்சிகளால் ஏதேதோ புரியாத உணர்வலைகள் கிளர்ந்தெழ, குழப்பத்தில் இருந்தான்.

கோஸ்ட்ரோகிரகம். நமக்குவேண்டியது குறிப்பிட்ட ஓர் இடம்—தலைமையகம். அங்கே கூடியிருந்த பத்து பேர் கொண்ட ஒரு குழு.

அவர்கள் வித்தியாசமாக இருந்தார்கள். நான்கு கால்கள், நடு முதுகில் ஒரு ஆன்டனா, கொம்புகள் நீட்டிக் கொண்டிருந்த தலையோடு இருந்தார்கள். வெவ்வேறு நிறங்களில் இருந்தார்கள். அவர்களில் கருநீல நிறத்தில் இருந்தவன் வெறி பிடித்தவன்போல் அவர்கள் பாஷையில் கத்திக் கொண்டிருந்தான்: "வேண்டாம். இந்த வம்பு. போஸ்டோ — 43 (நமது பூமிக்கு அவர்கள் வைத்திருந்த பெயர்)ல் இருக்கும் விநோத ஜந்துக்கள் எண்ணூறு கோடியையும் அழிக்கும் விபரீதத் திட்டமே வேண்டாம்...."

அவர்களின் தலைவன் பொறுமை இழந்து சொன்னான்: "இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இவனை முடித்து விடுங்கள்."

கோஸ்ட்ரோ — 701 விரைவாகப் பூமியை நெருங்கிக் கொண்டிருந்தது.

பூமியில் சுமார் எண்ணூறு கோடி பேர் இருந்தார்கள். எல்லோரும் கம்ப்யூட்டர்களின் ஆணைகளுக்கு அடங்கியவர்கள். கேள்வி கேட்கத் தெரியாதவர்கள். சுயமாகச் சிந்தித்துச் செயல்படும் திறனை மனித குலம் இழந்து இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. ராக்ஷச கம்ப்யூட்டர்கள் மொத்தம் முப்பத்தாறு இருந்தன. அவை உலகை முப்பத்தாறு 'மாவட்டங்'களாகப் பிரித்து அரசாட்சி செலுத்திக் கொண்டிருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் முப்பத்தாறு 'வட்டங்'களும் அவை ஒவ்வொன்றிலும் முப்பத்தாறு 'உள்வட்டங்'களும் அவற்றுள் கடைநிலையாக முப்பத்தாறு 'மையங்'களும் இருந்தன. ஒவ்வொரு மையத்திலும் முப்பத்தாறு கம்ப்யூட்டர்கள் சிற்றரசு புரிந்துகொண்டிருந்தன. இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோபக்கார விஞ்ஞானிகள் கூட்டம் அணு ஆயுதங்கள், வகுப்புக் கலவரங்கள், செக்ஸ் குற்றங்கள் போன்றவை மிதமிஞ்சிப் போனதால் அவற்றை ஒழிக்க நினைத்துச் சிந்திக்கும் வேலையை மனிதனிடமிருந்து பறித்து, சிந்திக்கத் தெரியாத கம்ப்யூட்டரிடம் கொடுத்திருந்தது.

உலகில் ஒரு பூச்சி இல்லை, பறவை இல்லை, விலங்கு இல்லை, கிருமியும் இல்லை. மனிதர்களுக்கும் உணர்ச்சிகள் கூர்மையாக இல்லை.

ஒவ்வொரு மையத்துக்குள்ளும் மனிதர்களுக்கு நான்கு இலக்க எண்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு உதவியாகக் குட்டி ரோபாட்டுகள் இருந்தன. அவை அந்தந்த மையத்தின் கம்ப்யூட்டர்களின் ஆணை



நர்ஸ் (1): ஒரு பேஷண்ட்டோட டெஸ்ட் ரிப்போர்ட் எல்லாம் கிரகிச்சுண்டு நம்ம கம்ப்யூட்டர் அந்த பேஷண்ட் கர்ப்பம்னு சொல்லிடுச்சே, ஆச்சரியமா இல்லே?

நர்ஸ் (2): ஆச்சரியம்தான். அந்த பேஷண்ட் ஆம்பளே யாச்சே!

— ராமபிரான்

களில் இயங்கின. அவற்றின் இயந்திர விழிகளில் விழும் பிம்பங்கள் உள்ளே உருமாறி கம்ப்யூட்டர்களுக்குத் தகவல் அனுப்பிக் கொண்டிருந்தன.

உலகம் இயங்குவதற்குத் தேவையான சகலத்தையும் பிரும்மாண்ட ரோபாட்கள் செய்து கொண்டிருந்தன. கூடவே குறிப்பிட்ட இடைவெளிகளில், பெரிய, சிறிய ரோபாட்களையும் செய்தன. ஒரு ரோபாட் உருவானவுடன் அதற்குப் பதிலாக ஒரு ரோபாட் தன்னை அழித்துக் கொண்டுவிடும். இதனால் ரோபாட்களின் எண்ணிக்கை கூடாமல் குறையாமல் இருந்தது.

மனிதர்களும் அப்படியேதான்.

A55A யும் **N66N** ம் ஒரே நேரத்தில் அந்தப் பெரிய கட்டடத்தின் முன்னால் வந்து இறங்கினார்கள். இரு இயந்திரங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொள்வது போல் பார்த்துக் கொண்டார்கள்.

சுத்தமாகத் துடைத்துவிட்டது போன்றிருந்த கண்ணாடிக் கட்டடத்தின் உள்ளே ரோபாட்கள் தொடர நுழைந்தார்கள்.

உள்ளே நுழைந்ததும் மேசூழ்நிலையின் வித்தியாசம் அவர்களைத் தாக்கியது. அங்கங்கே சிரிப்பும் கொம்மாளமுமாகச் சத்தம் கேட்டது — அவர்கள் இதுவரை கேட்டிராத சத்தம். பின்னணியில் மென்மையான இசை ஒலித்துக் கொண்டிருந்தது.

"X500 கம்ப்யூட்டர் உங்களை வரவேற்கிறது. இந்த உலகிற்கு ரொம்பவும் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றுத் தரும் பணிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தச் 'சொர்க்கபுரி' உங்களுக்குப் பணி செய்யக் காத்திருக்கிறது. இந்தப் பெருமையைப் பெற்றதற்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். உங்களைப் போல் இப்போது இந்தச் சொர்க்கபுரியில் ஆயிரத்துப் பதினொரு ஜோடிகள் இருக்கிறார்கள். ஒரு வாரப் பயிற்சிக்குப்பின் நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொள்ளலாம்" என்றது வீடியோ திரை.

அவர்களுக்கு ஓர் அட்சரம் புரியவில்லை.

''இவனை முடித்துவிடுங்கள்'' என்று மீண்டும் தலைவன் சொன்னதும் கருநீல நிறத்தவன் இகைத்தான். ''பைத்தியம் எனக்கில்லை. எண்ணூறு கோடி ஐந்துக்களை அழிக்க வேண்டிய அவசியம் என்ன? அப்படியாவது, அவைகளை அழித்துவிட்டாவது நாம் ஏன் போஸ்டோ—43ல் குடியேற வேண்டும்?'' என்று கேட்டான்.

தலைவன் சொன்னான்: ''பைத்தியக்காரா, எண்ணூறு கோடி ஐந்துக்கள் அங்கே இருக்கலாம். ஆனால் உயிரோட்டமுள்ள வாழ்க்கை அவற்றுக்கு இல்லையே, பின் அவை இருந்தென்ன? அழிந்தென்ன?''

A55A யும், **N66N** ம் ஒரே அறையில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்களுடைய உடல் நிலை அவ்வப்போது ரோபாட்டால் சோதிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சில தேகப் பயிற்சிகள், ஆசனங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. உணவுக்காகச் சில விசேஷமான, இதுவரை அவர்கள் உபயோகித்திராத மாத்திரைகள் தரப்பட்டன.

அவர்களுக்கு செக்ஸ் போதனையைத் தொடங்க ஒரு சுபயோக சுபதினத்தைக் கம்ப்யூட்டர் குறித்திருந்தது.

தனக்கே ஒரு சஸ்பென்ஸ் காத்திருப்பதை அது உணரவில்லை.

கோஸ்ட்ரோ—701 வாயு மண்டலத்துக்குள் நுழைந்தபோது அதன் வேகம் மிகமிகக் குறைந்திருந்தது. இன்னும் பூமிக்கு அருகே வரவர மேல்மேலும் குறைந்தது. மிக அருகே வந்ததும் கொஞ்ச நேரம் நிலையாக நின்றது. பின் பெரிய பலூன் போல மெதுவாக, மிக மெதுவாகக் காற்றில் மிதந்து கொண்டே இறங்கியது.

சொர்க்கபுரியில் கம்ப்யூட்டரின் உத்தரவை ஏற்று அவர்கள் இருவரும் அரங்கில் போய் அமர்ந்தார்கள். இவர்களைப் போல் இன்னும் முப்பத்தைந்து ஜோடிகளுக்கும் அன்று அங்கே செக்ஸ் ப(ா)டம் ஆரம்பம்.

எல்லா ஆண்களும் உயரத்திலும் பருமனிலும் ஒரே மாதிரி இருந்தார்கள். எல்லாப் பெண்களும் டிட்டோ. எல்லோரும் பருவத்தின் தலைவாயிலில் இருந்தார்கள்.

அது இறங்கும் இடத்தில் கீழே ஓர் அடர்ந்த தோப்பு இருந்தது. அது மிகவும் நெருங்கியதும், தோப்பின் அத்தனை மரங்களும் நொடியில் சாம்பலாகின. ஒரு தூசி தும்பு இல்லாத உலகத்தில் முதல்முறையாகத் தூசி பரவியது.

கம்ப்யூட்டர், பிறப்பும் இறப்பும் எந்த பரிமாணத்தில் கட்டுப்படுத்தப்படுகின்றன, அவற்றின் அவசியம் என்ன என்று சின்னதாக ஒரு முன்னுரை கொடுத்தது. பிறக்கும்

குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதற்காக என்னென்ன, முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று விவரம் சொல்லியது. ''இனப்பெருக்கம் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல, சந்தோஷமும் கூட. இதுவரை நீங்கள் அனுபவித்தறியாத ஓர் உணர்ச்சி, ஒரு சொர்க்க சுகம் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. அதற்காகத்தான் இந்த இடத்துக்கே சொர்க்கபுரி என்று பெயர் வைத்திருக்கிறோம்'' என்றது.

அதன் வயிற்றுக்குள்ளிருந்து மூன்று கால்கள் கீழே நீட்டிக் கொள்ள, அது தரையில் ஒலியாக வந்து உட்கார்ந்தது.

''முதலில் உங்கள் உடைகளைக் களையுங்கள். பின் கவனமாகத் திரையில் தோன்றும் காட்சிகளைப் பாருங்கள். உங்களுக்குள் ஆண் பெண் என்ற இ—''

மெல்ல சுழலத் துவங்கியது.
ஒரு கதிர்வீச்சை வெளியே அனுப்பத் துவங்கியது.

''—நீபாசோனோமோகாலாவிழ்கசெற்பாடமாவிவிவிவிவிவி'' என்றது கம்ப்யூட்டர்.

புனுக்பிலிமுக்குப் பதிலாகத் திரையில் ஒரு நீர்வீழ்ச்சியும் அருகே அடர்த்தியாகச் செடி கொடிகளுமாக ஏதோ ஒரு படம் ஆரம்பித்தது.

மூலையில் காத்திருக்க வேண்டிய ரோபாட்கள் குழப்பமான கட்டளைகளை ஏற்றுக் கொண்டு, இங்கும் அங்குமாகக் குழப்பமாக நகர்ந்து ஒன்றின்மேல் ஒன்று மோதிக் கொண்டு கீழே விழுந்து ப்ழமாகுபகக் கிடந்தன.

உலகின் அனைத்து மையங்களிலும் இருந்த ஏராளமான கம்ப்யூட்டர்களின் வீடியோ திரைகளிலும், சொர்க்கபுரியின் அரங்கில் தெரிய வேண்டிய செக்ஸ் படங்கள் உட்பட, வெவ்வேறு காட்சிகள் தெரிய ஆரம்பித்தன.

களேபரம் ஆரம்பமாகியது.

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் போக மீதிப் பேருக்கு நீண்ட நேரம் ஏதும் புரியவில்லை. ரோபாட்கள் அங்குமிங்கும் ஓடி, சுவர்களிலும் இவர்கள் மேலும் முட்டிக் கொண்டு கீழே விழுவது முதலில் புது மாதிரி வேடிக்கையாக இருந்தது. அதற்குள் திரையில் மாறி மாறித் தோன்றிய சண்டை இயற்கை, விளையாட்டு, செக்ஸ் காட்சிகள் அவர்களைக் குழப்பின; பின் வசீகரித்தன.

இதற்குள் சொர்க்கபுரிகளுக்குள் இருந்தவர்கள் மெல்லமெல்லவெளிவரத்தொடங்கினார்கள். வெளியில் இருந்த குழப்பம் அவர்களை மலைக்க வைத்தது.

ஆனால் புதிதாகக் கற்றுக் கொண்டிருந்த பாடம் அவர்களை நீண்ட நேரம் இதர விஷயங்களில் கவனத்தைச் செலுத்தவிடாமல் மனத்தை ஆக்ரமித்துக் கொள்ள, ஆடை அணிந்திருந்தவர்களையும் துகில் உரிய ஆரம்பித்தார்கள்.

இதில் போட்டி வந்தபோது சிலர் தயங்கினார்கள். சிலர் தவித்தார்கள். கம்ப்யூட்டரின் குழப்பத்தில் சற்றுமுன் திரையில் தெரிந்த ஏதோ ஒரு சண்டைக் காட்சிநினைவில் பளிச்சிட, சிலர் அடுத்தவர்களைத் தாக்கினார்கள்.

கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என்று அதன் நிறம் குறிப்பிட்ட இடைவெளிகளில் மாறிக் கொண்டிருந்தது.

ஒவ்வொருமுறை நிறம் மாறும் போதும் அது ஒவ்வொருவகைக் கதிர் வீச்சை வெளியே பரப்பிக் கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல சுழன்று கொண்டிருந்தது.

மீண்டும் அவர்கள் குழு அங்கே கூடியது. இப்போது அவர்கள் ஒன்பது பேர் இருந்தார்கள்.

தலைவன் பேச ஆரம்பித்தான். ''கடைசிச் செய்தியை ஒலிபரப்புகிறேன். நமது கோஸ்ட்ரா—701 அதன் பணியைச் செய்து கொண்டிருக்கிறது. போஸ்டோ—43ல் ஒவ்வொரு வகைக் கதிர்வீச்சாக வெளியே அனுப்பி அதனால்ஏற்படும்விளைவுகளை, நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இது வரை கிடைத்த விவரங்களின்படி நம்முடைய ஐந்து வகைக் கதிர்வீச்சுக்கள் அந்தக் கிரகத்து ஜந்துக்களைச் சாம்பலாக்கியிருக்கின்றன. கதிர் வீச்சின் அளவை அதிகமாக்கி அந்த ஜந்துக்கள் முழுவதையுமேஅழிப்பதற்குநாம்ஆணை அனுப்ப வேண்டியதுதான் பாக்கி...''

அவர்களுக்கு எதிரேயிருந்த பேனலில் ஒரு நீல விளக்கு கண் சிமிட்டியது. அவன் ஒரு பட்டனைத் தொட்டதும் அந்த கிரகத்தின் இன்னொரு கோடியிலிருந்து ஒரு குட்டித் தலைவனின் குரல் 'இங்கே துல்லியமாகக் கேட்டது. ''அந்த போஸ்டோ—43ன் இப்போதைய நிலையை நாங்கள். காண விரும்புகிறோம்.''

''பார்க்கலாம். அதற்குமுன் ஒரு சுவாரஸ்யமான விஷயம்'' தலைவன் தொடர்ந்து சொன்னான். ''நம் தலைக்குள் பொருத்திக் கொண்டிருக்கிறோமே, இதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட சக்தியில்லாத வஸ்துக்களை 'ராட்சச கம்ப்யூட்டர்கள்' என்ற பெயரில் போஸ்டோ—43 ஜந்துக்கள் வைத்துக் கொண்டிருக்கின்றன. நம் குழந்தைகள் வைத்துக் கொண்டு விளையாடும் பொம்மைகளைவிட மிகவும் மட்டமான, ஆனால் உருவில் மிகவும் பெரிதான 'ரோபாட்'களும் அங்கே இருக்கின்றன—இருந்தன. நம் கோஸ்ட்ரோ—701 அங்கே போய் இயங்கத்தொடங்கியதும் அதன் அணு காந்த அலைகளின் வேகம் தாங்காது முதலில் அந்த கம்ப்

யூட்டர்கள் தாறுமாறாக இயங்கின. பின் ஸ்தம்பித்தே விட்டன.... இப்போது பாருங்கள் அங்கே நடக்கும் வேடிக்கைகளை....

அவன் ஒரு பட்டனை அழுத்தியதும் அந்தக் கிரகவாசிகள் எல்லோருடைய மூளைகளிலும் காட்சிகள் பிம்பங்களாக விரிந்தன.

ஏறக்குறைய புதிதாகச் சுதந்திரம் கிடைத்த மகிழ்ச்சி அவர்களிடையே பரவலாக இருந்தது. அதன் ஒவ்வொரு துளியையும் அனுபவிக்க விரும்பியவர்களாய் எல்லோரும் ஓடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருந்தார்கள். ரோபாட்கள் அங்கங்கே விழுந்து கிடந்தன. அவற்றை உருட்டிவிட்டு, ஏறிக் குதித்து வேடிக்கை பார்த்தார்கள். அவை தயாரித்து வைத்திருந்த மாத்திரைகள் ஏராளமாக இன்னும் மிஞ்சியிருந்ததால் உணவுக்குப் பஞ்சமில்லை. உடைகள் இப்போது வேண்டாதவையாகியிருந்தன.

சரசங்களும் சல்லாபங்களும் விளையாட்டுக்களும் சண்டைகளுமாகப் பொழுது சென்று கொண்டிருந்தது.

வீடியோ திரைகள் வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தன.

கரு நீல நிறத்தவன் ஒரு தனிமையிலிருந்து வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தலைக்குள் இருந்த சிறிய, ஆனால் மிகச் சக்தி வாய்ந்த அந்த நூதன வஸ்துவின் இயக்கத்தை நிறுத்தியிருந்தார்கள். இனி அவன் வெறும் மிருகம்.

அந்தக் குட்டித் தலைவனின் குரல் மீண்டும் கேட்டது. "இவை வெறும் ஜடம்; இருந்தும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான் என்ற எண்ணத்தில் தானே, இவற்றை அழித்து இவர்கள் கிரகத்தை ஆக்கிரமிக்க நாம் முடிவு செய்தோம்? இப்போதுதான் இவை புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றனவே. இனியும் இவற்றை அழிக்கத்தான் வேண்டுமா?"


'தலைவன் கொஞ்சம் நிதானித்துப் பின் சொன்னான்: "நம் விரிவாக்கத் திட்டத்துக்கு நமக்கு இன்னொரு கிரகம் உடனே தேவைப்படுகிறது. இனி வேறொரு கிரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பரிசோதனைகளை ஆரம்பத்திலிருந்து துவங்க நேரமில்லை. அதனால் வேறு வழியில்லை."

அதன் வேகம் ஒரு வினாடிக்கு இருபது லட்சம் மைல்கள். அது நீலமாக இருந்தது. உருண்டையாக இருந்தது. கண்ணாடி போல் இருந்தது. மெல்ல சுழன்றபடி கோஸ்ட்ரோ கிரகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அதன் பெயர் கால்கி — 13.

அவசியமென்றால் முதல் பாராவை மீண்டும் படிக்கவும்.

அருள்வாக்கு



உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு சிறு புல்லைக்கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும் உடையும் மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ்வாறு நன்றி கூறும் அடையாளமாகவே நாம் உண்பதை அவனுக்கு முன் காட்டி நிவேதனம் செய்ய வேண்டும். அவனுக்குக் காட்டிவிட்டுப் பிறகு நாம்தான் உண்ணப் போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவதற்கு அருள் செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எல்லோருமே இவ்விதம் வீட்டில் பூஜை செய்து திரவியங்களை ஈசுவரார்ப்பணம் செய்ய இயலாது. எனவே சமுதாயம் முழுதும் சேர்ந்து இப்படி சமர்ப்பணம் பண்ணும்படியான பொது வழிபாட்டு நிலையங்களாக ஆலயங்கள் எழுந்துள்ளன.

சின்னஞ்சிறிய சூட்சுமமான தர்மங்களை எல்லாம் மறந்துவிட்டோம். நமக்கு உணவு தருபவனுக்கு நல்லபடி நிவேதனம் நடக்க வேண்டும். நமக்கு உடை தருபவனுக்கு நல்ல வஸ்திரம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கவனிக்கத் தவறுகிறோம். இப்போது ஓர் ஊரில் யார் ரொம்ப அழுக்குத் துணி கட்டிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தால் ஸ்வாமிதான் என்று தெரிகிறது. நம் ஊர் கோயிலில் ஸ்வாமியின் வஸ்திரம் சுத்தமாயிருக்கிறதா என்பதில் மனதைச் செலுத்தி விட்டோமானால் நம் மனசின் அழுக்கும் போய்விடும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'அரனை மறவேல்' 'திருமாலுக்கு அடிமை செய்' என்றெல்லாம் புண்ணிய மொழிகள் வழங்கும் இந்த நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் உள்ள ஈசுவரன் கோயிலையும், பெருமாள் கோயிலையும் நல்ல நிலையில் வைத்திருந்து வழிபாடு நடக்கச் செய்ய வேண்டும். இது நம் முதல் கடமை.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

எல்ஐஸி ஒப்பற்ற ஒரு ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தை அளிக்கிறது



பிமா ஸந்தேஷ்

ப்ரீமியம் திருப்பிக் கிடைக்கக்கூடிய திட்டம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

மக்கள் சேவையிலே 30 ஆண்டுகள்

Efficient/LIC/154/86 TM

9 மோகம் என்பது இதுதானோ?



உஷா சுப்பிரமணியன்

கிணற்றடியில் செப்பிலும், பித்தளையிலுமான பூஜைப் பாத்திரங்களைப் புளி போட்டுத் துலக்கிக் கொண்டிருந்தாள் லோகேஸ்வரி.

தோளில் புத்தகப் பையுடன் வெகு வேகமாக ஓடி வந்த புவனேஸ்வரி, "லோகு, லோகு அக்கா" என்றழைத்துவிட்டு மூச்சிரைக்க நின்றாள்.

"என்னடீ..." சாம்பற்கையால் முன்னுச்சி மயிரைத் தள்ளியபடியே அலுப்புடன் கேட்டாள் லோகேஸ்வரி....

பையை முற்றத்தில் தூக்கி எறிந்த புவனா, லோகேஸ்வரியின் கழுத்தில் கையை வளைத்து அணைத்துக் கொண்டாள். "நாளைக்கு எனக்கு வெல்ல அப்பம் சுட்டுத் தருவேன்னு ப்ராமிஸ் செய்."

"கழுத்தை விடுடீ பிசாசு.... திடீர்னு உனக்கு வெல்ல அப்பத்து மேல் என்ன ஆசை?"

"ஏன்னா.... ஒரு விஷயம் சொல்லட்டுமா...." அக்காவின் காதுக்குள் குனிந்து, 'கூ' என்று கத்தினாள். லோகு அவளைப் பிடித்துத் தள்ளவும், "தப்பு, தப்பு, இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன்" என்று குழைந்தாள். "அக்கா, செல்ல அக்கா, உனக்கு விஷயம் தெரியுமா?"

"பெரிய கதாசிரியர் மாதிரி முன்னுரை எழுதாதே, சட்டுனு விஷயத்துக்கு வா."

"அத்தான் ஊருக்கு வந்திருக்கார்!"

லோகேஸ்வரியின் முகம் ஆயிரம் வாட் பல்ப் போட்டாற்போல் பிரகாசமாயிற்று. "விளையாடறியா, இல்லே, நெசத்தைச் சொல்றியா?"

"உண்மையாத்தான் சொல்றேன், அக்கா."

"அப்பா எதுவும் சொல்லலியே...."

"அவருக்குத் தெரிஞ்சிருக்காது. இப்பத்தான் பஸ்ஸிலே வந்திருக்கார்னு நெனைக்கறேன். அத்தை வீட்டுலே வாசற்புறம் ரிக்ஷா நின்னுது. சில்லறை எடுத்திட்டு அத்தை வெளியே வந்தாங்க. யாரு வந்திருக்காங்க அத்தைன்னு கேட்டேன். மெட்ராஸ்லேர்ந்து அத்தான் வந்திருக்கார்னு சொல்லிட்டு உள்ளே போயிட்டாங்க."

"நீ வீட்டுக்குள்ளே போய் அத்தானைப் பார்க்கலியா?"

"இல்லையே.... எப்படிப் போறது? அத்தைதான் கதவை மூடிக்கிட்டு உள்ளே போயிட்டாங்களே...."

லோகேஸ்வரிக்குச் 'சப்'பென்றாகிவிட்டது. காத்திருந்து, காத்திருந்து களைப்பவர்களுக்குத்தானே அடையும் இடத்தின் அருமை தெரியும். நித்யா அத்தான் ஊருக்கு வந்து ஒரு வருடத்திற்கும் மேலிருக்கும். சென்ற முறை அவர் வந்தபோது அவள் தூர இருந்து அவரைப் பார்த்ததுடன் சரி, என்னதான் நெருங்கிய உறவு என்றாலும், சிறு வயது முதலே ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் என்று பேதப்படுத்தியே வளர்த்துவிட்டார்கள். ஓதுவார் குடும்பத்துப் பெண்களின் வெளி உலகப் புழக்கமே வாயிலில் கோலம் போடுவதுடன் நின்றுவிடும். இன்று புவனாவுக்கு நிறையச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் லோகேஸ்வரி வீட்டிற்கு முதற் பெண் என்பதால் அவளை வளர்க்கும் விதம் பற்றி நிறையக் குழப்பமும், மிரட்சியும் பெற்றோருக்கு இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேல் உறவில் பெண்ணோ, பிள்ளையோ இருந்தால் வெளியே சம்பந்தம் செய்யும் வழக்கம் இந்தக் குடும்பங்களில் இல்லை. லோகேஸ்வரி பிறந்த அன்றே, சுந்தரத்தின் சகோதரி தன் மருமகள் என்று அவளை நிச்சயித்து வெள்ளிக் காப்பு அணிவித்தாள். லோகு வயதுக்கு வந்தபோது கூட மாமா சீரை விடவும் அத்தை செய்ததே அதிகம். சிவகாமியின் கணவருக்கு ஊரில் சுமாராக நிலமிருந்தது. காய்கறித் தோட்டம் இருந்தது. அதோடு அரசாங்கப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்து ஓய்வெடுத்திருந்தார். சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாமல் சுகமாக வாழ வழி இருந்தது. ஐந்து குழந்தைகளைப் பெற்ற அத்தை சிவகாமி, குணத்தில் நல்லவள்தான். ஆனால் எதிலும் கண்டிப்பு. அவள் விருப்பத்திலிருந்து சிறிது மாறினாலும் அவள் நாக்கு தீப்பிழம்பாகச் சுடும். சிவகாமிக்கு உறவினர் மத்தியில் மரியாதை, பயம் இரண்டும் உண்டு.

"ஞானம், யாரு வந்திருக்காங்க பாரு" தந்தையின் குரல் கேட்டுப் பூஜைத் தட்டைத் துடைத்துக் கொண்டிருந்த லோகேஸ்வரி வெளியே எட்டிப் பார்த்தாள்.

அவள் இதயம் மகிழ்ச்சியில் அவளையும் மீறித் துடித்தது. அப்பாவுடன் நிற்பது.... அத்தான்தான்! எப்படி மாறிவிட்டார்! சென்ற வருடம்வரை நோஞ்சானாக இருந்தவர், திடீரெனச் சதைப்பிடிப்புடன் எவ்வளவு கம்பீரமாக மாறிவிட்டார். உடம்பு தேறிய பிறகு அவர் உயரம்கூட அல்லவா தூக்கிக் காட்டுகிறது.

''வாங்க தம்பி.... உக்காருங்க....'' சுந்தரம் நாற்காலி போட்டு உபசரித்தார். தன் பார்வையில் கோலி விளையாடி, வளர்ந்த பிள்ளை என்றாலும் மாப்பிள்ளையாக வரித்த பிறகு, ஒருமையில் விளிக்க முடியுமா?

நித்யானந்தத்தின் பார்வை கதவின் பின்புறம் பாதி உடலை மறைத்துக் கொண்டு வெட்கத்துடன் தலை கவிழ்ந்து நின்ற லோகேஸ்வரி மீது படிந்தது. என்றுமில்லாத வழக்கமாக அவன் 'ஹலோ' எனவும் அவள் நாணிச் சிவந்துவிட்டாள்.

மகளின் வெட்கம் கவிந்த முகத்தைப் பார்த்துச் சுந்தரம் புன்னகைபூத்தார். இளமையும், அதன் உணர்வுகளும் எவ்வளவு நுட்பமானவை. சின்னப் பார்வையே ஒரு வருடலின் சுகத்தையும், ஒற்றைப் பேச்சே தழுவலின் மயக்கத்தையும் தரவல்லது.

''தம்பி பேசிட்டிருங்க. கை, கால் கழுவிக்கிட்டு வந்திடறேன். அம்மா இல்லையா லோகு?''

''இல்லைப்பா, சின்னப் பெரியப்பா வீட்டுக்குப் பணியாரம் செய்யப் போயிருக்காங்க....'' லோகு இப்போதும் கதவடியிலிருந்தபடியே பதில் சொன்னாள்.

சுந்தரம் புழக்கடைப் பக்கம் சென்றதும், ரகசியமாக அத்தானைப் பார்த்தாள். ''லோகு'' அவன் ரகசியமாக அழைத்தான். ''லோகு, எனக்கு உன்கூடத் தனியாப் பேசணும்... நான் ஊருக்கு வந்ததே அதுக்குத்தான்.''

''எப்படிங்க....'' லோகுவின் குரல் பயத்திலே தடுமாறியது.

''விளக்கு வெச்சப்புறம் கோயில் பக்கம் வா.''

''தனியாவா?''

''புவனாவைக் கூட்டிக்கிட்டு வா.''

''என்ன லோகு, அத்தான் முகத்தைப் பார்த்தபடி நின்றிருந்தா, பசி தீர்ந்திடுமா, அவருக்குக் காப்பி வை....'' அப்பாவின் குரல் கேட்டுச் சரேலென்று உள்ளே போய்விட்டாள் லோகு.

ஸ்டவ்வை ஏற்றும்போது நித்யாவின் முகம் எதிரே நடமாடியது. அத்தானுக்குத்தான் இந்த மீசை எவ்வளவு பொருத்தமாக உள்ளது. தலையில் எண்ணெயே போடமாட்டாரா.... பம்மிப் 'புசுபுசுன்னு என்னமாய் இருக்கு. அத்தான் சிரிக்கிறபோது மோகன் சிரிக்கிறாப்பல ஒருபுறம் உதடு வளைந்து கவர்ச்சியாக இருக்கிறது. அத்தான் உயரம் அதிகம். அவள் உயரத்திற்கு நல்ல தோது. பட்டணப் படிப்பு அத்தானை ரொம்ப நாகரிகமாக்கிவிட்டது. காலைப் பிடிக்கப் பிடிக்க ஜீன்ஸ் பேண்ட், அதற்குப் பொருத்தமாகச் சட்டை என என்ன ஸ்டைல்! நல்ல வேளை உறவு மாப்பிள்ளை என்று ஒரு கட்டுப்பெட்டியை நிச்சயம் செய்யாமல் இருந்தார்கள்.

லோகேஸ்வரி காப்பி டம்ளர்களை ஏந்திச் சென்றபோது, மாமா பார்க்காத வகையில் 'வரியா' என்று நித்யா அவளைக் கண்ணாலே கேட்க, அவளும் பார்வையாலேயே சம்மதம் தெரிவித்தாள்.

''புவனு, ப்ளீஸ் என்னோட கோயிலுக்கு வாடீ'' என்று கெஞ்சியபோதுதான், அவள் 'படிக்கவேண்டும்' என்று பிகு செய்து கொண்டாள். கௌரவத்தை விட்டுத் தான் அத்தானைச் சந்திக்க வேண்டும் என்பதை அவளிடம் கூறியபோது அவள், 'அடிச்சக்கை! அம்மா...' என்று கத்தி ஒலிபரப்பத் தொடங்கினாள். லோகு அவள் வாயைக் கையால் பொத்தி அவளைத் 'தாஜா' செய்யத் துவங்கினாள். ஒருவழியாக இருவரும் கையில் எண்ணெய் சம்புடத்துடன் புறப்பட்டனர்.

''லோகு அக்கா ட்யூன் என்ன?''

''என்னடி கேக்கறே?''

''இல்லே, உங்க காதல் டூயட்டுக்கு ட்யூன் என்னன்னு கேட்டேன்'' புவனா குறும்பாக மொழிந்தாள்.

தலைகுனிந்த லோகுவின் மனத்தில் ஆயிரம் இனிமையான ட்யூன்கள் இசைத்தன. வாழ்வில் முதன்முறையாக ஓர் ஆணின் நெருக்கம் கிடைக்கப் போகிறது. அத்தான். அவளுக்கு மட்டுமே சொந்தமான நித்யா அத்தான். அவள் சந்தித்துப் பேசப் போகிறாள்.

நித்யானந்தன் கோயிலுக்குச் செல்லும் வழியிலேயே புன்னை மரத்தடியில் சாய்ந்தவாறு நின்றிருந்தான். தூரத்திலே இவர்களைப் பார்த்ததுமே, லோகுவைத் தனியே வரும்படி சைகை காட்டி அழைத்தான்.

''புவனு நீ கோயிலுக்குள்ளாற போய்த் துர்க்கைக்கு விளக்கேத்தி, பிரதட்சணம் செய்துட்டு வர்றியா, நான் அத்தானோட ஒரு நிமிஷம் பேசிட்டு வந்திடறேன்.''

''ஒரு நிமிஷம் என்ன ஒரு மணி நேரம் வேணாலும் பிரதட்சிணம் செய்யறேன். கடவுளுக்கு வழிபாடு செய்த புண்ணியம், அக்கா காதலுக்கு உதவிய புண்ணியம் இரண்டும் சேர்த்துக் கிடைக்கும்....'' புவனா குறும்புடன் மொழிந்துவிட்டுக் குடுகுடு என்று கோயிலுக்குள் ஓடினாள்.

நித்யா தன்னை நோக்கி நடந்துவரும் லோகேஸ்வரியை உற்றுப் பார்த்தான். அவள் நடக்கும்போது தாளம் தவறாமல் அவள் இடுப்பு துரித கதியில் ஆடி வரும் காட்சி... அவளை அப்படியே தன் உடலுடன் சேர்த்து அணைக்க வேண்டுமென்ற தாபம் அவனுள் எழுந்தது. அதற்காகவாவது அவளை உடன் மணமுடிக்க வேண்டும் என மனம் விரும்பியது. ஆனால் அவனும் சில லட்சியங்கள் வைத்திருக்கிறானே....

''லோகு....'' சடாரென தயங்கி நின்றவள் கையைப் பற்றினான் நித்யா. ஒரு விநாடி திகைத்த லோகு, அந்தக்

கரத்தின் ஆண்மையில், பாதுகாப்பு உணர்வில் தன்னை இழக்கத் துவங்கினாள்.

''லோகு.... உணர்ச்சி மிகுதியில் அவன் பேச்சு குழறியது.

''அத்தான்.....'' லோகுவும் தயங்கினாள். ''அத்தான், உங்க படிப்பு எப்ப முடியும்?'' மெதுவாகக் கேட்டாள்.

''வா லோகு. நாம் அந்த மரத்தடியில் உட்கார்ந்து பேசலாம்'' சுற்றுமுற்றும் பயத்துடன் பார்த்தபடியே லோகு அவனைப் பின் தொடர்ந்தாள். நித்யா அவளை நெருங்கி உட்கார்ந்து அவள் இடுப்பை அணைத்தான். ''லோகு, மாமா கலியாணத் தேதி கேட்டுப் பேச வந்திருந்தாரு....''

''அப்படியா?'' லோகுவுக்கு இந்தச் செய்தி வியப்பை அளித்தது.

''அம்மாவும் படிப்பை முடித்து வேலை கிடைக்கும்வரை காத்திருக்க வேணும். லோகு என்ன அன்னியமா.... கல்யாணத்தைச் செஞ்சிட்டுப் போய்ப் படிங்கறாங்க.

லோகுவின் இதயம் படபடத்தது. அவள் விழிகள் ஆவலுடன் நித்யாவைப் பார்த்தன.

''எனக்கும் ஆசைதான் லோகு. ஆனா வேலை கிடைக்குமுன் கல்யாணம் செஞ்சுக்கிட்டா இந்த வய, வரப்பு வேலையிலிருந்து மீள முடியாது. இந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்கலை. அதோட நான் பல பேர் முன்னால் வாக்குறுதி எடுத்திருக்கேன்.''

''என்னன்னு அத்தான்?''

''அண்ணன் ரஞ்சித் திருமணம் செய்துக்கறதுக்கு முன்னாலே நான் செய்துக்க மாட்டேன்னு....''

''ஆரு அண்ணன்?'' லோகு குழப்பத்துடன் கேட்டாள்.

''என்ன லோகு. இவ்வளவு விவரம் புரியாம இருக்கே. நம்ம க்ரேட் ஹீரோ ரஞ்சித் தான்.

''என்னது? சினிமா ஸ்டார் ரஞ்சித்தா?'' லோகுவின் கண்கள் விரிந்தன. ''நானும் அம்மாவும் நேத்துக்கூட அவர் ஆக்ட் குடுத்த 'பதினெட்டாம் பருவம்' படம் பார்த்தோம். உங்களுக்கு அவரைத் தெரியுமா அத்தான்?'' லோகு இப்போது தயக்கம் களைந்து சகஜமாய்ப் பேசத் துவங்கினாள்.



"தெரியுமான்னு கேட்கறே... எங்க கல்லூரி விழாவுக்குத் தலைமை தாங்க ரஞ்சித் அண்ணன் வந்திருந்தப்ப, நான் லைட் ம்யூசிக் பாடறதைக் கேட்டாரு. விழா முடிந்ததும் என்னைத் தனியே வீட்டுக்கு வரச் சொல்லி அழைச்சாரு. நான் மறு நாள் அவர் வீட்டுக்குப்போனேன். இவ்வளவு பெரிய ஸ்டார் என்ன எளிமை தெரியுமா.... சொந்த அண்ணனாப் பழகினாரு. கிளம்பறப்போ ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுத்தாரு. உங்க காலேஜ் பசங்ககூட சேர்ந்து ஏதாவது சோஷல் ஒர்க் செய்யுங்கன்னாரு. நான் உடனே அண்ணன் பெயராலே மன்றம் துவங்கிட்டேன். வெள்ளத்தும்போது நாங்க ஜனங்களுக்கு உணவு, உடை எல்லாம் தந்தோம். அண்ணனே கூடநின்னாரு. இப்பப் பாரு காலேஜிலே என் பேருக்கே எவ்வளவு மதிப்பு தெரியுமா. வாத்யாருங்ககூட ஒரு மாதிரி மரியாதை தர்றாங்க. அண்ணன் படம் ரிலீஸான அன்னிக்குத் தோரணம் கட்ட, டிக்கெட் வாங்க எல்லாம் அவரே கவனிச்சுக்கிறார். அதோட, எப்ப நினைச்சாலும் ஷூட்டிங்குக்கு மத்தியிலோ, வீட்டிலோ நேரே அவர் கூடப் பேசலாம்."

லோகு வாய் பிளக்க அத்தானைப் பார்த்தாள். அத்தான் ரஞ்சித்துக்கு நெருக்கமானவரா.... அத்தான் பட்டணத்துல இவ்வளவு பெரிய ஆளா?

"கேளு லோகு. ரஞ்சித் அண்ணன் மன்றம் இவ்வளவு நல்லாச் சேவை செய்யறது பற்றி அந்த ராம்மோகன் ரசிகர் மன்றத்துக் கசமாலங்களுக்கு ஒரே வயித்தெரிச்சல். அவங்க எங்களைப் பத்தி இல்லாததும், பொல்லாததும்கிளப்பினாங்க. நாங்க உடனே முடிவு செய்திட்டோம். நாங்க அனைவரும் அண்ணன் விசிறிகளின் எண்ணிக்கையைப் பெருக்கணும். அண்ணன் திருமணம் செய்துக்கறவரை நாம யாரும் கல்யாணத்தைப் பற்றி நினைக்கக் கூடாதுன்னு.... உடம்பு ரத்தத்தாலே சத்தியம் செய்திருக்கோம்."

லோகுவுக்கு இப்போது கல்யாணம் முக்கியமாகத் தோன்றவில்லை. "அத்தான், மெட்ராஸுக்கு வரப்ப என்னையும் ரஞ்சித் அண்ணன் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்க் காட்டறீங்களா?"

"கட்டாயமா, அண்ணன் உனக்குவிருந்தே வைப்பாரு. அடுத்த மாசம் தஞ்சாவூருக்கு அண்ணன் வர்றாரு. அதுக்குஏற்பாடுசெய்யத் தான் நான் இப்ப வந்தேன். அவர் வர்ற சமயத்திலே ஊர்லே மேளம், விழா எல்லாம் எடுக்கணும். கொஞ்சம் பணம் தட்டுப்பாடாயிடுச்சு. அடுத்தமாசம் அவர்கிட்டே வாங்கித் திருப்பிடலாம்னு அம்மா தரமாட்டேங்கறாங்க."

"அத்தான், பணம்தானே வேணும். இந்தாங்க, இந்தக் காதுத் தோட்டையும் ஜிமிக்கியையும் எடுத்துக்குங்க. கட்டாயம் முக்காப் பவுனாவது தேறும்."

நித்யா தயங்கினான். "மாமாவுக்குத் தெரிஞ்சா...."

"அதெல்லாம் தெரிய வேணாம். உங்களுக்கு உதவி செய்ய எனக்கு உரிமையில்லையா? நீங்க மட்டும் அவரை எனக்குத் தூரத்திலிருந்தாவது காட்டுங்க."

தூரத்தே புவனாவின் தலை தெரியவும் லோகு அவசரமாக எழுந்து, தோட்டைக் கழற்றினாள். "அத்தான் பிடியுங்க. நம்ம ரெண்டு பேரைத் தவிர யாருக்கும் தெரிய வேணாம். நான் போயிட்டு வரட்டா...."


தாலடி நடந்தவள் திரும்பினாள். "ரஞ்சித் அண்ணனைச் சீக்கிரம் கல்யாணம் செய்துக்கச் சொல்லுங்க."

மறுநாள் காலை லோகேஸ்வரியின் இரு காதுத் தங்கத் தோடும், ஜிமிக்கியும் ஒரு சேர, மறைந்த துக்கத்தை வீடே கொண்டாடியது.

(தொடரும்)

மாதம் ஒரு மாவட்டம்

புதுக்கோட்டை



தற்போது நமது நிருபர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து, தகவல்கள் சேகரித்து வருகிறார்கள். பரபரப்பான கட்டுரைகள், பேட்டிகள் முதலியன புகைப் படங்களுடன் ஜனவரி 18, 25 இதழ்களில் இடம் பெறும்.

இப்போது! நியூட்ரின் வழங்குகிறது... இன்ஸ்டன்ட் ஃபுட்ஸ்!

விரும்பிக் கேட்டதுமே...



குலாப் ஜாமூன்!

ஆம், உண்மை. இப்போது நியூட்ரின், இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன்களை உங்களுக்கு வழங்குகின்றது. இச்சுவை கொழிக்கும் இனிப்புப் பண்டம், நொடிகளில் தயார்! நாவினில் நீரூறும் குலாப் ஜாமூன்களைத் தயாரித்து குடும்பத்தினரையும் நண்பர்களையும் வியப்பில் ஆழ்த்துங்கள். நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் உபயோகித்து, கணப்பொழுதில் தயாரித்து மகிழுங்கள்.

நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் 200 கிராம் மற்றும் 100 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

நீங்கள் விரும்பும் மிருதுவான தேனூறும் குலாப் ஜாமூன்களை உங்கள் அன்றாட உணவுடன் ருசித்து ரசித்துச் சாப்பிடுங்கள்.

வாழ்வில் இனியவைகளை வழங்குவோர் நியூட்ரின்!



நியூட்ரின்

இன்ஸ்டன்ட்

திகைப்பூட்டும் தித்திப்பு


nutrine

வழங்குவோர்: இந்தியாவிலேயே மிகப்பெருமளவில் விற்பனையாகும் மிட்டாய் தயாரிப்பாளர்கள்.


ACIL/0919/85 TAM

‘சில்லுச்’ சிரிப்பு!


டைம்ஸ் ஆஃப் இந்தியா வெளியிடான ‘சையன்ஸ் டுடே’யில் ஆர். கே. லக்ஷ்மண் வரைந்த சில சிரிப்புத் துணுக்குகள் இங்கே இடம் பெற்றுள்ளன...




"ரொம்ப • சரி! நான்தான் தப்புப் பண்ணிட்டேன்.... ஆனா மனுஷங்க செய்யற தப்புக்கு நீ விட்டுக் கொடுக்கல்லே.... நான் வேலையை விட்டே போயிடறேன்."



"இது என்ன மிஷின்ங்கறது இன்னும் தீர்மானமா தெரியல்லே. ஆனா எதுக்கும் இருக்கட்டும்னு கொஞ்சம் மைக்ரோ சிப்ஸைப் போட்டிருக்கோம். பொத்தானை அமுக்கினா அது நிச்சயமா ஏதாவது செய்யும்."



"ரெண்டு மூணு நாளைக்கு ஒண்ணும் டேடா ஃபீட் பண்ணலேன்னா இப்படித் தான்...."




"இவ்வளவு கஷ்டப்பட்டுத் திறந்தும் பிரயோசனமில்லே! டேடா பாங்க்னா இது!"



"பச்சை பட்டனை அழுத்தணுமா நீல பட்டனை அழுத்தணுமான்னு தெரியலை யாம். அதனுல் மறுபடியும் விண் கலம் செலுத்தறதை ஒத்தி வைக்கணும் போல இருக்கு....,"


"அந்தச் சனியன், மைக்ரோ சிப் பாமே! அதை முழுங்கினதிலிருந்து இப் படித்தான் இருக்கான் இவன்."



லியோ காபி

'சிறப்புப் பரிசுத் திட்டம்'

15.12.86 முதல் 31.1.87 வரை எங்கள் லியோ காபி கடைகளில் காபித்தூள் வாங்கி முத்திரையிட்ட கூப்பன்களைச் சேர்த்து சிறப்புப் பரிசுகளைப் பெற்று பலனடையுமாறு வாடிக்கையாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்



*2 கிலோ கூப்பன்களுக்கு 1 எவர் சில்வர் டம்ளர்
*4 கிலோ கூப்பன்களுக்கு 1 கப் & ஸாஸர் செட்



15-12-86 முதல் 31-1-87 வரை உள்ள விற்பனைக்கு மட்டும்

லியோ காபி

நிர்வாக அலுவலகம் : 16, தெற்கு மாடவீதி,
மைலாப்பூர், சென்னை - 600 004.
☎ 76557 & 76912

TRADE PRK MARK


கிளைகள் :

மைலாப்பூர், தி.நகர், ஜாம்பஜார், திருவல்லிக்கேணி, வண்ணாரப்பேட்டை, புரசவாக்கம், அமைந்தகரை, சைதாப்பேட்டை, அயனாவரம், ஜார்ஜ் டவுன், பெரம்பூர், அடையார், நுங்கம்பாக்கம், தாம்பரம், என்.எஸ்.சி. போஸ் ரோடு, மேற்கு மாம்பலம்.

விரைவில் எதிர்பாருங்கள் எங்கள் புதிய கிளைகள் : அண்ணாநகர், பல்லாவரம், நங்கநல்லூர்.

SHYAM

கம்ப்யூட்டர் ஜாதக கணிப்பு




- தமிழில் ஜாதகம் கணிக்க ரூ-25.00 (பலன்கள் இல்லாமல்)
- ஆங்கில ஜாதகம் ரூ-10.00
  ஆங்கில ஜாதகம் ரூ-25.00
- ஆங்கில ஜாதகம் பலனுடன் ரூ-50.00
- தபால் செலவு ரூ 3 தனி
  பிறந்த தேதி-மணி-இடம் குறிப்பிடுவது மிக அவசியம்

பிரபல ஜோதிஷர் பண்டித காழியூர்

நாராயணன்

16, ஹனுமந்தராயன் கோயில் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை 600005
த.பெ.எண். 403. தொலைபேசி : 842693

கம்ப்யூட்டர்: கல்வி நிலையங்களும் காளான்களும்



"கம்ப்யூட்டர்களால் இந்தியாவின் அனைத்துப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும். அதனால் கம்ப்யூட்டர் இயக்கம் கற்றுக் கொண்டால் நல்ல எதிர்காலம் உண்டு; அதைக் கற்றுக் கொள்வதும் மிகச் சுலபம்' என்பது போன்ற சில வலுவான. கருத்துக்கள் இன்று நமது சமுதாயத்தில் வேரூன்றிக் கொண்டிருக்கின்றன'' என்று ஹின்டிட்ரான் நிறுவனத்தின் எக்ஸிகியூடிவ் டைரக்டர் பிரவீண் காந்தி பேசியிருக்கிறார். இது எவ்வளவு தூரம் உண்மை அல்லது சாத்தியம் என்பதை காலம்தான் உணர்த்தும். ஆனால், 1984 இல் இந்திய அரசு தனது கம்ப்யூட்டர் கொள்கையை அறிவித்ததைத் தொடர்ந்து எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டர் அதிவேகமாக நுழைந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு வளர்ந்தது. கம்ப்யூட்டர் பயிற்சி நிலையங்களும் அவற்றை நாடிச் செல்லும் மாணவர் கூட்டமும் இந்த எதிர்பார்ப்பின் பிரதிபலிப்புத்தான். 'தெருவுக்கு நாலு கம்ப்யூட்டர் நிலையங்கள்' என்ற நிலை சீக்கிரமே ஏற்பட்டுவிடும் போலிருக்கிறது!

தற்போது சென்னையில் மட்டும் எண்பதுக்கும் மேற்பட்ட தனியார் கம்ப்யூட்டர் பயிற்சி நிலையங்கள், அரசு அங்கீகாரம் பெற்று இயங்குகின்றன. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (அப்ரண்டிஸ்ஷிப் டிரெயினிங்) யின் கட்டுப்பாட்டில் இயங்குபவை இவை.

தியாகராய நகரிலுள்ள ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் கம்ப்யூட்டர் மையத்தில் கிடைத்த தகவல்கள்:

பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். இங்கு, ஆறு வாரங்கள் பயிற்சி பெறலாம். பேஸிக், கோபால், ஃபோர்ட்ரான் என்ற மூன்று 'மொழி' களில் பயிற்சி தருகிறார்கள். வயது வரம்பு பதினைந்து முதல் நாற்பத்தைந்து வரை. பயிற்சி முடிந்து ஒரு வாரத்தில் தேர்வு. அரசாங்கச் சான்றிதழ் தரப்படுகிறது. இந்தப் பயிற்சியைப் பெறுபவர்கள் குறைந்த பட்சம்



ராமகிருஷ்ணா மிஷன் கம்ப்யூட்டர் மையம்

ஐம்பது 'ப்ராப்ளம்' தெரிந்து கொண்டு விடுகிறார்கள்.

இந்த ஆறு வாரங்களில் மொத்தம் இருபது மணி நேரம்தான் செயல்முறை வகுப்புக்களுக்கு ஒதுக்குகிறார்கள். பேஸிக், ஃபோர்ட்ரான், கோபால் மொழிகளில் 'தியரி', முறையே 54, 56, 57 மணி நேரங்கள் என்பது பாடத்திட்டம்.

பிளஸ்டூவில் இரண்டு ஆண்டுகளில், வாரம் ஆறு மணி நேரம் கம்ப்யூட்டர் அறிவியலுக்கு ஒதுக்கப்படுகிறது. பள்ளிப் பாடத்திட்டத்தில் கோபால் மொழியில் பயிற்சி இடம் பெறவில்லை; பேஸிக்கும் ஃபோர்ட்ரானும்தான் இடம் பெற்றுள்ளன. இவ்விரண்டையும் கற்றுக் கொண்டால் சீக்கிரமே கோபால் கற்றுக் கொண்டு விடலாம்.

இராமகிருஷ்ணா கம்ப்யூட்டர் மையத்தில், இவர்கள் நிறுவனத்தோடு இணைந்த மூன்று மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் வந்து செயல்முறைப் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கு இடையூறு இல்லாத நிலையில் தான் காலையிலும் மாலையிலும் தனிப்பட்டவர்களுக்குப் பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மயிலாப்பூர் லேடி சிவசாமி அய்யர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிடைத்த தகவல்கள்:

கம்ப்யூட்டர் கல்வியை இந்த ஆண்டுதான் தொடங்கியிருக்கிறார்கள். கம்ப்யூட்டர் இன்னும் வாங்கவில்லை. பிளஸ் டூ முதல் ஆண்டு வகுப்பில் செய்முறை கிடையாது. கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனம் ஒன்றிலிருந்து பயிற்சி தர, பகுதி நேரமாக ஒருவர் வந்து போகிறார். இவரே நான்கைந்து பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடம் நடத்துகிறார். தேவைப்படும் போது சிறிய கம்ப்யூட்டர் ஒன்றை அவரே கொண்டு வந்தும் பயன் படுத்துகிறார்.

நானூறு மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெற்றவர்களுக்கு மட்டுமே இங்கே அனுமதி கிடைக்கிறது. அதுவும் மொத்தம் ஐம்பது மாணவியர்தான் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிறைய 'டிமாண்ட்' இருக்கிறது என்று தலைமையாசிரியை தெரிவித்தார்.

பொதுவான சில தகவல்கள்

பள்ளிகளைப் பொறுத்தவரை, அரசின் கல்வித் துறை, பாடத் திட்டங்களை மட்டும் வகுத்துக் கொடுத்திருக்கிறது. பிளஸ் டூவில் பாடம் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டாலும், பாட நூல்கள் இன்னும் தயாராகவில்லை. கம்ப்யூட்டர் பற்றிய அடிப்படை அறிவு என்பதை விடப் பொதுவான ஓர் அறிமுகம் என்றே பிளஸ் டூ பயிற்சியைச் சொல்ல முடியும்.

இப்போதைக்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகமில்லை. பெரும்பாலும் கம்ப்யூட்டர் நிறுவனங்களிலிருந்து பகுதி நேர அடிப்படையில் ஆசிரியர்கள் வந்துதான் வகுப்பு எடுக்க வேண்டியிருக்கிறது. அடுத்து வரும் ஆண்டுகளில் இது சீரடையக் கூடும்.

ஆங்காங்கே சில கல்லூரிகளில் பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் ஸயன்ஸ் வகுப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் கம்ப்யூட்டர் சயன்ஸில் பட்ட மேல் படிப்பை முடித்து, முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது சிரமம்தான். குறைந்த பட்சம், கம்ப்யூட்டர் தொடர்புள்ள மற்ற துறைகளில் தேர்ச்சி பெற்ற தகுதியாவது இந்த ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். இங்கும் தொடக்க நிலையில்தான் இருக்கிறோம்.

காளான் நிறுவனங்கள்

'இந்தக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் ஏழாவது ஃபிளாட்டில் கம்ப்யூட்டர் பயிற்சி தரப்படும்' என்று கூடச் சில அறிவிப்புக்கள் கண்களில் படுகின்றன. அங்கீகாரம் பெறாத இத்தகைய பல அமைப்புக்கள், சான்றிதழ்களும் வழங்குகின்றன. எந்த நிறுவனத்தில் சேர்வது, எதில் சேர்ந்து ஏமாறக் கூடாது என்பதற்கு ஒரு கம்ப்யூட்டர் புரோகிராமிங் யாராவது செய்தால் நல்லது!

— 'யெஸ்'



''மூணே முக்கால் அரைக்கால் விசை புளி, நாலே முக்கால் அரைக்கால் ரூபாய் என்றால், ஒண்ணே முக்கால் அரைக்கால் விசை புளி என்ன விலை என்கிற பழைய கால கணக்கை கம்ப்யூட்டர்கிட்டே கேட்டியே, என்ன பதில் சொன்னது?''

''உங்க தாத்தாகிட்டே கேள்னு சொல்லிடுத்து!''

— ராமபிரான்

எம்.ஜி.ஆரைத் தமிழர் என்று நிரூபிப்பதால் என்ன பயன்?

• தொழில் தந்திரம்



* பாலை அசோக், திருச்சி.

? ஏழாவது மனிதன் தந்த பாலை சண்முகம். மற்றுமொரு படத்தை இன்று தயாரித்து வருகிறாராமே?

! தயாரித்து முடித்து, சென்ஸார்கள் செய்த ஏகப்பட்ட வெட்டுக்களையும் ஏற்று, மீண்டும் சான்றிதழுக்காகச் சமர்ப்பித்தார். அப்போதும் சென்சார் சான்றிதழ் கிடைக்காத போது உச்சநீதிமன்றம் சென்றார். படத்தை வெளியிட அனுமதி பெற்றிருக்கிறார். சென்சாரில் இத்தனை கெடுபிடி ஏன் என்றால் பாலை தயாரித்துள்ள சினிமாவில் இன்றைய அரசியலின் சுயரூபம் படம் பிடித்துக் காட்டப்படுவதுதான். தயாரிப்பு பாலை; ஒத்துழைப்பு சோ! கேட்கவா வேண்டும்!

* இந்துப்பிரியன், சென்னை — 82.

? சமீபத்தில் படித்து ரசித்த ஆங்கில நாவல் ஏதாவது?

! லீ அயகோக்கா என்பவர் எழுதிய சுய சரிதை; நாவலை விட ருசிகரமாகவும் மனத் திண்மையை வளர்ப்பதாகவும் அமைந்திருந்தது. லீ அயகோக்கா இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் குடியேறிய நிக்கோலா அயகோக்கா என்ற இத்தாலியருக்குப் பிறந்தவர். படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து, மிகச் சிறந்த நிர்வாகி என்று பெயர் பெற்று, ஃபோர்டு மோட்டார் கம்பெனியின் வெற்றிக்கு வழிவகுத்தவர். அவரது வளர்ச்சியே அவருக்கு எதிராக வேலை செய்ய, ஹென்றி ஃபோர்டு அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டார்! இதுவே அயகோக்காவுக்கு ஒரு சவாலாக அமைந்தது. கிரைஸ்லர் கார்ப்பரேஷன் என்ற மற்றொரு மோட்டார் கார் நிறுவனத்துடன் தம்மை இணைத்துக் கொண்டார். அமெரிக்காவில் இடைக்காலத்தில் பெட்ரோல் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டதாலும், உடன் விளைவாக ஜப்பானிய சிறிய கார்கள் பிரபலமடைந்ததாலும், அதள பாதாளத்துக்குச் சரிந்து கொண்டிருந்த கிரைஸ்லர் நிறுவனத்தை மறுபடி நிமிர்ந்து நிலைத்து நிற்கச் செய்ததுடன் உயரவும் உதவினார். அயகோக்காவின் வாழ்க்கைச் சரித்திரம், ராஜதந்திரம் போலத் தொழில் தந்திரமும் எவ்வளவு சிரமமானது; அதற்கு எத்தனை கூர்மதியும், சலியாத உழைப்பும் தேவை என்பதை உணர்த்துகிறது.

* எஸ். ஜெயராமன், புதூர்.*

? முதலாளித்துவக் கொள்கையை உடைய அமெரிக்காவும் சோஷலிஸக் கொள்கையை உடைய ரஷ்யாவும் முன்னேறி விட்டன. ஆனால் இரு நாட்டுக் கொள்கைகளின் நன்மைகளை மட்டுமே பின்பற்றும் இந்தியா முன்னேறவில்லையே? ஏன்?

! ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால் என்று இருப்பவர்களின் கதி இதுதான். இரு நாட்டுக் கொள்கைகளின் நன்மைகளை மட்டும் பிரித்தெடுத்து நாம் அமுல்படுத்த முடியாது. அவற்றோடுகூடவே இருகொள்கைகளின் தீமைகளும் நம்மை வந்து அடையவே செய்யும். எனவே 'ஜனநாயக சோஷலிஸம்' என்று பெயரிலேயே முரண்பாடு கொண்ட கொள்கையை நாம் கட்டிக் கொண்டு அழும் வரை நாடு முன்னேறுவது இரட்டிப்புக் கஷ்டம்.

* கா. அப்துல் மஜீத், திருமயம்.

? நமது முதல்வர் ஜப்பான் டாக்டர் கானுவைக் கொண்டு ஏழை மக்களும் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பளித்தது பற்றி உங்கள் கருத்து?

! ஒருநாள் பரிசோதனையால் ஒரு கோடி மக்களின் பிணி தீர்ந்துவிடாது. ஏதோ 'முதல்வருக்கு மட்டும் அயல் நாட்டு டாக்டர்கள் வைத்தியம் கிடைக்கிறது; சாமானியருக்குக் கிடைக்குமா?' என்று பேச்செழாமலிருக்க இந்தக் காரியம் உதவலாம். அவ்வளவுதான். ஆனால் இவற்றுக்கெல்லாம் விலையாக கானுவுக்குத் தரப்பட்ட விலையுயர்ந்த பரிசு தேவையற்றது. அதை டாக்டர் கானு தம்முடன் எடுத்துச் செல்வதென்றால் இந்திய சட்ட விதிமுறைகளை மீற வேண்டும். அல்லது அவருக்கு மட்டும் பிரத்யேக சலுகையை அரசு வழங்க வேண்டும். இதனால் ஏழைத் தமிழனுக்கும் சரி, டாக்டர் கானுவுக்கும் சரி, மாநில, மத்திய அரசுகளுக்கும் சரி, தர்ம சங்கடமான ஒரு நிலையையே எம்.ஜி. ஆர். தோற்றுவித்தார்.

* வெற்றியூர் வெங்கட், நாட்டரசன் கோட்டை.

? எம். ஜி. ஆர். தமிழர்தான் என்று நிரூபிப்பதில் யாருக்கு என்ன பயன்?

! புத்தகம் எழுதியவருக்கும் பிரசுரித்தவருக்கும் பலன் இல்லாமல் போகாது. அவர் தமிழர் என்பதில் நமக்கு மகிழ்ச்சியே; ஆனால் ஒருவேளை மலையாளியாகவே இருந்தால்தான் என்ன குடி முழுகிப் போய்விட்

டது? இப்படியே போனால் மகாராஷ்டிரா வில் மந்திரி பதவி வகிக்கும் தமிழர் தம்மை மகாராஷ்டிரன் என்று நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். இத்தகைய குறுகிய நோக்குகளிலிருந்து பாரதத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!

*** இரா. சம்பத்குமார், இராசிபுரம்.**

? 1986 ஆம் ஆண்டின் ஹீரோவாக யாரைக் குறிப்பிடுவீர்கள்?

! - காவஸ்கர். ஹீரோயின், நீங்கள் கேட்கா விட்டாலும், பி.டி. உஷாதான்!

*** இரா. ஜயப்பிரகாசம், வெள்ளாண்டி வலசை.**

? கொட்டும் மழையில் இராஜாஜி வீடு தேடிச் சென்று 'மதுக்கடைகள் வேண் டாம்' என்ற போது வராத ஞானம், பாலே வன ரோஜாக்களுக்குத் திரைப்பட வசனம் எழுதும் போது கலைஞருக்கு உதயம் ஆவது ஏன்?

! இரண்டுக்கும் இடையில் ஏற்பட்ட தேர்தல் தோல்விகள்தான் பாடம் புகட்டி யிருக்க வேண்டும். ஞானம் என்பது பூரண சந்திரன் போன்றது. அதிகார மமதை என்ற மேகம் அதனை மறைக்கும் தருணங்கள் உண்டு.

நீங்கள் கேட்டவை — தராசு

அத்தகுதி காரணமாகவே அவரை வர விட மாட்டார்கள்!

*** ஆர். ஜி. சிவக்குமார், பழனி.**

? புதுக்கவிதையில் தேக்க நிலை ஏற்பட்டு விட்டது என்ற கருத்தில் உமக்கு உடன்பாடு உண்டா?

! இல்லை. ஆனால் தேக்க நிலை உண்டாகி விட்டது என்று சிலர் கூறுவதற்கு உள்ள உரிமையை நான் மதிக்கிறேன். இன்றைய புதுக் கவிதைகளை எழுதப் பலருக்கும் உரிமை உண்டென்றால் அவற்றை ஆய்வு செய்யவும் விமர்சிக்கவும் பிறருக்கு உரிமை உண்டு. அந்த விமர்சனத்தை ஏற்கலாம் அல்லது ஒதுக்கலாம். ஆனால் விமர்சகரை "மறை கழன்ற மறைமலை" என்பது போன்ற அநாக ரிக வார்த்தைகளால் ஏசுவது தவறு.

*** மு. ஜானகிராமன், மயிலாடுதுறை.**

? ஹெக்டேயிடம் தண்ணீர் கேட்கச் சென்ற கே. கே. எஸ். எஸ். ஆர். ஆர். எப்படித் தண்ணீர் கேட்டிருப்பார்? (கற்பனையாக)

! என்.டி. ஆரை சந்திக்கும்போது, 'ஹிக் ஹிக்' என்று விக்கிக் காட்டலாம். ஹெக்டே யை சந்திக்கும்போது, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலார் பாடலைப் பாடலாம்.



*** எஸ். ரஜினி பிரியன், ஈரோடு.**

? ஓர் அரசியல்வாதி, ஒரு நடிகை, ஒரு பத்திரிகையாளர் மூவரும் உங்களைக் காணக் காத்திருந்தால் யாரை முதலில் சந்தித்து உரையாட விரும்புவீர்கள்?

! யாரையும் காக்க வைக்காமல் மூவரை யும் ஒரே சமயத்தில் சந்தித்துவிடுவேன். ரகசியம் என்ன வேண்டிக் கிடக்கிறது? தனித்தனியே சந்திக்க அவசியம் என்ன?

*** கே. எம். என். சுப்பராஜன், சிவகாசி.**

? கல்லினை ரூ. 1.50 க்கு வாங்குவதால் தொழிலாளிக்கு என்ன கிடைக்கும்?

! அரசு நிர்ணயித்துள்ள அளவு.

*** ஆர். அருணாசலம், திருவண்ணாமலை.**

? அடுத்த ஜனாதிபதி யார்?

! யார் என்று தெரியாது. ஜனாதிபதியாக வரத் தகுதியுடையவர் யார் என்பது தெரியும்.


*** ஜி. ஆர். கிருஷ்ணன், தியாகதுருகம்.**

? அ. தி. மு. க. வில் எஸ்.டி.எஸ். கட்சி யும் காங்கிரஸில் சரத் பவார் கட்சியும் சேர்ந் தது குறித்து — ஒப்பிடுக.


! சரத் பாவார், காங்கிரஸின் இன்றையத் தலைமையை ஏசியவர் அல்ல; லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியவர் அல்ல. எனவே இன்றைய காங்கிரஸ் தலைமையை அவர் ஏற்று அக்கட்சியுடன் இணைவதை நியாயப் படுத்த வழியிருக்கிறது. எஸ்.டி.எஸ்.ஸிடம் இது கிடையாது.

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**

எஸ். ஜெயராமன்,
புதூர்,
திருநெல்லிக்காவல் அஞ்சல்,
610 205 (தஞ்சை மாவ)



அவள் பெயர் எலிசபெத். அமெரிக்கப் பெண்களுக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். காரணம்: எலிசபெத் ஆர்டன் என்ற அழகுச் சாதனங்கள் தயாரிப்பாளரின் விற்பனை நிலையத்திற்குவரும்பெண்களுக்குப் பொறுமையாக 'மேக்—அப்' 'போட்டு'க் காட்டுகிறாள் எலிசபெத். கடைக்கு வந்துள்ள பெண்ணின் முக வெட்டுக்கும், நிறத்துக்கும், இதர தேவைகளுக்கும் ஏற்ப விதவிதமான நிறங்களில் பவுடர் முதல் லிப்ஸ்டிக் வரை போட்டுக் காட்டுகிறாள். ஆனால் இத்தனையும் வாடிக்கையாளரின் முகத்தைத் தொடாமலே செய்யப்படுகிறது. வெறுமே கண்ணாடி முன்னால் போய் நின்றால் போதும். 'கம்ப்யூட்டர் எலிசபெத்' சரியான நிறத்தைத் தேர்ந்தெடுத்து, அதை உபயோகித்தால் எப்படி இருக்கும் என்பதைக் கண்ணாடியில் தெரியும் உருவத்



தில் காண்பித்துவிடும். வாடிக்கையாளர் திருப்தியடையும் வரை மாற்றி மாற்றி வெவ்வேறு விதமாக 'மேக்—அப்'செய்து காட்டும். இதேபோல் வாடிக்கையாளரின் கேசத்தின் நிறம், உயரம், பருமன் முதலியவற்றுக்கு ஏற்ப உடைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் கம்ப்யூட்டர்கள் உதவுகின்றன. சில நிமிஷ நேரத்தில் பலப் பல விதமான உடைகளை அணியாமல் அணிந்து பார்த்துத் தேவையானதைத் தேர்ந்தெடுக்கலாம்!

கடைகளில் விற்பனையாளர்களின் இடத்தைக் கம்ப்யூட்டர் பிடித்துக் கொண்டு வரு

அடேடே!

கிறது!

ஆபீஸை விட்டுக் கிளம்பும் போது காரிலிருந்தபடி வீட்டுக்குப் போன் செய்தால் ஓர் இனிமையான குரல் பதில் சொல்கிறது. ''குளிப்பதற்கு வெந்நீர் போட்டு இரவுச் சாப்பாட்டைச் சுட வைத்து, வி. சி. ஆரை ஆன் செய்து வை'' என்று கட்டளை பிறப்பித்துவிட்டு அரை மணி நேரத்தில் வீடு போய்ச் சேர்ந்தால், ஒரு சங்கேத வார்த்தையைச் சொன்னதும் வாசல் கதவு தானாகத் திறந்து கொள்கிறது. உள்ளே நுழைந்ததும் தானாக மூடிக் கொள்கிறது. குளித்து, நிம்மதியாகச் சாப்பிட்டு விட்டுப் படுக்கலாம்.

அதிசய

வீட்டு வேலைகளைச் செய்யும் 'இன்டெலிஹோம்' என்ற கம்ப்யூட்டர், அன்றாட வேலைகளைச் செய்வதுடன் வீட்டில் தனியே இருக்கும் குழந்தைகள் அல்லது வயதானவர்கள் மீது 'ஒரு கண்' வைத்துக் கொள்கிறது. தேவைப்பட்டால் டாக்டரையோ போலீஸையோ அழைக்கிறது! வீட்டு உபயோகப் பொருட்கள் ஏதும் பழுதானால் பழுது பார்க்க ஆளை வரவழைத்து, அவன் தன் வேலையைச் சரியாகச் செய்கிறானா என்று மேற்பார்வை யிடுகிறது!

விமானத்தில் பறந்தபடியே பூமியில் இருக்கும் மைக்ரோவேவ் செய்தித் தொடர்புச் சாதனங்களிலிருந்துவெளிப்படும்செய்திகளை ஒட்டுக் கேட்கும் ஒற்றர் விமானங்கள் உண்டு. ஒரு சமயம் ரஷ்யச் செய்திகளை 'ஒட்டுக் கேட்ட' ஓர் ஒற்றர் விமானத்தை நோக்கி ரஷ்யர்கள் சுட்டதும் விமானத்துடன் சேர்ந்து அதன் ஓட்டுனரும் அழிந்து போனார்! இதனால் இப்போது, ஓட்டுனரே இல்லாத, கம்ப்யூட்டர்களால் செலுத்தப்படும் விமானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது அமெரிக்க அரசு. முதல் கட்டமாக, பதினெட்டு மணி நேரம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மேலாகக் குறுக்கும் நெடுக்கும் பறந்து, செய்தி சேகரிக்கும் **TR — 1** என்ற ஓட்டுனரில்லா விமானத்தை உருவாக்கியுள்ளது!


ஆள் நடமாட்டமே இல்லாத ஆரஞ்சு மரத் தோப்பு. வரிசை வரிசையாக சிப்பாய்கள் மாதிரி நிற்கும் ஆரஞ்சு மரங்களில் எல்லாம் கொத்துக் கொத்தாக அஸ்தமன சூரியன் மாதிரி ஆரஞ்சுகள் தொங்குகின்றன. இடைவிடாத ஒரு மெல்லிய உறுமல் மட்டும் அங்கே கேட்கிறது. அந்தத் திக்கில்

போடவைக்கும்

பார்த்தால் பத்துக் கைகளுடன் ஓர் இயந்திர மனிதன் — மரங்களுக்கு இடையே இருக்கும் பாதையின் வழியே நிதானமாகச் செல்கிறான். அவனுடைய பத்து கரங்களும் மாறி மாறி நீண்டு, பழுத்த ஆரஞ்சுகளை மட்டும் பறித்து கூடைக்குள் போடுகின்றன. ஒரு நிமிடத்துக்கு முந்நூறு ஆரஞ்சுகளைப் பறித்த படி முன்னேறுகிறான் இந்த இயந்திர மனிதன்.


இந்தக் காட்சியை ஆரஞ்சுத் தோட்டங்களில் சகஜமாகக் காணக் கூடிய நாள் வெகு தொலைவில் இல்லை என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். இப்போதைக்கு வெளிச்சம் நிறைந்த ஓர் அறையினுள் செயற்கை மரங்

ம்ப்யூட்டர்கள்!




களிலிருந்து பிளாஸ்டிக் ஆரஞ்சுகளைப் பறித்துக் கொண்டிருக்கின்றன இந்த ரோபோக்கள்.

'கண்ணால் பார்த்து, கையால் செய்யும்' கம்ப்யூட்டர் மனிதனை வெற்றிகரமாகத் தொழிற்சாலைகளில் புகுத்திவிட்டார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். இவை கார் கதவுகளைப் பொருத்துவது முதல் பல்புகளைச் சரி பார்ப்பது வரை பலவிதமான வேலைகளைச் செய்து வருகின்றன. ஆனால் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள இத்தகைய ரோபோக்களால், கட்டுப்படுத்தப்பட்ட செயற்கை வெளிச்சத்தில் மட்டுமே வேலை செய்ய முடியும். தோட்டங்கள், வயல்கள், கட்டட வேலைத் தளங்கள் போன்ற திறந்தவெளியில் இயற்கை வெளிச்சத்தில் இவற்றைப் பயன்படுத்த வேண்டுமானால், மனிதக் கண்களைப் போல ஒரு வினாடிக்குள் பத்து மில்லியன் கணக்கு



களைப் போட்டு ஓர் உருவத்தைப் பதிவு செய்யும் வண்ணம் இவற்றை மேம்படுத்த வேண்டும். இதில் சீக்கிரமே வெற்றி காண முடியும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.



டாக்டர் இல்லாத ஊர்களில் கம்ப்யூட்டர்களின் துணையுடன் சுகாதார ஊழியர்களே ஓரளவிற்கு மருத்துவம் செய்ய முடியும் என்ற நிலை இன்று உருவாகியிருக்கிறது. நோயாளியைப் பரிசோதித்து நோய்க்கான அறிகுறிகளைக் கம்ப்யூட்டர்களில் செலுத்த வேண்டும். பிறகு கம்ப்யூட்டர் சுகாதார ஊழியர்களிடம் கேள்விகள் கேட்டு, விடைகளைப் பெற்று., அதற்கேற்ப மருத்துவ யோசனைகளை அளிக்கிறது.

இதன் மூலம் டாக்டர் இல்லாத இடங்களில் (குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில்) உடனுக்குடன் தேவையான அவசர மருத்துவ உதவிகளை அளிக்க முடிகிறது. ஒரு நிபுணர் மட்டுமே கவனிக்க வேண்டிய சிக்கலான கேஸ்களானால் அதையும் கம்ப்யூட்டரே சொல்லிவிடுகிறது. அதன் அறிவுரையை ஏற்று அத்தகைய நோயாளிகளைப் பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கலாம்!

ஆதாரம்: **நியூஸ் வீக்**

மின் கட்டணையில் முதல்...

சென்னை ஐ. ஐ. டி. யின் கம்ப்யூட்டர் துறை பேராசிரியர் முத்து கிருஷ்ணன் கூறியவை:



முத்து கிருஷ்ணன்

கம்ப்யூட்டர்: இதனை ஆங்கிலத்தில் **Information processing machine** என்று விளக்குகிறார்கள். நாம் கொடுக்கும் தகவல்களை வகைப்படுத்தி, சேமித்து வைத்து, அவற்றின் துணையுடன் சில கணக்குகளுக்கும் கேள்விகளுக்கும் விடையளிக்கும் ஒரு கருவி என்று கம்ப்யூட்டரை விளக்கலாம். சொன்னதை மறக்காமல் இருப்பது; அதி வேகமாக, தவறில்லாமல், சிக்கலான கேள்விகளுக்கு விடையளிப்பது-இவைதான் கம்ப்யூட்டரின் தலையாய 'நற்குணங்கள்.'

புரோகிராமிங் (Programming): இது சமையல் குறிப்பு மாதிரி. எந்தெந்த பொருட்களை எந்தெந்த அளவில் எடுத்துக் கொண்டு, எப்படி எப்படி அவற்றைப் பயன்படுத்தினால் ஒரு பதார்த்தத்தைத் தயாரிக்கலாம் என்று சொல்வது போல — படிப்படியாக என்னென்ன முறைகளைக் கையாண்டு இயங்க வேண்டும் என்று கம்ப்யூட்டருக்கு வழங்கப்படும் கட்டளைகள்.

சாம்பாருக்கு உப்புப் போட வேண்டும் என்று சொல்வது ஒரு தேர்ந்த சமையல்காரருக்கு முட்டாள்தனமாகத் தோன்றலாம். ஆனால் அதைப் போன்ற ஒரு சிறிய குறிப்பைக் கூடத் தரத் தவறக் கூடாது. கம்ப்யூட்டருக்குத் தானாக எதையும் கணித்துச் செய்யும் ஆற்றல் கிடையாது. அதற்குச் சொல்லப்படும் பாடமே புரோகிராம்.

Language: மொழி என்று இதை எளிதில் விளக்கி விடலாம். கம்ப்யூட்டருக்கும் அதை இயக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தகவல் தொடர்புச் சாதனம்.

பல நூறு கம்ப்யூட்டர் மொழிகள் இருந்தாலும் Basic, Cobol, Fortran போன்ற ஒரு சில மொழிகளே அதிகம் உபயோகப்படுத்தப்படுகின்றன.

சாதாரணமாகப் பொறியியல் துறையில் சிக்கலான கணக்குகள், ஈகுவேஷன்களுக்கு விடை காண Fortran பயன்படுத்தப்படுகிறது. வர்த்தகக் கணக்குகள், பதிவேடு கணக்குகளுக்கு Cobol உபயோகிக்கப்படுகிறது. சிறிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் பயன்படுத்தப்படும் எளிய மொழி **Basic. Beginers All-purpose Symbolic Instruction to Computers** என்பதன் குறுகிய வடிவம்தான் **Basic.**



கம்ப்யூட்டர் பற்றிப் பேசும் போது **'ஹார்ட்வேர்' 'சாஃப்ட்வேர்'** என்ற சொற்கள் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன. ஹார்டுவேர் என்பது சமையலுக்குத் தேவையான பாத்திரம், பண்டம், அடுப்பு போன்ற உபகரணங்களோடு ஒப்பிடக் கூடிய கம்ப்யூட்டரின் வெளிப்பாகங்கள் — இயந்திரம் போன்றவை.

...ஸ்டார் வார்ஸ் திட்டம் வரை

ஸாஃப்ட்வேர்: சமையலுக்குத் தேவையான சாமான்கள் (உணவுப் பொருட்கள்)+ சமைப்பவர், அதாவது கம்ப்யூட்டருக்கு அளிக்கப்படும் data அல்லது தகவல்கள் + அதனை இயக்கும் (Central Processing Unit (CPU) எனப்படும் பகுதி. இந்த CPU (மையப் பகுதி)தான் சமையலின் ஒவ்வொரு கட்டத்தையும் படிப்படியாகச் செயல்படுத்துகிறது.

சூப்பர் கம்ப்யூட்டர்: கம்ப்யூட்டரின் வேகத்தை ஒரு விநாடியில் எத்தனை மில்லியன் கட்டளைகளை அது நிறைவேற்றும் என்பதைப் பொறுத்து MIPS (Millions of Instructions per second) என்ற அளவில் மதிப்பிடுவார்கள். ஒரு சாதாரண கம்ப்யூட்டர் ஒரு விநாடியில் சில மில்லியன் அல்லது சில நூறு மில்லியன் கட்டளைகளை நிறைவேற்றும். ஒரு சூப்பர் கம்ப்யூட்டரோ அதே விநாடியில் பல்லாயிரம் மில்லியன் கட்டளைகளை நிறைவேற்றும்! வானிலை ஆராய்ச்சியிலும் சில நுணுக்கமான பொறியியல் ஆராய்ச்சிகளிலும் சூப்பர் கம்ப்யூட்டர் நிறைய உதவ வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக அரசுத் துறையில் எதிர்காலத் திட்டமிடுதலுக்கு இது மிகவும் உதவும். சூப்பர் கம்ப்யூட்டரை இந்தியாவுக்கு வழங்கினால் அதன் நுணுக்கங்கள் இங்கிருந்து ரஷ்யாவுக்குப் போய் விடுமோ என்று அமெரிக்கா முதலில் பயந்து, பின்னர் ஒருவாறு சமாதானம் அடைந்து இப்போது தரச் சம்மதித்திருக்கிறது.

கம்ப்யூட்டர் தவறே செய்யாதா? எல்லா இயந்திரங்களையும் போல் கம்ப்யூட்டரும் சில நேரங்களில் தவறக்கூடும். தவறுகள் நேர்வதற்கு மூன்று காரணங்கள் இருக்கக்கூடும்:

ஹார்டுவேர் — கம்ப்யூட்டரின் வெளிப்பாகங்கள் தரமாக இல்லாவிட்டால் தவறு நேரும். ஆனால் இன்றுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தால் இந்தத் தரக் கட்டுப்பாட்டை வெகு எளிதில் காப்பாற்ற முடியும். எனவே உபகரணக் கோளாறுகளால் கம்ப்யூட்டர் தவறு செய்வது அரிது.

டேடா — கொடுக்கப்படும் தகவல் தவறாக இருந்தால் கிடைக்கும் விடையும் தவறாகத்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு அடுத்த இதழில் இடம் பெறும்.

தான் இருக்கும்.

புரோக்ராம்: செயல்முறை தவறாகத் தரப்பட்டிருந்தால் அல்லது ஒரு செயல்முறையைத் தர மறந்துவிட்டால் தவறுகள் நேரும். உதாரணமாக அமெரிக்காவில் மின் கட்டண பில்கள் தயாரிக்கும் கம்ப்யூட்டர் சைபர் டாலருக்கு பில் போட்டது. சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து சைபர் டாலருக்குக் காசோலை வந்து சேரும் வரை அந்தக் கம்ப்யூட்டர் பூஜ்யம் டாலர் பில்லை நினைவூட்டிக் கடிதங்கள் அனுப்பிக் கொண்டேயிருந்தது!

இது எளிய, சாதாரணத் தவறுதான். ஆனால் மிகச் சிக்கலான, அபாயகரமான விஞ்ஞான, பாதுகாப்புத் துறை புரோக்ராம்கள் தயாரிக்கும் போது இது போன்ற சிறிய தவறு செய்தால் கூடப் பேரழிவும் இழப்பும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதனால்தான் ரேகனின் ஸ்டார் வார்ஸ் திட்டம் இவ்வளவு கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

மனிதனா? கம்ப்யூட்டரா?: பறவைகள் பறப்பதைப் பார்த்து மனிதன் விமானத்தை உருவாக்கினான். ஆனால் அந்த இரண்டும் ஒருநாளும் சமமாகி விட முடியாது; சில வேற்றுமைகளைக் கருதும்போது அவற்றை ஒப்பிடுவது கூட முட்டாள்தனம்தான். இதைப் போல் கம்ப்யூட்டரையும் மனித மூளையையும், ஒப்பிடுவதும், ஒரே தராசில் நிறுத்தி எடை போடுவதும் சரியாகாது.

மனிதனின் வாழ்க்கை அனுபவங்கள் அவனுடைய மூளையிலும் மனத்திலும் பதிவாகி வாழ்நாள் முழுவதும் அவனுக்கு உதவுகின்றன. உணர்வுகளின் அடிப்படையிலும் அவன் செயல்படுகிறான். மனிதனின் சில செயல்களை அணு அணுவாக ஆராய்ந்து அவை எப்படி நிகழ்கின்றன என்று கண்டுபிடிப்பது இதுவரை இயலாமலேயே இருந்திருக்கிறது. உதாரணத்துக்கு ஒரு மனிதன் சுமார் நூறு குரல்களைக் கேட்டு அவற்றுக்குரியவர்களை அடையாளம் சொல்ல முடியும் என்று வைத்துக் கொள்வோம். இந்த நூறு குரல்களின் குணச்சித்திரங்களை எப்படி அவனால் வகை பிரித்து அவற்றுக்கு உரிய நபரோடு தொடர்புப் படுத்த முடிகிறது என்பதை விஞ்ஞான ரீதியாக, திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. இந்தப் 'பொருத்துதல்' எப்படி நிகழ்கிறது என்று முதலில் நமக்குத் தெரிந்தால்தான் அதைக் கம்ப்யூட்டருக்குக் 'கற்றுத் தர முடியும்.

மனித இயல்பின் மர்மங்களையே நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளாத நிலையில் கம்ப்யூட்டருடன் மனிதனை ஒப்பிட்டுப் பேசுவது தவறுதான்.

தொகுப்பு: சீதா ரவி.

கணவன்: நீ கர்ப்பமாயிருக்கியான்னு கம்ப்யூட்டரைக் கேட்டியே, அது என்ன சொன்னது?

மனைவி: 'அடிக் கள்ளி!'


— ராமபிரான்



ஹைதராபாத் பாரம்பரியமும் முன்னேற்றமும் கலந்த இடம். கடந்த காலமும் தற்காலமும் இணைந்து விளங்குமிடம். இந்திய — சார்சனிய (அரபு) கட்டடக் கலைக்கு உயரிய எடுத்துக்காட்டாக விளங்கும் சார்மினார். பழைய நகரின் கறுகறுப்பு மிகுந்த கடை வீதிகளின் இடையில் நெடிதுயர்ந்து நிற்கிறது. ஹைதராபாதிலிருந்து சிறிது தொலைவில் இருக்கிறது ஒரு காலத்தில் புகழும் திகழ்ந்த கோல்கொண்டா கோட்டை.

வானளாவிய பரிமாணமும், நுணுக்கமான வேலைப்பாடும் அமைந்த இந்தக் கோட்டை பார்க்க வேண்டிய இடம். அதே போல் அழகுக்கலை உணர்வுடன் வடிவமைக்கப்பட்ட குதுப் ஷாஹி சின்னங்கள். அங்கு குதுப் ஷாஹி மன்னர்களின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

சலார்ஜங் மியூசியம். உலகிலேயே தனி ஒரு மனிதரால் சேகரிக்கப்பட்ட விலை மதிப்பற்ற பொருள்களைக் கொண்டது. வானத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தும் பிர்லா வான மண்டலக் காட்சியகம்.



ஹைதராபாத்தைச் சுற்றிலும் 'பிக்னிக்' போக பல இடங்கள் இருக்கின்றன. ஹிமாயத் சாகர், உஸ்மான் சாகர், ஹுஸைன் சாகர் போன்ற ஏரிகள். படகு விடுதலுக்கும், நீர் விளையாட்டுக்களுக்கும் ஹுஸைன் சாகர் ஏரியில் வசதிகள் உள்ளன.


புகழ் பெற்ற மெக்கா மஸ்ஜித், பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட வெங்கடேஸ்வரா ஆலயம், உஸ்மானியா பல்கலைக் கழகம், மிருகக்காட்சி சாலை... பார்க்க வேண்டிய இடங்களுக்கு குறைவே இல்லை.



ஹைதராபாத்திற்கு வாருங்கள். மறக்க முடியாத ஒரு விடுமுறையை அனுபவியுங்கள்.

ஆந்திரப் பிரதேஷ் டூரிசம்,
1வது ஃப்ளோர், ககன் விஹார்,
எம்.ஜே. ரோடு,
ஹைதராபாத் 500 001.
டெலிபோன்கள்: 556493, 77192
70087, 233384, 233385

ஹைதராபாத் — பழைய உலக எழில் மற்றும் பாரம்பரிய உபசரிப்பின் ஒரு வசிகரக் கலவை



வட்டமேஜை

அழுகையும் சிரிப்பும்!

* 'மாட்டின் கண்ணில் எம்.ஜி. ஆர்' கட்டுரையின் கடைசி வரி வெடிச் சிரிப்பை உண்டாக்கியது.

திருச்சி—17, கே.' பாரி.

'மாட்டின் கண்ணில் எம்.ஜி. ஆர்' என்ற கட்டுரை மக்களின் முட்டாள்தனத்தை மூலதனமாக்கும் 'அறிவு ஜீவிகளுக்கு நம் நாட்டில் பஞ்சமே இல்லை என்பதற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டு. உணர்ச்சி பூர்வமான, தனி மனிதரின் துதி, மக்களின் அறிவை எந்த அளவுக்கு மழுங்க வைக்கிறது என்பதை நினைக்கும்போது உள்ளபடியே அழுகைதான் வருகிறது!

ஸ்ரீரங்கம், ஆர். எஸ். ராஜன்.

* கல்கி 19.10.86 இதழில் ''அழிக்கப்பட்டு வரும் அபூர்வ அணில்'' என்ற தலைப்பில் கே. இராமச்சந்திரன் என்பவர் எழுதிய கட்டுரையைப் பிரசுரித்துள்ளீர்கள். மேற்படி கட்டுரையில் குறிப்பிட்டுள்ள அணில்களின் எண்ணிக்கை வருடா வருடம் கூடிக் கொண்டேதான் வந்துள்ளது. சென்றவருடம் 100 இருந்தது. இந்த வருடக் கணக்கெடுப் பின்படி 175 அணில்கள் உள்ளன.

விருதுநகர், ச. பாநு,
மாவட்ட வன அலுவலர்.

* ஓட்டு வாங்கிச் சென்றவர்களே, தங்கள் தொகுதியில் உள்ள ஓட்டைகளை அடைக்க முன்வருவதில்லை... இந்நிலையில் கல்கி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முறைக்கிருமுறை சென்று சில நற்பணிகள் நடக்கக் காரணமாயிருப்பதை உண்மையிலேயே பாராட்ட வேண்டும்!

புதுவை—1. இ.எம். கோதண்டம்.

* தமிழீழம் ஒன்றையே உயிர் மூச்சாகக் கொண்ட புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரனின் விரிவான, விளக்கமான பதில்கள் எண்ணற்ற கருத்துக் குழப்பங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதாய் இருந்தன. இந்தப் பேட்டிக்கு முத்தாய்ப்பு வைப்பது போல் இருந்தது முகப்பை அலங்கரித்த வண்ணப் படம்!

திண்டுக்கல்—1, வே. சோமன்.

* இன்றைய சூடான செய்திகளின் பின்னணியில், அரசியல் தர்க்க ரீதியான கருத்தாழமிக்க கேள்விக் கணைகளோடு அந்தப் புலியைத் துளைத்தெடுத்து, களைத்துப் போகவும் செய்திருக்கிறீர்கள்; இந்தியாவின் நடவடிக்கைகளை, நியாய உணர்வோடு புறைமுகமாக பிரபாகரனுக்குச் சரியான கோணத்தில் உணர்த்தவும் முயன்றிருக்கிறீர்கள். நமது பண்பான ஆதரவையும் அனுசரணையோடு காட்டியும் விட்டீர்கள்.

தஞ்சை. கிருஷ்ணன்பாலா.

* அன்னிய நாட்டில் இருந்து கொண்டு தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழோசை சங்கர மூர்த்தியை கல்கி வெளிப்படுத்திய பாங்கு சிறப்புடையது.

குருவரெட்டியூர், நந்திவர்மன்.

* எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் பேட்டியைத் தங்கள் 14.12.86 பத்திரிகையில் சிறப்பாக வெளியிட்டமைக்கு நன்றி. அதே பேட்டிக்கிடையில் தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பற்றி ஒரு பெட்டிச் செய்தியையும் வெளியிட்டிருக்கிறீர்கள். அதில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் யாரும் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது என்ற ஒரு விதி எப்போதும் இருந்ததில்லை. ''இயக்க உறுப்பினர்கள் காதலினாலோ அன்றிக் குடும்ப பாசக் கட்டுப்பாடுகளினாலோ இயக்க நடவடிக்கைகளினின்றும் பின்வாங்கக் கூடாது. அப்படியே பின்வாங்கும் பட்சத்தில் அவர் இயக்கத்தை விட்டு நீக்கப்படுவார்'' என்ற விதிதான் இயக்கத்தில் இருந்தது; இருந்து வருகிறது. மூகுந்தன் தம் சகோதரி என இயக்கத்துக்கு அழைத்து வந்த ஊர்மிளாவுடன் முறைகேடாக நடந்தார் என்பதாலேயே இயக்க மத்தியக் குழு உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். பின்னர், மூகுந்தன் தாமாகவே இயக்கத்தை விட்டே விலகிச் சென்று தனி இயக்கம் தொடங்கினார். அதற்கு அப்புறம் அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்கும் நோக்குடன் செயற்பட்டதாலேயே பாண்டிபஜார் சண்டை ஏற்பட்டது. எனவே இயக்க விதிகளை மீறி எமது தலைவர் பிரபாகரன் திருமணம் செய்து கொண்டது போன்றும், பாண்டிபஜார் துப்பாக்கிச் சண்டையால்தான் மூகுந்தன் தனி இயக்கம் தொடங்கியது போன்றும் குறிப்பிட்டதில் எவ்வித உண்மையும் இல்லை.

அடுத்ததாக எமது இயக்கம் சாதி, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட அமைப்பாகும். தங்களது குறிப்பு எமது இயக்கத்தை ஒரு குறிப்பிட்ட சாதி இயக்கமாகச் சித்திரித்துச் சிறுமைப்படுத்துவதாக இருக்கிறது.

சென்னை, எஸ். சுப்பிரமணியன்,
அரசியல் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)

நமது சுற்றுப்புறச் சூழலுக்கு நவீன தொழில் நுணுக்கம் அடிக்கடி ஆபத்தாக விளங்கு கிற உலகத்தில், இயற்கை யின் தூய்மையைத் திறன்மிக்க தொழில் நுணுக்கம் கெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மதருஸ் ரி∴பைனரீஸ் லிமிடெட், அதன் தூய்மை கேடு குறைப்புத் திட்டத்தின் மூலம் நிரூபித்து வருகிறது.

ஆம். அதிகத் திறனுடன் இயங்கு வதற்காக புதிய தொழில் நுணுக்கங் களை புகுத்தும் அளவற்ற ஆர்வம் எம்.ஆர்.எல்லுக்கு உண்டு. இந்த எண்ணத்தைச் செயலாக மாற்றியும் வருகிறது. உதாரணமாக தொடர்ச்சியாக இயங்கும் ரசாயன ஆலை ஒன்றில் டிஸ்ட்ரிப்யூடட் டிஜிடல் கண்ட்ரோல் சிஸ்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக அமைத்துள்ள மிகப் பெரிய தொழிற்சாலை எம்.ஆர்.எல் தான். எம்.ஆர்.எல்லின் மிகச்சிறந்த முறையில் திட்டமிடப்பட்டுச் செயல்படும் உற்பத்தித் திட்டமானது இந்த எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நமது நாட்டிலேயே உற்பத்திச் செலவில் மிகக் குறைந்த அளவிற்கு வைத்திருக்கும் ஆலையாகத் திகழச் செய்கிறது.

ஆனால் நவீன தொழில் நுணுக்கத்தை நிர்ணயிக்கும் ஒரே அம்சம் உற்பத்தித் திறன் மட்டும் அல்ல. இயற்கை, எரிபொருள் சிக்கனம் ஆகிய விஷயங்களிலும் அதே அளவிற்கு எம்.ஆர்.எல். அக்கறை செலுத்தி வருகிறது.

எம்.ஆர்.எல்., அதன் விரிவாக்கம் செய்யப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தூய்மை கேடு கட்டுப்பாட்டுக்காக மிகவும் நவீன சாதனங்களை அமைத் துள்ளது. ஒரு ஸ்யூயர் பேசின், ஒரு ஏ.பி.ஐ. செபரேட்டர் க்ளாரிப் ப்ளாக்குலேட்டர், கிளாரிஃபையர் மற்றும் ஆக்ஸிடைசேஷன் பாண்ட் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஒரு விரிவான கழிவு நீர் சுத்தப்படுத்தும் இயந்திரச் சாதன அமைப்பு, வெளியாகும் கழிவு நீரை சுத்தப்படுத்தி அதன் தரத்தை சட்டபூர்வமான விதிகளுக்கு உட்பட்டு நல்லமுறையில் வைத்துள்ளது.

ஹைட்ரஜன் சல்பைடிலிருந்து கந்தகத் தாதுவைப் பிரித்தெடுக்க ஒரு கந்தக ஆலை, ஆவி ஆவதையும் தூய்மைக்கேடு அடைவதையும் குறைப்பதற்காக பெட்ரோலியப் பொருட்கள் சேமிக்கப்பட்டுள்ள தொட்டிகளுக்கு மிதவைக் குறைகள் அமைப்பு, ஹைட்ரோ கார்பன்கள் மற்றும் இதர வாயுக்களை கையாண்டு நிறுத்தி விடுவதற்கான வானளாவிய நவீன புகைக் கூண்டு ஆகியவை, சுவாசிப்பதை பாதிக்காத படி பார்த்துக் கொள்கின்றன. வாயுக்களால் அசுத்தமாக்கப்படும் அளவுகளைக் கண்டறிந்து தெரிவிப்பதற்காகத் தானாகவே தொடர்ந்து இயங்கும் திறன்மிக்க ஒரு கம்ப்யூட்டர் சாதனத்தை நிறுவுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

எம்.ஆர்.எல்லின் வருடாந்திர எரிபொருள் உபயோகம் வியக்கத் தகும்படி மிகக்குறைவாக அதாவது 7 சதவிகிதம் அளவில் உள்ளது. அதுதான் எம்.ஆர்.எல்லில் இயங்கும் நவீன தொழில் நுணுக்கம். இயற்கையை உபயோகப் படுத்தி இயற்கையைக் காத்திடும் செயல். ஏன் என்றால் இயற்கை தான் அதன் மிகப் பெரிய வளம்.

இன்று ஆபத்திற்கு உள்ளாகி இருப்பவைகள்: சுத்தமான காற்று, நீலவானம் மற்றும் தூய்மையான சுற்றுப்புறச் சூழல்.



எம்.ஆர்.எல். — நாட்டின் வளங்களை பெருக்க உதவும் நேசக்கரம்.

MRL

மதறுஸ் ரி∴பைனரீஸ் லிமிடெட்

480, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600 035.

SAA/MRL/3970

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper · Sri Lanka

